# காமகோடி ராமகோடி

**ரா.கணபதி**


## திவ்ய வித்யா ட்ரஸ்ட்

Plot No.6, No.22, ககில்கிரிஸ்ட் அவென்யு,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

2007

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடம்

காஞ்சீபுரம்

முகாம் - காஞ்சீபுரம் தேதி - 11.6.76

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்

# ஸ்ரீமுகம்

சென்னை வானதி பதிப்பகத்தார் மக்கள் சமய உணர்ச்சியுடன் வாழ்க்கை நடத்த உறுதுணையாக எளிய நடையில் பல நூல்களை வெளியிட்டு வருவது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இந்த வரிகையில் பகவந்நாம சித்தாந்தத்தை அனுசரித்து ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ போததேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் வரலாற்றையும் உபதேசங்களையும் ஸ்ரீ ரா.கணபதி அவர்கள் தொகுத்து எழுதிய "காமகோடி ராமகோடி" என்னும் நூலை வெளியிடவிருப்பதை அறிந்து ஸ்ரீ மஉறாஸந்நிதானத்தில் சந்தோஷிக்கிறார்கள்.

பக்த கோடிகள் அனைவரும் இந்நூலைப் படித்து எல்லாவித நன்மைகளையும் அடையுமாறு ஆசீர்வதிக்கிறார்கள்.

ஸ்ரீ நாராயண ஸ்ம்ருதி

காமாகக்ஷி ராம இவ தே கருணா கடாக்ஷ:|

(மூக பஞ்சசதீ 4.18)

(காமாக்ஷி! ராமனைப் போன்ற நினது கருணைக் கடைக்கண்)

*ராமபிரானுக்கும் அன்னையின் கடாக்ஷத்திற்கும் பொதுமை காட்டும் இருசொல் அலங்கார சுலோகம்.

காமகோடி ஸாம்ராஜ்யத்தின் நாள்கோடிகளிலும்
ராம நாமத்தைக் கோடி கோடியாகப் பரப்பிய மஉறாபுருஷர் ஸ்ரீமத்
பகவந்நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

யஸ்ய ஸ்மரண மாத்ரேண நாம பக்தி: ப்ராஜாயதே!
தம் நமாமி யதி ஸ்ரேஷ்டம் போதேந்த்ரம் ஜகதாம் குரும்||

எவரை ஸ்மரித்த மாத்திரத்தில் திவ்ய நாமங்களில் பக்தி சிறப்புறப் பிறக்கிறதோ, அந்தத் துறவி வேந்தரும் ஜகத் குருவுமான போதேந்திரரரை வணங்குகிறேன்.

ஓம்

ஞானத்தின் பூரணமாம்,

கருணையின் நிறைவாம்

காமகோடித் தாயின்

கண் கண்ட வடிவமும் ;

ஒவ்வொரு மூச்சிலும் ஸத்யத்தை,

ஒவ்வொரு நாடித் துடிப்பிலும் தர்மத்தை

வாழ்ந்த

ஸ்ரீராம சந்திரப் பிரபுவின்

பிரத்யக்ஷப் பிரதியுருவம் ;

இச் சரித நாவாயை நயமுறச் செலுத்திய

நளிர் பூங்காற்றும்

ஆகிய

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஉறா பெரியவர்களின்

தேனார் திருவடிகளில்

ஊனார உயிரார

ஸமர்ப்பணம்

# பொருளடக்கம்

1 கங்கை ................ 5

2. நர்மதை ................19

3 மஹேறாததி ................36

4 சந்தன தடாகம் ................54

5 ஸர்வ தீர்த்தம் ................65

6 கோடி தீர்த்தம் ................98

7 காவேரி ...............132

## முதற் பதிப்பின் முன்னுரை

இதை நான் எழுதினேன் என்று சொல்வதைவிட, இதை என்னால் எழுதாமலிருக்க முடியவில்லை என்பதே உண்மை. எதுவோ ஒன்று இதிலே என் கழுத்தைப் பிடித்துத் தள்ளியது சென்ற (1975) மார்ச் மாதத்தில்.

அப்போது ஸ்ரீராம நவமிச் சிறப்பு மலர் வெளியிடும் ஒரு ஸமாஜத்தினர் என்னிடம் விஷயதானம் கேட்டனர். "என்னால் இப்போது போதேந்திராளைப் பற்றித்தான் எழுத முடியும். அது எவ்வளவு நீளம் போகுமோ எனக்கே தெரியாது. நான் எழுதுகிறபடி எழுதிதருகிறேன். உங்கள் ஸஞ்சிகையில் எவ்வளவுக்கு இடம் கொடுக்க முடிகிறதோ, அவ்வளவை மட்டும் பிரசுரித்துக் கொள்ளுங்கள்" என்றேன். எனக்கே நான் சொன்னது விசித்திரமாக இருந்தது ! ஆனால் ஸமாஜத்தினருக்கு விசித்திரமாக இல்லை. "அப்படியே செய்கிறோம்" என்றனர்.

எழுதத் தொடங்கினேன். அது பாட்டுக்குப் போய் கொண்டேயிருந்தது. ஆம், பரம அநுகூலமான காற்றிலே பாய்மரத்தை விரித்துக் கொண்டு உறாய்யாக எழுதினேன். கலவையிலிருந்துதான் இப்பேர்ப்பட்டதொரு தென்றல் வீசமுடியும் ! அதன் காரணமற்ற ஸௌக்கிய வீச்சை முன்பும் உணர்ந்திருக்கிறேன். ஆனால் இப்போது போல் அதன் இடைவிடா இயக்கத்தை என்றுமே கண்டதில்லை.

@ Page 2

நான் எழுதிப் போட்ட கத்தையில் ஏறத்தாழ ஐந்திலொரு பகுதியை மட்டும் ஸமாஜத்தினர் சிறப்பு மலரில் வெளியிட்டனர். இதை அரைகுறை வேலை என்று எவரும் சிரிக்காமல், அந்தப் பகுதிக்குள்ளேயே ஒரு தன்னிறைவு இருந்ததாகக் கூறியது இன்னொரு விசித்திரம்.

* * *

ஒரு வருஷத்துக்கு மேல் ஓடி விட்டது.

இவ்வாண்டு சங்கர ஜயந்தியை அடுத்து (1976 மே மத்தியில்) மறுபடி ஓர் ஆவேசயம் வந்தது.

முன்பு எழுதாமலிருக்க முடியவில்லை என்று ஆனாற்போலவே, இப்போது இவ்வரலாற்றை முழுதுமாகப் பிரசுரிக்காமலிருப்பதற்கில்லை என்று வேகம் கிளம்பிற்று, இது நூலுருவம் பெற்று, ஸ்ரீ மஉறா பெரியவாளுக்கு ஜயந்திக் காணிக்கையாகிவிட வேண்டுமென்ற ஆர்வம் மூண்டது.

முன்பு எழுதிப்போட்டதில் மேலும் பல பகுதிகள் சேர்ந்தன. ஸ்ரீமடத்தின் வம்சாவளிக் குறிப்புக்களும், செவி வழிச் செய்திகளும் 'காந்தா ஸம்மிதை' என்பதற்கிசைந்த இலக்கிய சுதந்திரத்துடன் புதிய தாளிப்பைப் பெற்றன. மீண்டும் சொல்கிறேன். அநேக இடங்களில், நான் தாளித்தேன் என்பதைவிட அதுவேதான் தாளித்துக் கொண்டது. இப்படி உருவான உயிர் கொண்ட வாழ்வோடு, இப்போது ஸித்தாந்தச் சிறப்புக்களையும் சேர்த்தேன். இயல்பான படகோட்டத்துக்கு இது சற்று

இடையூறாகத்தான் இருந்தது. எனினும் அனுபவ மயமானதை அப்படியே கிரகித்துக் கொள்ள முடியாதவர்களுக்காக இந்த அறிவு விளக்கமும்

@ Page 3

சேர்க்கும்படி ஆயிற்று. 'ஸிரப்'பை அப்படியே கொடுத்தால் போத மாட்டேன் என்கிறதே! பாட்டில்மேல் நீள நெடுக ஃபார்முலாவும் கொடுக்கத்தானே வேண்டியிருக்கிறது ? நூல் நூறு பக்கங்களுக்கு மேல் ஓடும் என்று தோன்றியது. நான்கே வார இடைவெளியில் எப்படி இதை அச்சிட்டு நூலை உருவாக்குவது ? சமயம் பார்த்து வானதி பதிப்பாளர் ஸ்ரீ திருநாவுக்கரசு அவர்களும் ஊரில் இல்லையே!

மறுவாரம் சென்னைக்குத் திரும்பிய திருநாவுக்கரசுவிடம் "மூன்றே வார இடைவெளியில் ஒரு சிறிய புஸ்தகம் தயாரிக்க இயலுமா ?" என்றேன், ஏமாறத்தயாராக.

அந்த அசகாயசூரரோ, "மூன்று வாரம் எதற்கு ? இரண்டே வாரத்தில் புஸ்தகம் கொண்டு வந்துவிடலாம். பெரியவாள் இருக்கிறார்!" என்று ஒரு போடு போட்டார்! நிஜமாக நம்பினார், நம்பினோர் கெடுவதில்லைதான்!

என்னுடைய அவசரத்துக்கும், அவரது ஆர்வத்துக்கும் மெட்ரோபாலிடன் அச்சகத்தார் அற்புதமாக ஈடு கொடுத்து புத்தகத்தைக் கொண்டு வந்துவிட்டனர்; ஓவியர் வினுவும் வண்ண மேலட்டையை நாலே நாளில் கொடுத்துவிட்டார். ஏதோ ஒரு சங்கற்பத்தில் வேளையும் காலமும் நிர்மிக்கப்பட்டு விட்டால் பணி நிறைவுறக் கேட்பானேன் ?

அன்பர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரத்தின் நன்முயற்சியில் உறிந்து தர்ம மன்றத்தினர் கொண்டாடும் ஸ்ரீபெரியவர்கள் ஜயந்தி விழாவில் இந்நூல் ஆஸ்திகப் பெருமக்களுக்கு

@Page 4

அர்ப்பணமாகிறது. ஸ்ரீ சந்திரசேகரேந்திரருக்கு ஸமர்ப்பணமாகும் நூல், ரஸிக சிரேஷ்டரும் என்னோடு இழையும் இதயத்தவருமான ஸ்ரீ கி.சந்திரசேகரன் அவர்களால் அறிமுகப்படுத்தப் பெறுவதும் அரிய பொருத்தந்தான். அவருக்கும்,

இந்நூலில் விரியும் அநேக விஷயங்களை ஆராய்ந்து வெளியிட்ட ஸ்ரீ நா.ரகுநாத அய்யரவர்களுக்கும், டாக்டர்.வே.ராகவன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கருணையின் உந்தலில் எழுதியது என்கிற பிரம்மாஸ்திரத்தைப் போட்டு, இந்த நூரில் யாரும் எந்தக் குறையும் காணக்கூடாது என்று நிர்ப்பந்திக்கிறேனா ? இல்லை. கருணை உட்புகுந்து ஊக்கியும் இதிலே என்பிரத்யேகக் குறைகள் இல்லாமற் போகவில்லை என நன்கு உணர்கிறேன்.

மழையில்லாததால் ஒரு பெங்களூரா மாமரத்தின் பழங்கள் பக்குவம் பெறாது வாடுகின்றன. மழை அடித்துப் பெய்கிறது. மரத்தில் ஜீவ சாரமாக உட் புகுந்து, அதனை இயக்கிப் பழத்திலே புஷ்டியை, மதுரத்தை ஊட்டுகிறது. வாஸ்தவந்தான், ஆனாலும் என்னதான் செம்மையாகக் கனிந்தாலும் பெங்களூரா பெங்களூராவாகத்தான் இருக்க முடியுமே தவிர, மல்கோவாவாகி விடுமா ?

சென்னை – 53
10.6.1976 ரா.கணபதி

@ Page 5

1
## கங்கை

கங்கை வெண்மையாக, தண்மையாக ஓடிக்கொண்டிருந்தாள்.

அதே வெண்மையோடு, தண்மையோடு கங்கைக் கரையில் அமர்ந்திருந்தார் யதீச்வரர்.

ஒரு வித்தியாசம். இவர் பிரசாந்த நிலையில் இதமாக அடங்கிப் பிரகாசித்துக் கொண்டிருந்தார். கங்காதேவியோ கொந்தளித்து ஓடிக்கொண்டிருந்தாள்.

கொந்தளிப்பின் உருவமாக ஒரு யுவன். அழகான யுவன். வாட்டமுற்றுக் களைத்த நிலையிலும் வாட்ட சாட்டம் குன்றாத யுவன்.

யதீச்வரரின் முன் தன்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறான். முடியவில்லை. தள்ளாடுகிறான்.

கொந்தளிக்கும் கங்கையில் விழுந்து, தன் கொந்தளிப்பை முழுக்கிக் கொள்ள வேண்டும் என்பது இவனுடைய சங்கற்பம்.

யதீச்வரரிடமும் இதைத் தெரிவித்து விட்டான்.

இவனாகவா சொன்னான்? தாயினும் இனிய அந்த தயாமூர்த்தியிடம் தானாகவே இவனது இதயம் திறந்து கொண்டு பேசி விட்டது!

"கங்கையில் விழுந்து சாகப் போகிறேன்" என்று இவன் ஒரே உணர்ச்சி மோதலில் கூவினான்.

@Page 6

அவரோ மிருதுவிலும் மிருதுவாக, "பேஷான காரியம். கங்கையில் மரிப்பது அமரம்தான். அதுவும் இந்தக் காசியில் சாவது அதி விசேஷம். ஆனால் இந்த அதி விசேஷச் சாவை ஒரு முறை செத்தால் போதுமா ? இன்னும் ரொம்ப, ரொம்ப..ப வருஷங்கள் நீ இப்படிச் செத்துப் போய்க் கொண்டே இருக்க வேண்டும். நீ போகிற இடத்தையெல்லாம் கங்கையாக, காசியாக ஆக்கிக் கொண்டிருக்க வேண்டும். இதுதான் என் ஆசீர்வாதம். என் ஆசி என்றால் என்ன? அம்பாள் காமகோடியின் ஆக்ஞை என்று அர்த்தம்" என்றார்.

புதிராகப் பேசினார். புதிரிலும் புதிராகப் புன்னகை பூத்தார்.

புன்னகைக் கீற்று உள்ளே அடங்கிற்று. பிரசாந்த கம்பீரமாக அமர்ந்துவிட்டார். எதிரே பிரசண்ட மாருதமாக நிற்கிறான் வாலிபன்.

தொந்தமற்ற ஆத்மா அவரை அமைதி ஸ்வரூபமாக அமர்த்தியிருக்கிறது. தொந்த பாசம் அவனை கங்கையில் விழுமளவுக்கு நுந்தித் தள்ளி அலைக்கழிக்கிறது!

ஆஉறா! எத்தனை இனிய தொந்தம், புதின பந்தம் பகற்கனவாக உதிர்ந்தே போய்விட்டது! புருஷோத்தமனுக்கும் ஞானஸாகரனுக்கும் இடையே நிலவிய சொந்தம் ராம–லஷ்மணர்கள் கூடப் பொறாமைப் படத்தக்கதல்லவா?

அந்த இருவரையும் ஆதியில் அப்படிக் கட்டிப் போட்ட அதே யதீச்வரர்தான் இப்போது இத்தனை விட்டேற்றியாகப் பேசுகிறார்.

@ Page 7

'விட்டேற்றி'தானா? மகான்களை யாரே ஆழம் காண முடியும்? அவர்கள் அனைத்தையும் விட்டவர்கள் ; அதே போதில் அனைத்திடமும் ஒட்டிக் கொண்டு இருப்பவர்கள். ஒரே சமயத்தில் ஒட்டியும் விலகியும் இருப்பவர்கள். மற்றவர்களையும் ஒட்ட வேண்டிய காலத்தில் ஒட்டிவைப்பார்கள் ; வெட்ட வேண்டிய தருணத்தில் வெட்டிப் போடுவார்கள்.

புருஷோத்தமனை ஞான ஸாகரனோடு ஒட்டி வைக்க வேண்டிய காலம் ஒன்று இருந்தது.

அப்போது யதீச்வரர் காஞ்சீபுரத்தில் மையமான மடத்திலேயே இருந்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் எவரும் அங்குதானே பெரும்பாலும் இருப்பர்? இதன்படி நம் யதீச்வரரும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் ஸ்தாபித்த அந்த மகாபீடத்தின் ஐம்பத்தெட்டாவது அதிபராகப் பதினாறாம் நூற்றாண்டு முடிவில் ஞானாட்சி ஏற்றுக் காஞ்சியிலிருந்து கொண்டு தர்மம் பாலித்து வந்தார்.

@Page 8

ஆத்ம போதேந்திர ஸரஸ்வதி என்பது அவரது சந்நியாசத் திருநாமம். தராசின் ஒரு தட்டில் இவரை வைத்து, எதிர்த்தட்டில் விசுவம் முழுவதையும் வைத்தால் இவரது எடையே அதிகமாக இருக்கும் என்று அடியார்கள் கொண்டாடும் அளவுக்கு பக்தி, ஞானம், கல்வி, கருணை எல்லாவற்றிலும் இவர் பெரியவராக விளங்கினார். விசுவத்தையே விஞ்சிய மாண்பினர் என்பதால் வித்வான்கள் இவரை 'விச்வாதிகர்' என்றே குறிப்பிடுவார்கள்.

பரமேசுவர ஸ்வரூபமாகவே பக்தருக்குத் தெரிந்த பரஞான மூர்த்தி அவர். ஆயினும் பணிவில் அடங்கிப் பரமேசனின் பரம பக்தராகவே தம்மைக் காட்டிக் கொண்டார். ஸ்ரீமடத்தின் தெய்வமான ஸ்ரீ யோக சந்திரமௌலீச்வரனுக்கு ருத்ராபிஷேகமும், ருத்ர த்ரிசதி அர்ச்சனையும் செய்து செய்து களிப்பார். அவரது நா எப்போதும் ஸ்ரீருத்ரத்தை ஜபித்த வண்ணம் இருக்கும்.

நாயிலிருந்து நாயாடியிலிருந்து சகலத்தையும் சகலரையும் ஈச்வர ஸ்வரூபமாகக் காட்டிக் கொடுப்பது ஸ்ரீருத்ரம். இந்த அத்வைத பாவம் ஞானமயமானது மட்டுமல்ல. ஞானத்தின் ஒளியோடு அதிலே பக்தியின் குளிச்சியும் உள்ளோடும்; அத்வைத

கம்பீரமும் த்வைதத்தின் குழைவும் அற்புதமாகக் கலக்கும் சங்கமம் அது.

நமது விச்வாதிகர் 'ஆத்மபோதர்' என்ற பெயருக்கேற்ப அகண்டமான ஏக ஆத்மாவைப் பிரத்தியக்ஷத்தில் அநுபவித்தவர்தாம். எனினும் அந்த அகண்ட ஏகமே கண்டம் கண்டமாகப் பிரிந்து, பிரபஞ்சமாகிச் செய்கிற லீலையையும் ரஸித்தார். முதலில்

@ Page 9

உமையாகவும் பஞ்சாக்ஷரனாகவும் பிரிந்த ஏகம், பிரிந்து பிரிந்து நாய்வரை, நாயாடிவரை தரித்துக் கொண்ட சகல வேஷங்களையும் கண்டு வியந்தவர் அவர். ஞான நிலையில் ஏகமாகி சாந்த ஆனந்தத்தை அநுபவித்தார். பக்தி நிலையில், அதே ஏகம் பல பலவாகிற லீலானந்தத்தை ரஸித்தார். லீலை செய்யும் அச்சக்தியிடம் பக்தியைப் பொழிந்து பிரேமானந்தத்தில் திளைத்தார். ஒரு நிலையில் மாயையாக வெட்டித் தள்ள வேண்டிய சராசரத்தையே இன்னொரு நிலையில் சிவ லீலையாக ஓட்டிக் கொடுக்கும் ஸ்ரீருத்ரத்துக்கு பாஷ்யமும் இயற்றினார்.

மக்களுக்கு ஆண்டவன் என்ற மஹாசக்தியைக் காட்டிக் கொடுத்து, அவனிடம் அவர்களை அன்பில் கட்டிப் போட்டால் போதும். அவனே அவர்களுக்கு அத்வைத ஞானத்தை அருளி விடுவான் என்றே விச்வாதிகள் எண்ணியிருக்க வேண்டும். புரிபடாத அத்வைதத்தைப் புரிபடும் இறைவனாகக் காட்டி பக்தியை வளர்க்கவே அவர் முனைந்தார்.

ஒரு குறிப்பிட்ட யோக்கியதையுள்ளவரிடம்தான் ஞானம், அத்வைதம், நிர்குணம் என்ற வார்த்தைகளையே சொல்லமுடிகிறது. ஆனால் பச்சைக் குழந்தையிடம் கூட அன்புருவான ஓர் ஆண்டவனைப் பற்றிக் கூற முடிகிறது. அவனிடம் அக் குழந்தை அன்பாக இருக்குமாறு செய்ய முடிகிறது. இது போதுமே! இதன்பின் அந்தப் பேரன்பனே தன் அடியாருக்கு அத்வைதத்தை அருளிவிட்டுப் போகிறான்!

ஒரே சத்தியந்தான் இத்தனை சராசங்களாகியிருக்கிறது என்ற அத்வைதப் பின்னணியில் பக்தி மார்க்கத்தைக் கைக்கொண்டிருந்தார், நமது விச்வாதிக ஆத்மபோதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

@ Page 10

ஆதி சங்கரர் பரம அத்வைதியாயினும் தமது மடங்களில் பக்தி மயமான பூஜைக்கு

முக்கியமான இடம் தந்ததால், ஞானாசாரியர்கள் பக்தி மார்க்கத்தை எடுத்தியம்புவதில் அதிக சிரமம் இருக்கவில்லை. இருந்தாலுங்கூட சம்பிரதாயமான அத்வைத சாஸ்திரங்களில் 'ஞானமே மோக்ஷத்துக்கு நேர் சாதனம் ; பக்தி என்பது அந்த ஞானத்துக்கு சாதகனைப் பக்குவப்படுத்தும் ஆரம்பப் படிவரிசைதான் ; அது மந்த அதிகாரிகளை உத்தேசித்தே இருப்பது' என்று கூறப்படுவதால், பக்தி மார்க்கத்தை மிகவும் வலியுறுத்தி எடுத்தோதிப் பிரகடனம் செய்வதற்கு ஓரளவு தடையும் இருக்கத்தான் செய்தது.

நீண்ட நெடுங்காலமாக பக்தியை ஓர் இடைநிலை சாதனமாக மட்டுமே மதித்து வந்த ஸ்ரீமடத்தில், பக்தியிலேயே ஒரு விசித்திரமான முக்தி இன்பத்தைக் கண்ட விச்வாதிகர் அதிபராக இருந்தபோது அவருக்குள் ஒரு பிரச்னை ஏற்பட்டிக்க வேண்டும்.

பக்தி மார்க்கத்திலேயே பல துறைகள் உண்டு. கடினமான பலவித அப்பியாசங்கள், தவ விரதங்கள், சடங்குகள் ஆகியனவும் உண்டு. விச்வாதிகருக்கோ இந்தக் கடினமான ஆசரணை எதுவும் அவ்வளவாகத் தேவைப் படவில்லை. பெரும்பாலும் சிவ நாமாக்களையே கொண்ட ஸ்ரீருத்ரத்தை ருசித்து ஓதுவதே அவருக்குப் போரானந்தத்துக்குப் பெருவழியாகப்பட்டது. பகவன் நாமத்தைச் சுவைத்துச் சுவைத்துச் சொல்கிற மிக எளிய, பரம மதுர வழியினாலேயே சத்திய தத்துவத்தை எய்தி விடலாம் என அவர் கண்டார். 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதாக இந்த

@Page 11

நாமஸித்தாந்தத்தை நானிலத்துக்கெல்லாம் வழங்கவும் அந்த அருளாளர் அவாவுற்றுத்தான் இருப்பார்.

ஆயினும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார். அந்தக் கட்டுப்பாடே ஒரு பெரிய தியாகமாகும். 'பிராசீனமாக ஸ்ரீசங்கரமடங்கள் குறிப்பிட்ட சில தத்துவங்களை ஓதி வந்திருக்கின்றன. அவற்றில் 'தான் யார்' என்று ஆராயும் ஞான விசாரமே மையமானது. ஜீவனும் பிரம்மமும் ஒன்றே எனும் உபநிஷத மஉறாவாக்கியங்களை குருமுகமாக உபதேசம் பெற்று (சிரவணம்), மனத்தான் எப்போதும் ஆராய்ந்து (மனனம்) மனோதீத நிலையில் அந்த ஒன்றுபட்ட நிலையிலேயே தியானத்தால் திளைத்திருப்பது (நிதித்யாஸனம்) தான் ஸ்ரீசங்கரர் மரபுப்படி வந்த மைய சாதனை. பக்தி இரண்டாம் பட்சமானதே. பக்தியில்கூட பூஜை, மந்திர சாதனை இவைதான் சிறப்பித்துக் கூறப்பட்டனவேயன்றி நாம சித்தாந்தம் அல்ல. ஞானத்துக்கே

முதலிடமளித்து ஸ்ரீமடம் கூறி வந்த சிரவண, மனன, நிதித்யாஸனங்களால் நிச்சயமாக சாதகர்கள் கடைத்தேற முடியும். அப்படியிருக்கும்போது, அந்த சம்பிரதாயத்தோடு உரசுவது போன்ற ஒரு புரட்சியைத் தாம் செய்யலாமா? என்றே தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார் போலிருக்கிறது.

'திடுமென ஒரு கொள்கையை அவிழ்த்து விட்டால் அது புரட்சியாகத்தான் தோன்றும். எதிர்கொள்கை என்பதாக அது இன்னொன்றைக் குறிப்பிட்டுத் தாக்காவிட்டாலும் கூட, அதன் திடீர் வேகத்தினாலேயே தாக்குதல் ஏற்பட்டதாகத்தான் தோன்றும். இதற்குத் தாம் இடம் கொடுக்கவே கூடாது. நாமமே சத்திய சாக்ஷாத்

@ Page 12

காரத்துக்குக் கொண்டுவிடும் என்று காட்டுவது தான் தமது லக்ஷியமே ஒழிய, சம்பிரதாயமான அத்வைத மார்க்கம் சாக்ஷாத்காரம் தராது என்ற எண்ணத்தை லவலேசங்கூட ஏற்படுத்துவது அல்ல. ஆனால் ஞானத்தால் தான் அத்வைதம் என்றே வித்வத் ஸதஸ்களின் மூலம் இந்த மடம் முடிபாக ஓதிவருகிற இன்றைய நிலையில் நாமமே போதும் என்று பிரசாரம் செய்யத் தொடங்கினால், இந்தத் தலைமுறை அத்வைத பண்டிதர்கள் அதை சம்பிரதாய விரோதமாகவே நினைப்பார்கள். பொது ஜனங்களுங்கூட மிகப் பெரிய லக்ஷியமான மோக்ஷத்தை இவ்வளவு சுலபமான நாம ஜபத்தால் எப்படிப் பெறமுடியும் என்று அவநம்பிக்கைதான் கொள்ளுவார்கள். மனித சுபாவம் அப்படி! பெரிய லட்சயம் எனில் அதற்குக் கடினமான உபாயம்தான் வேண்டும் என்றே எண்ணத் தோன்றும்.

'எனவே நாமத்தின் மகாசக்தி வெளிப்படும்படியான நிகழ்ச்சிகள் மக்கள் அறியுமாறு நடக்க வேண்டும், நடக்கும், நடக்கும், பராசக்தி நடத்திக் கொடுப்பாள். நீண்ட கால மரபுடன் மோதாமல், நயமாக, நாசூக்காக நாம மகிமையை ஒளிரச் செய்வாள். அதற்கு இன்னொரு தலைமுறைக்காலம் பிடிக்கும். எனவே இன்றைய பண்டிதர்களிடம் எதிர்ப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டாம். மடத்து மரபை மாற்றிப் புரட்சி செய்ததாகவும் காட்ட வேண்டாம். பக்குவமாக, பதமாக, இதமாக அடுத்த தலைமுறையை மட்டுமே புதிய வழிக்குத் தயார் செய்யலாம். அம்பிகையின் கிருபையை நம்பி நாம் நிலத்தைக் கிளறி மட்டும் விட்டால் போதும் ; விதை ஊன்ற வேண்டியவரை உரிய தருணத்தில் அவளே அனுப்பி வைப்பாள்.'

@Page 13

விச்வாதிகரின் இந்த எண்ணத்துக்குத் தேவி காமகோடி உரமூட்டி, தன் திவ்விய

சங்கற்பத்தை அவருக்குப் புலர்வித்தாள்.

"அம்மா காமகோடீ! காமமனைத்தும் முடியும் கோடி நிலமான அத்வைத மோக்ஷமே நீ. ஆனால் ஆசையை அறுக்க முடியாதவர்களுக்காக நீயே ஆசைப்படவைக்கும் திவ்விய ரூபங்களாக வருகிறாய் ; திருநாமங்களாகவும் வருகிறாய். குறிப்பாக, சொல்கிற நா அமுதென ரமிக்கும் வண்ணம். பிரணவ துல்லியமான ஸ்ரீ ராமநாமமாக வருகிறாய். அடுத்த தலைமுறையில் இந்தக் காமகோடியை ராமகோடியாக்கத் திருவுளம் பற்றிவிட்டாய். இப்பணிக்கு இப்போதே என்னை அங்குரார்ப்பணம் செய்யத் தூண்டி விடுகிறாய். அங்குரங்களாக, முளைத்த முளைகளாக இந்த மடத்துக்கு வருகிற குழந்தைகளிடம் நாம ருசியை ஊட்டத் தொடங்குகிறேன். தாயே! அந்தக் கீழ்க்கன்றில் ஒன்று இந்தக் காமகோடி பீடத்தின் அதிபதியாகி, ஆல விருக்ஷமாகி நாம விழுதுகளை நாடெங்கும் பரப்பட்டும் ; உன் தித்திக்கும் திட்டத்துக்குக் கருவியாகட்டும்."

விசுவாதிகர் மரபினிடம் உள்ள மரியாதை காரணமாக "சேரவாரும் ஜகத்தீரே" என்று அனைவரடனும் நாமாமுதத்தைக் கலந்துண்ணும் களிப்புக்கு அணைபோட்டுத் தடுத்துக் கொண்டார் ; தேவியதன் சங்கற்பப்படி சின்னஞ்சிறாருடன் மட்டும் சேர்ந்து, அற்புதமான நாமாமுதக் கூட்டாஞ்சோற்றை உண்டார்.

குழந்தைகள் வந்து அவரை அன்போடு மொய்த்துக்கொள்ளும். கற்கண்டு கொடுப்பார். கூடவே

@Page 14

நாமத்தையும் கொடுப்பார். "ராம ராம சொல்லு" என்று பரிவோடு சொல்லுவார்.

"டாம டாம" என்று திருப்பிச் சொல்லும் குழந்தை.

குழந்தையாகிக் குதூகலிப்பார் குருநாதர்.

"பெரியவாள் பரம சாம்பவாள் ஆச்சே, சிவநாமம். சொல்லாமல் ராம நாமம் சொல்கிறீர்களே! என்று யாரேனும் கேட்டால், 'எல்லாம் ஒன்றுதானே? ருசி பேதத்துக்காகக் கொஞ்சம் வேறு வேறு மாதிரி வைத்துக் கொண்டாலும், சிவனே ராமன் பெயரைத்தானே ஸதாகாலமும் சொல்லி ஆனந்திக்கிறான் ? ஸதா ராமனைச் சொல்வதால் தான் அவர் ஸதாசிவமாக இருக்கிறான். ஸதாசிவோம். ஸதாசிவோம், ஸதாசிவோ....ம்" என்று தீர்க்கமாக உணர்ந்து கூறுவார். அந்த ஓங்காரத்திலேயே

அமிழ்ந்து அமைதி வானாகி விடுவார்.

வெளிப் பிரக்ஞை வந்தவுடன் குழந்தைகளோடு கும்மாளம் : 'ராம ராம – டாம டாம'.

அந்தக் குழந்தைகளில் அநாதை ஒன்று வந்து சேர்ந்தது. பிறந்த நாலைந்து மாதத்திலேயே பெற்றோரை இழந்த அக் குழந்தையை உறவினர் எவரோ ஆத்மபோதரின் பாதத்தில் போட்டனர். கருணையில் உருகிய ஸ்வாமிகள், ஸ்ரீமடத்தில் கைங்கரியம் செய்யும் ஒரு தம்பதியரின் பராமரிப்பில் குழந்தையை விட்டார்.

தினமும் இருபோதும் வளர்ப்புப் பெற்றோர் அப்பாலனை ஸ்வாமிகளிடம் கொண்டு விடுவார்கள். எத்தனை அலுவல் இருப்பினும், அவற்றை ஒதுக்கிவிட்டு அவர் அதனோடு ஒரு நாழிகையாவது விளையாடுவார்.

@Page 15

'ங்கு' சொல்கிற காலத்திலேயே ராம நாம அப்பியாசம்! அவரைக் கண்டாலே அந்தக் குழந்தைக்கும் ஒரு குஷி!

'இந்தக் குழந்தைதான் இந்த மடத்தின் அடுத்த பட்டம் என்று எல்லோருக்கும் ஊனம்' என்று ஒரு நாள் வளர்ப்புத் தந்தை ஸ்வாமிகளிடம் கூறினார்.

ஏதோ ஸ்வாமிகளின் முகம் உணர்ச்சியற்ற சிலையாக மாறியது.

சிறிது நேரம் சென்றது.

மெல்ல, "இவனுக்கு ஞான ஸாகரன் என்றுதானே பெயர் வைத்தேன்? இப்போது மடத்துக்குத் தேவை ஒரு நாம ஸாகரன். அம்மா அனுப்புவா! " என்று முணமுணத்தார்.

சரியாக அதே சமயம் ஒரு பக்த தம்பதியர் அவரை வணங்கி எழுந்தனர்.

ஸ்வாமிகளின் இதழ்களில் நகை மின்னிட்டது. 'இவ்வளவு சட்டென்று அனுப்பிவிட்டாளே! ' என்ற மகிழ்ச்சியா ?

அந்தத் தம்பதி மஉறாராஷ்டிர எல்லையிலிருந்து தமிழகத்துக்கு வந்து

குடியேறியவர்களைச் சேர்ந்தவர்கள். இவர்களது முன்னோர்கள் தமிழ்நாட்டு பிராமணர்கள்தாம். பிறகு மராட்டிய தேசத்துக்குப் பெயர்ந்தார்கள். ஆனாலும் பூர்வத்தில் தமிழர் என்பதால் 'த்ராவிட்' என்ற அடைமொழி இவர்களுக்கு ஒட்டிக் கொண்டது. காலக்கிரமத்தில் மராட்டியரோடு ஒன்றி விட்டனர். சமீபத்தில் சிவாஜியின் தகப்பனாரான ஷாஉறஜி ஓரளவுக்கு பீஜப்பூர் சுல்தானிடமிருந்து பிய்த்துக் கொண்டு ஏறக்குறைய சுதந்திரமாகவே செஞ்சியிலும், தஞ்சையிலும் ராஜ்யம்

@ Page 16

ஸ்தாபித்து வந்ததையொட்டி, 'த்ராவிட்'களில் பலர் தமிழ்நாட்டை நாடினர். அவர்கள் உறரிகதைப் பத்ததியையும், குத்துவிளக்கில் பாண்டுரங்கனை ஆவாஉறனம் செய்து நாமாவளி சங்கீர்த்தனம் செய்யும் சம்பிரதாயத்தையும் தங்களோடு கொண்டு வந்தனர்.

அவர்களோடு மட்டும் இருந்த இச்செல்வம் இத்தமிழகத்தில் அனைவருக்கும் உரித்தாக வேண்டும் என்பதல்லவா திவ்ய சங்கற்பம்? அதனால்தான் இத்தம்பதி ஆத்மபோதரை ஆசிரயித்தனர்.

அவர்களில் கணவர், கேசவ பாண்டுரங்க யோகி ; மனைவி ஸுகுணா பாய்*

காஞ்சீபுரத்தின் மண்டனமிச்ர அக்ரஉறாரத்தில் வீடு அமர்த்திக் கொண்டிருக்கிறார்களாம்!

'அதுவும் பொருத்தந்தான்' என்று உள்ளூர எண்ணிக் கொண்டார் ஸ்வாமிகள். மண்டனமிச்ரர்தான் பிறகு ஆதிசங்கரரின் அத்தியந்த சீடரான ஸுரேச்வரராகி இதே காமகோடி பீடத்தில் சங்கரரை அடுத்து ஞானாதிபத்தியம் வகித்தவர் என்பதாக நீண்டகாலக் கருத்து உள்ளது.

நாமஸாகரனுக்காகக் காத்துக் கொண்டிருந்த ஆசாரியருக்கு முன் அத் தம்பதியர் நாமாவளிகளை கானம் செய்து பரவசமூட்டினர்.

---

*கேசவ பாண்டுரங்க யோகி, ஸுகுணா பாய் என்ற பெயர்களே மஉறாராஷ்டிர தேசத்தைச் சார்ந்தனவாகத்தான் தொனிக்கின்றன. இக்கதை நடப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே உறாய்சல கன்னட பிராமண வகுப்பைச் சேர்ந்த மஉறான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் நாயகராட்சியில் முதலமைச்சு ஒச்சியதால் இங்கு அவரது கன்னட வகுப்பாரும் ஓரளவு குடிபெயரலாயினர். எனவே நாம் குறிப்பிடும்

தம்பதி இக்குடியனராயிருக்கக்கூடும் என்பாரும் உண்டு.

@Page 17

அவரைப் பிள்ளை வரம் வேண்டினர். அதற்குத் தானே இவரும் ஆர்வமுற்றிருந்தார்? குழைந்து, தழைந்து "அம்பா, அம்பா" என்று இவரும் மனத்துக்குள் வரம் வேண்டினார்.

வளர்ப்புக் குழந்தையைப் பார்த்துச் சிரித்தார். உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்; "பயலே ஞானஸாகரா! உன் யுவராஜ்யம் இன்னும் ஒரு வருஷம் தான். அப்புறம் இன்னொரு வாண்டு வரும். நீதான் ஞானி ஆயிற்றே, அவனோடு போட்டியிட மாட்டாய். இருவரும் நகமும் சதையுமாகச் சொந்தம் கொண்டாடுவீர்கள். பூர்வஜன்ம சொந்தம்! அப்புறம்... கர்ம பந்தம் ஒருநாள் தீரும். அவன் நாமஸாகரமாக ஆவான். நீ... "ஸ்வாமிகளின் அக நாவு தழுதழுத்தது. "நீ ஞான ஸாகரம். மலைபோல் நகராமல் பூரித்து எழுந்த ஞானஸாகரம். ஆபூர்யமாணம் அசல ப்ரதிஷ்டம் ஸமுத்ரம்."

மறு ஆண்டு, ஸுகுணா பாய் தாயானாள்.

விட்டலனே வந்து விட்டானோ என்னும்படி அப்படியொரு வசீகரமாக இருந்தது குழந்தை.

ஜனனச் செய்தி கேட்டவுடன் ஸ்வாமிகளின் பவித்ர முகத்தில் நிலாவென மலர்ச்சி உண்டாயிற்று. 'உத்தம புருஷன் உதித்துவிட்டான்' என்று அவரது உட்குரல் கூறியது.

"புருஷோத்தமன் என்று பெயர் வைக்கச் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டார்.

ஒரே புருஷன் என்கிறபோது ஞான ஸாகரம், புருஷ உத்தமன் என்னும்போதோ மத்திம – அதம புருஷர்களும்

@Page 18

இருப்பது போன்ற லீலா ஸாகரம். இவர்களை அந்த உத்தமனிடம் திருப்புவது பிரேம ஸாகரம். அந்தப் பிரேமையை இனிக்க இனிக்க ஊட்டுவது நாம ஸாகரம்.

'காமகோடி பிரேம கோடியாக, நாம கோடியாக விளங்கப்போகிறது. புருஷர்களுக்கெல்லாம் முன்னுதாரணமான அப்பன் ராமன் பெயரில் ராமகோடியாகப்

போகிறது! அம்மா, உன் லீலா விநோதமே விநோதம்! கரும்பு வில்லோடு செக்கச் சிவக்கக் காமாக்ஷியாக வருபவள், இரும்பு வில்லேந்திப் பச்சைப் பசேலென்று ஸ்ரீ ராமசந்திரனாகவும் வருகிறாய்! நீயே அவன் என்பதை அவனது நாமத்தினாலேயே நிரூபிக்கிறாய், உனது மகிமை பொருந்திய ஸ்ரீவித்யா மந்திரத்தையே இறுக்கி ரஸமெடுத்து, அதன் அக்னி – சூர்ய – சந்திர கூடங்களை அதே வரிசைப்படி ர – அ – ம என்று மூன்று அக்ஷரங்களிலேயே முக்கனிச் சாறாகப் பிழிந்து 'ராம' சப்தத்தைத் தந்து விட்டாய். இதுகாறும் ஸ்ரீவித்யா பூஜையே முக்கியமாக இருந்த இம்மடத்தின் மூலம் இனி சுலபத்தில் சுலபமாய், மதுரத்தில் மதுரமாயுள்ள ராம நாமமும் பரவ வேணுமெனச் சங்கற்பித்து விட்டாய்! தீவிர அநுஷ்டானம் எதற்கும் பக்குவப்படாத எதிர்காலத்தவரைக் கைதூக்கி விடுவதற்காக நாம சங்கீர்த்தனத்தை வளர்க்கச் சங்கற்பித்து விட்டாய்! வாழி உன் வான் கருணை! '



## 2
## நர்மதை

முதல் முறையாகக் குழந்தை புருஷோத்தமனை ஆத்மபோத ஆசாரியாளிடம் கொண்டு வந்த தினத்தில் அந்த வைராகி காட்டிய அநுராகம், ஆஉறாஉறா!

"மடத்துக்காகவே பிறந்த குழந்தை மடத்துக்கு வந்தானா?" என்று சந்தோஷித்து இரு கரங்களாலும் பாலனை வாரி எடுத்துக் கொண்டார். அது எப்பேர்ப்பட்ட கரம்? ருத்ராபிஷேகமும் ருத்ர த்ரிசதி அர்ச்சனையும் செய்யும் கரம் அல்லவா? ருத்ரத்தில் சொல்லியிரக்கிறபடி, உலகுக்கெல்லாம் மருந்தாகவும், சிவனை வழிபட்டே அவனை விடவும் உயர்வாகவும் பரிணமித்து விட்ட தமது கரங்களால் குழந்தையைத் தலையோடு கால் தடவிக் கொடுத்தார்.

அதன் தந்தையான கேசவ பாண்டுரங்கரைப் பார்த்து, 'நீ கண்வ கோத்திரக்காரன். கண்வர் சகுந்தலையை எடுத்து வளர்த்த மாதிரி, மடத்துக் குழந்தையான இவனை உன் வீட்டில் வளர்த்து வா" என்று கூறிக் கொடுத்தார்.

ஸ்ரீமடத்தின் செல்லக் குழந்தையாகப் புருஷோத்தமன் தளதளவென வளர்ந்தது.

அது ஸ்வாமிகளுக்கு அதிகச் செல்லமா, அவர் பெறாமலே பெற்ற 'தலைச்சனான' ஞானஸாகரனுக்கு அதிகச் செல்லமா என்று சொல்ல முடியாது!. இதைவிட

ஒன்றரை வயதே பெரிய அந்தப் பிள்ளை இதனிடம் காட்டிய வாத்ஸல்யம்!. பூர்வஜன்ம பாக்கிதான்! அந்த 'சேஷம்' தீர்ந்தபின் ஏற்படவிருக்கும் விரேஷத்தையே ஸ்வாமிகள் தமது அகக்கண் காட்சியில் அடிக்கடி கண்டுவந்தார்.

இருவருக்குமாகச் சேர்த்து மடத்திலேயே முதலில் அக்ஷராப்பியாசமும், பிறகு உபநயனமும் நடந்தன. இயற்கையாகவே தேஜசும் சூட்டிகையும் கொண்ட பாலர்கள் காயத்ரீ அநுஸந்தானத்தால் இரு பால சூரியர்களாகப் பிரகாசித்தார்கள்.

அவர்கள் சதையும் நகமுமாக, மலரும் மணமுமாக இருந்தார்கள் என்றெல்லாம் உவமித்தாலும் போதாது. 'புருஷோத்தமனாகவும் ஞானஸாகரனாகவும் இருந்தார்கள்' என்றேதான் உவமிக்க வேண்டும். இந்தப் பாச நேசத்தை வளர்த்துவிட்டவர் துறவியான ஆசாரியர்தாம்! குழந்தைப் பருவத்தில் இருவருக்கும் கற்கண்டோ பழமோ கொடுக்கும் போதே அதை அவரவர் உண்ண விடமாட்டார். "ஞானிக்கு இதை ஊட்டு" என்றே புருஷோத்தமனிடம் கொடுப்பார். "புருவுக்கு ஊட்டு" என்றே ஞானஸாகரனிடம் கொடுப்பார். எதற்காகத் துறவி ஆசையைப் பெருக்கிக் கொடுத்தார் ? கர்மாவைப் பழுக்கப் போட்டு அறுக்கிற வைத்தியம்தான்!

இவ்விரு புண்ணிய ஜீவன்களுக்கும் கதிமோக்ஷத்திற்குக் குந்தகமாக இருந்த ஒரே பூர்வ கர்மா அவர்களது ஜன்மாந்தரப் பாசம் தான். அது தன் முழு வீச்சும் ஓடிவிட்டு, ஆகாச வாணம் வண்ணப் பொறிகளை வாரித்தெளித்த பின் கரிந்த எரிந்து விழுவதுபோல் தன்னைத் தானே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

@Page 21

இதற்காகவே துறவி இந்த வாணத்துக்கு மருந்து கெட்டித்து, திரி போட்டு வைக்கிறார்!.

ஸ்ரீமடத்தின் பாடசாலையில் பயின்று பதினைந்து வயதளவிலேயே புருவும் ஞானியும் வேத வேதாந்தங்களில் வல்லவராயினர். கல்வியோடு மனப்பக்குவமும் பெற்றனர். இது ஆசாரிய கடாக்ஷத்தின் பிரபாவம். இருந்தாலும் அவரது 'சூழ்ச்சி'ப்படி அவர்களது பரஸ்பரப் பிரேமை மட்டும் கொழுந்து விட்டெரிந்ததாலேயே அவர்கள் முற்றிலும் அத்யாத்ம மார்க்கத்தில் திரும்பித் துறவிகளாகாமல் இருந்தார்கள்.

அவர்களே ஒருவருக்கொருவர் வியப்போடு சொல்லிக் கொள்வார்கள். "ஏண்டா, நமக்கு ஞானத்திலேயும் பக்தியிலேயும் பித்துப் பிடிச்சிருந்துங்கூட, நம்முடைய

பரஸ்பர பாஞ்சையை மட்டும் ஏன் மாயை என்று உதறத் தோன்றவேயில்லை ?"

இது பற்றித் தங்கள் அருமை குருநாதரிடமும் கேட்டார்கள். எத்தனை அருமையானாலும் அவர் அவ்வப்போது பிடிபட மாட்டார். பிடி கொடுக்கவும் மாட்டார். இப்போதும் அப்படியே வெளியில் மௌனமாக இருந்தார். உள்ளே அம்மாவிடம், "மஉறாமாயே, நீதானே விளையாடுகிறாய் ? விளையாடடி! கொஞ்சம் வருஷந்தானே ?" என்றார்.

புருஷோத்தமன் அத்வைத வேதாந்த க்ரந்தங்களைக் கசடறக் கற்க வேண்டும் என்று ஸ்வாமிகள் விரும்பினார். மடத்தின் எண்ணிறந்த அலுவலர்களிடையே இப்பயிற்சிக்குத் தம்மால் அதிகம் பொழுதைச் செலவிட இயலாததால் அப்போது காஞ்சியில் நீண்ட வாஸத்துக்காக

@Page 22

வந்து தங்கியிருந்த ஸ்ரீமத் கீர்வாணேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்ற மகானிடம் புருஷோத்தமனை அனுப்பிவைத்தார். இணைபிரியா ஞானஸாகரனும் உடன் சென்று ஆத்மவித்யா ரகசியங்களைக் கற்றான்.

ஒரு நாள் ஆத்மபோதகர் புருஷோத்தமனிடம் விளையாட்டாகப் பேசுவதுபோல் "புரூ, இப்போது நீ எத்தனையோ உயர்ந்த கிரந்தங்கள் படிக்கிறாய். ஒரு காலத்தில் நீயே அம்மாதிரி எழுதுகிறாய் என்று வைத்துக்கொள். அப்போது 'குருவந்தனம்' எழுதணுமோல்லியோ ? யாரைப்பற்றி எழுதவாய் ?" என்று கேட்டார்.

புரு அவரிடம் ஸ்வாதீனமாகப் பேசுவான். சிரித்தபடி, "நம் பகவத்பாதாளுக்கு ஸுரேச்வரர், பத்மபாதர் மாதிரிப் பெரிய பெரிய சிம்மங்களின் குருவந்தன சுலோகங்கள் கிடைத்தன. பெரியவாளுக்கோ (ஆத்மபோதருக்கோ) போயும் போயும் இந்தப் புரு செய்கிற குரு வந்தன சுலோகந்தான் கிடைக்கப் போகிறது. இந்த அற்ப பிட்சையைப் பெரியவாள் முன்கூட்டியே வேறு கேட்டுக் கொள்கிறீர்களே!" என்றான்.

"அதுக்குத்தான் சொல்ல வந்தேன். அந்த துரதிருஷ்டம் எனக்கு வேண்டாமப்பா! அதை கீர்வாணேந்திரருக்கே சாஸனம் செய்து கொடுத்துவிடுகிறேன்" என்று பரிஉறாஸமாகக் கூறிய ஸ்வாமிகள், சட்டென்று குரலில் ஓர் அடர்த்தியுடன். "புரு. நீ அவருக்குத்தான் முதலில் குரு வந்தனம் எழுதணும். என்னைச் சொல்லாவிட்டால் உன் மனசு கேட்காது என்றால், அவருக்கப்புறம் வேண்டுமானால் என்னைச் சொல், அவர்தானே தொண்டைத் தண்ணீர் வற்ற உனக்கு புட்டுப் புட்டுப் போதிக்கிறார் ?

நான் என்ன செய்கிறேன் ?" என்றார்.

@Page 23

தெய்வாம்சமான குருமார் நா வற்ற போதிக்கவேண்டியதில்லை, அவர்களது அருள் நோக்கிலேயே ஐயங்கள் அலமாந்து ஓடிவிடும். இருந்தாலும் பௌதிகமாக உழைத்து, சிரமப்பட்டு உபதேசிக்கும் ஆசாரியரை மாணவன் தமக்கும் மேலாக மதித்து வணங்கவேண்டும் என்றே ஸ்வாமிகள் கருதினார்!

"ஆக்ஞைப்படியே செய்கிறேன்" என்று பவ்வியமாகச் சொன்னான் புரு.* எப்போது ஸ்வாதீனம் பாராட்டுவது, எப்போது அடங்கிப் பணிவது என்பதை அவன் அறிவான்.

"ஞானிக்கும் இதே ஆக்ஞைதானே ?" என்று கேட்டான் புரு.

ஸ்வாமிகள் பதில் பேசவில்லை.

புரு, நெஞ்சிலே ஒரு நிழல் மூட்டத்தோடு ஞானியின் முகத்தை மறைவாகப் பார்த்தான். ஆகா! அது மெய்யான ஞானி முகமாகவே இருந்தது ஒரு விசாரக்கீற்றும் இல்லாமல் விகாஸமாக இருந்தது!

தன்மையறியாமல் ஸ்வாமிகளிடமே, "ஞானியைப் பார்த்தேளா ? பெரியவாள் மாதிரி நிச்சலனமாக இருக்கிறான் ?" என்று கூறிவிட்டான்.

---

*பிற்காலத்தில் நம் புருஷோத்தமன் செய்த க்ரந்தங்களில் கீர்வாணேந்திரர், ஆத்ம போதர் இருவரும் குரவர்களாகக் குறிக்கப் படுவதால் பல வித அநுமானங்கள் செய்யப்படுகின்றன. இங்கே காண்பது போல் கீர்வாணேந்திரரை வித்யாகுருவாகவும், ஆத்ம போதரை ஆச்ரம குருவாகவும் கொள்வதே அறிஞர் சிலர் முடிவு.

@Page 24

அவரோ மந்தஉறாஸத்துடன், "இந்தப் பெரியவாள் ஒருநாளும் அவனாட்டம் ஞானியாகப் போகிறதில்லை. சிவ சிவ என்று நான் எத்தனை ஜபித்தாலும், எங்கம்மாவிடம் ஜபம் சாயமாட்டேன் என்கிறது. சிவசிவா என்று என்னை ஒரு இடத்தில் சும்மா உட்கார்த்திவைக்கிறாளோ ? மாட்டாள். ஊர் பாடு எல்லாம் கால்பாடு என்று வாரிப்போட்டுக் கொள்கிறேன். எனக்கு எங்கே ஞானம் வரப்போறது ? நீயுந்தான் மவுனமாக உட்கார முடியும் என்று நினைக்கிறாயா ?

உன்னையும் அம்மா ஆட்டிப் படைக்கப்போகிறாள். பாரம்பரியமாகவே உனக்கு பஜனை, சங்கீர்த்தனம் இதுகளுடைய பரவசம் ரத்தத்தில் ஊறிவிட்டதால், சித்தம் செத்து இவன் மாதிரி சும்மா இருக்க உன்னால் முடியாது. நாம் இந்தப் பயலிடம் பொறாமைப் படணும். அம்மா இவனிடம் கைவரிசையை ரொம்பக் குறைவாகத்தான் காட்டியிருக்கா. உன்னிடம் இவனுக்கு இருக்கிற பாசம் ஒன்றால்தான் இவனைக் கொஞ்சம் கட்டியிருக்கா..." என்று சொல்லிக்கொண்டே போனவர் நிறுத்திக் கொண்டார்.

"சிவ சிவ என்று சொல்லி எனக்கு வாய் வலித்துப் போச்சு. சிவஞானத்தைத் தான் காணோம். அந்த சிவன் அநாதி காலமாக வாய் வலிக்காமல் 'ராம ராம' என்று சொல்லிக் கொண்டு காசியில் உட்கார்ந்திருக்கிறானாமே, அங்கே போய் அவனிடமே பாடம் கற்றுக்கொள்ளப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டு காசி யாத்திரை புறப்பட்டார் விச்வாதிக ஆத்மபோத ஸ்வாமிகள்.

ஸ்ரீமடம் முழுதும் கங்கா ஸ்நானத்துக்குப் புறப்பட்டது. ஒரே கோலாகலம்!

@ Page 25

விந்தையாகப் புருவையும் ஞானியையும் வரவேண்டாம் என்று கூறிவிட்டார் ஸ்வாமிகள். ஆம், அத்தனை ஒட்டியிருந்தவர் வெட்டி விட்டார். அலாக்காக!

"இனிமேலாவது நான் துளியூண்டு ஞானியாக வேண்டாமோ? காசிக்குப் போயும் கர்மம் விடவில்லை என்று இந்தத் தடிப்பிள்ளைகள் எதற்கு?" என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார். "ஞாக வைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஉறி" என்று அன்னபூர்ணேசுவரியை வேண்டிக் கொள்ளத்தானே காசிக்கே போகிறேன்?" என்றார்.

வெளிப்பட வெகுளியாகப் பேசுவதாகத் தோன்றினாலும் உள்ளாழத்தை யார் அறிவர்?

ஞானி இப்போதும் சலனமின்றி அடங்கியிருந்தான். புருவோ குருவிடம் யுத்தமே செய்தான். "என்னை நட்டாற்றில் விட்டுப் போனால் பெரியவாளுக்கு அம்பாள் ஒரு நாளும் ஞானம் தரமாட்டாள். பெரியவாள் என்னிடம் பாசம் வைத்ததால்தானே நானும் திருப்பிப் பாசம் வைத்தேன்? இப்போது அவர் மட்டும் ஞானியாவதற்குக் கிளம்பினால் அம்பாள் எப்படி அநுக்கிரகிப்பாள்?" என்று போர் முரசு கொட்டினான்.

பழம் கொடுக்காத பரமேசுவரனிடம் குமார ஸ்வாமிக்கு வந்த கோபம் போல இருந்தது.

ஸ்வாமிகள் சீத மதியமாக அவனைப் பார்த்து, சந்தனமாக கந்தம் வீசப் பேசினார். "குழந்தே! இப்போது பெரிய மனசு செய்து என்னை என் வழியில் விட்டுவிடு. அப்புறம் வா. வர வேண்டியபோது நீ வந்துதானாக வேண்டும்! வருவாய், வருவாய், ஒரு முக்கியமான காரியம் முடிந்தபின் வரத்தான் போகிறாய்!"

@ Page 26

ஒரு திருஷ்டியால், இரண்டு வார்த்தையால் எந்த எதிராளியையும் அடக்கிப்போடுகிற மந்திரசக்தி அவருக்கு இருந்தது. உத்தண்டமாகக் கிளம்பிய பிள்ளையாண்டான் தண்டபாணியாகக் கோபித்துக் கொண்டு புறப்பட்டுவிடாமல், தண்டாகாரமாக அவர் பாதத்தே அடங்கிப் பணிந்தான். உள்ளூர அவனுக்கு ஓர் உளைச்சல். 'அன்று குருவந்தனம் பற்றிச் சொன்னபோது ஞானியை நீக்கித் தன்னை மட்டும் குறிப்பிட்டார். இப்போதும் ஒருமையிலேயே 'வருவாய்' என்கிறாரே!'

விளக்கம் தராமலே விச்வேச்வர க்ஷேத்ர யாத்திரை தொடங்கிவிட்டார் விச்வாதிகர். முதலில் அதன் பூர்வாங்கமாக ராமேச்வரம் சென்றார்.

சிறிது காலத்திலேயே கேசவ பாண்டுரங்க யோகி காலகதி அடைந்தார். குணவதியான ஸுகுணா பாய் அவரோடு உடன்கட்டை ஏறி மங்கையர் திலகமாக, மங்கல தீபமாக உயர்ந்துவிட்டாள்.

பெற்றோரை இழந்து துயரத்தில் தவித்த புரு, 'முக்கியமான காரியம் முடிந்தபின் வரப்போகிறாய் என்று குரு சொன்னதில், முக்கிய காரியம் என்பது மாதா – பிதா மறைவுதானோ ?' என்று எண்ணினான். அந்தணர் பரிபாஷையில் 'காரியம்' என்றாலே 'அந்திம காரியம்' தானே ?

தாயுமில்லாமல், தந்தையுமில்லாமல், இரண்டுமாக இருந்த குருவும் உடனில்லாமல் கலங்கிய புருவுக்கு மூன்றுமாக இருந்து ஆறுதல் தந்தான் ஞானஸாகரன்.

@Page 27

"உன் ஒருத்தனுக்காகத் தாண்டா நான் உயிரோடு இருக்கிறேன்" என்று நண்பனைக் கட்டிக் கொண்டு கதறினான் புருஷோத்தமன், ஸ்வாமிகள் காட்டிய சூசனைகள் நினைவு வந்தன. "உன்னை விடவே மாட்டேண்டா" என்று அவனை மேலும் இறுக்கிக் கொண்டு விக்கினான்.

ஞானி புருவின் தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தான். தாங்கள் கற்ற வேதாந்தக் கல்வியை எல்லாம் நினைவூட்டி வைராக்கிய உபதேசம் செய்தான்.

"எனக்கு உன் விஷயத்திலே ஒரு நாளும் வைராக்கியம் வராதுடா" என்றான் புரு.

"அப்படியானால் வை ராகத்தை, ரூபமும் குணமும் உள்ள தெய்வத்திடம். உனக்குத்தான் குலதனமாக எத்தனையோ அபங்கமும் நாமாவளியும் தெரியுமே. அவற்றையே தோழனாக்கிக் கொள். என்னைத் தேழனாக நம்பி என்ன பயன்?" என்றான் ஞானி.

"என்னடா இப்படி சர்வ சகஜமாகச் சொல்கிறே? சந்நியாசியாகப் கிளம்பி விடப்போகிறாயா என்ன? பெரியவாள் இங்கே இல்லை என்கிற தைரியத்தில்தானே பேசுகிறே? பார், உன்னைக் கட்டி இழுத்துக் கொண்டு காசிக்கே போய் அவாளிடம் உன்னைத் தள்ளுகிறேன். அவாள் சொன்ன முக்கிய காரியமும் முடிந்துவிட்டது. இனிப் புறப்படலாம்" என்றான் புருஷோத்தமன்.

'பேஷாக' என்றான் ஞானஸாகரன். "என்னால் மட்டும் உன்னை விட்டு ஜீவிக்க முடியுமாடா, புரு? என்னவோ வாயில் அப்படி வந்துவிட்டது, சொன்னேன்."

@Page 28

தோழர் இருவரும் துக்கத்தைத் துடைத்து விட்டுக் காசிக்குக் கிளம்பினார்கள்.

கூடவே கண் காணாமல் புறப்பட்டது விதி தேவதை. "கல்யாணத்தில் காசி யாத்திரை புறப்பட வேண்டிய தருணயுவர்கள்! ஒருத்தன் ஒரு விதத்தில் நித்ய கல்யாணத்துக்குப் புறப்படுகிறான். இன்னொருத்தன் இன்னொரு விதத்தில் நித்ய கல்யாணத்துக்குக் கிளம்புகிறான்" என்று அது முணமுணத்துக் கொண்டது.

காடும் மலையும் நதியும் கடந்து நண்பர்கள் சென்றனர். ஆந்திர தேசத்தைத் தாண்டியாயிற்று. அப்பால் விந்தியப் பிரதேசம், பெரும் காடு, அங்கு ஓடும் நதி நர்மதையாக இருக்க வேண்டும் என்று அவர்களாக ஊகிக்க முடிந்ததே தவிர, விசாரிப்பதற்க ஆளேயில்லாத நிர்மாநுஷ்ய வனாந்தரம்.

அந்த அயனான சந்தர்ப்பம் பார்த்து பயங்கர மலைக் காய்ச்சலில் விழுந்தான் ஞானி. உடன் வந்த விதி தேவதையின் கைங்கரியம்!

தனிக்காட்டில் தன்னாலான சுசுரூஷை அனைத்தும் செய்தான் புரு. அவனது உள்மனம் பதைபதைந்தது.

"ஊஉறூம், எனக்காக நீ சிரமப்படாதே. உன்னை விஷ ஜ்வரம் தொத்திக் கொள்வதற்குள் இந்த எல்லையிலிருந்து ஓடி விடு" என்றான் ஞானி. விஷ ஜ்வரத்திலும் அவனது அமுதத் தண்மை வற்றவில்லை.

"மாட்டேன், மாட்டேன், மாட்டவே மாட்டேன்" என்று கதறினான் புரு.

@Page 29

"அப்பனே, நீ என்னை விடாமல் எப்படிப் பிடித்து வைத்துக் கொள்ள முடியும்? ஞானசாகரமே எதிர்த்து வந்து என்னை ஏந்திக் கொள்கிற போது, நான் அதில் திளைத்து அதுவே ஆகாமல் எப்படித் தனி ஆளாக நிற்க முடியும்? இங்கே நானோ நீயோ செய்வதற்கு எதுவுமே இல்லை. எனக்காக அரூப சாகரம் அலை வீசி வருகிறார் போல். அதே சாகரம் குரு ரூபத்தில் காசியில் உனக்காகக் காத்திருக்கிறது. இனி எனக்காக மெனக்கெடாதே, சிரமப்படாதே. அவற்றால் இம்மியும் பயனில்லை. உனக்கு ஒரே சரண் குரு சரணம். நாமாவளிகளை சகாவாக்கிக் கொண்டு அவரிடம் ஓடு"– மேகமற்ற ஆகாயமாகப் பேசினான் ஞானி.

புரு குலுங்கிக் குலுங்கி அழுதான். குரு சொன்ன 'முக்கிய காரியம்' இதுவே என்று புரிந்துவிட்டது. "ஞானீ! நீ போகத்தான் போகிறே! உன்னோடு நான் வர முடியாது. ஞான சூன்யமான என்னை ஞானசாகரம் ஏந்திக் கொள்ளாது. நான் காசிக்கே போகிறேன். நீ இல்லாமல் எனக்கு குருவும் வேண்டாம். தெய்வமும் வேண்டாம். பெரியவாளைக் கடைசியாக ஒரு தரிசனம் செய்து விட்டு, மனசிலிருப்பதை எல்லாமம் கொட்டி விட்டு அங்கேயே கங்கையில் விழுந்து சாகிறேன். ஒருகால், காசி கங்கையில் செத்தால் முக்தி என்பது நிஜமானால், அதன்பின் உன்னிடம் வந்து சேர்கிறேன்" என்று விம்மினான்.

அவனது கேசத்தைத் கோதி விட்ட ஞானி, மெல்ல மெல்ல, 'முக்தியில் நீ என்றும் நான் என்றும், வருவது என்றும் சேர்வது என்றும் உண்டா என்ன? உணர்ச்சியில் என்னென்னவோ பேசுகிறாய். திட்டமெல்லாம் போடுகிறாய். அம்மாவின் திட்டம்தான் அப்பனே, நடக்கும். பக்தியிலும் ஞானத்திலும் உனக்கு பக்குவம்

@Page 30

வரவே வராது என்று நீ நினைத்தாலும், அம்மா அப்படி நினைக்காவிட்டால்? நீ செய்த பஜனை எல்லாம் உன்னை ஈச்வரனிடம் சேர்க்காமல், இந்த என் நச்வரமான சரீரத்தோடு மட்டுமே கட்டிப்போட அம்மா விடுவாளா? நீ படித்து, ஓரளவு அப்பியாசமும் பண்ணிய ஞான விசார சாதனையெல்லாம் பாழாக அம்மா அநுமதிப்பாளா? அசட்டுப் பேச்செல்லாம் பேசாதே! நான் போன பின்னும் நீ வாழ்ந்துதானாக வேண்டும் என்று அம்மா நினைத்து விட்டால் நீ என்ன செய்ய முடியும்? அவள் விட்ட வழி என்று இரு" என்றான்.

புருவுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. "அம்மாவாவது, ஆட்டுக் குட்டியாவது? உன்னிடம் எனக்குள்ள அன்பின் வேகம் உனக்குத் தெரியமலிருக்கலாம் ; அம்பாளுக்கே தெரியாமலிருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும். அது ராதைக்குக் கண்ணனிடம் இருந்ததைவிடச் சக்தி வாய்ந்த, புனிதம் வாய்ந்த நேசம் என்று. அந்தப் பாவனப் பிரேமையின் மேல், பெரியவாளின் பாதத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். நீ போனவுடன் தானாக என் உயிரும் போகாவிட்டால் நான் கங்கையில் முழுகி மரிக்கத்தான் போகிறேன். இது சத்தியப் பிரதிக்ஞை" ஆர்ப்பரித்துக் கூறினான் புரு.

முக்கால் உயிர் ஒடுங்கிய நிலையில் அந்த அன்பை வியந்து சிலிர்த்தான் ஞானி. புருவை நெருங்கி வரச் சைகை காட்டி, மிகுந்த பிரயாசையுடன் தன் கரங்களை அவன் கழுத்தில் கோத்துக் கொண்டான். "அம்மா உன்னிடம் ரொம்ப விளையாடி, அப்புறம் பாரத்தை இறுக்கத்தான் போறா. ஆனால் பரம கிருபையோடு என் பாரத்தை எல்லாம் இப்பவே இறக்கி விட்டா!" என்று கிசுகிசுத்தான்.

@ Page 31

புருவை அணைத்திருந்த கரங்கள் அல்லித் தண்டுகளாகக் கட்டு பிரிந்து விழுந்தன.

கட்டுவிட்டது. பந்தம் போயிற்று. தொந்தம் தீர்ந்தது.

ஆபூர்யமாணம் அசல ப்ரதிஷ்டம் ஸமுத்ரம் தான்!

சமுத்திரத்தை நோக்கி நர்மதை ஓடிக்கொண்டிருந்தாள். புரு மனத்தைக் கல்லாக – அசல ப்ரதிஷ்டமாக – ஆக்கிக் கொண்டான். அவனா ஆக்கிக் கொண்டான். அதுவாகவே அப்படி ஆயிற்று. அதாவது அப்படி எண்ண வைத்து, மறைவிலிருந்து

அம்மாதான் செய்தாள்! தகனத்துக்க வழி இல்லாத தனிக் காடல்லவா அது? அதனால் மனசைக் கல்லாக்கிக் கொண்டு ஞானியின் சடலத்தை இழுத்து நர்மதாப் பிரவாகத்தில் விட்டான்.

நர்மலை 'நதி' அல்ல. 'நதம்' என்பார்கள். அதாவது அது பெண்ணல்ல, ஆண். பக்தி என்பது பெண்; ஞானம் ஆண். பக்தி, தன்னைக் கீழே கீழே ஆக்கி சரணாகதி செய்யும் பணிவு. இதனால் தான் கீழ்நோக்கி – அதாவது கிழக்கு நோக்கி – செல்லும் ஆறுகளே பெண்கள்; நதிகள். ஞானம், தன்னைப் பிரம்மமாகவே மேலே மேலே ஆக்கிக் கொள்ளும் உன்னதம். இதனால்தான் மேல் திசை நோக்கி – மேற்கு நோக்கி – ஓடும் ஆறான நர்மதையை ஆணென்றும், நதம் என்றும் சொல்கிறார்கள். ஞானஸாகரா! பிரம்ம மார்க்கத்தில் மேல் நோக்கிச் சென்ற உன்னை நர்மதா நதம்தான் ஸாகரத்தில் கொண்டு விடவேண்டும். புருஷோத்தமன் பக்திப் பாதையில் தாழ்ந்து தாழ்ந்து செல்ல வேண்டியவன். அவனுக்காக கங்கா நதி காத்துக் கொண்டிருக்கிறாள்! ஆனால் நதம், நதி யாவும் கொண்டு சேர்ப்பது ஒரே கடலில்தான்.

@Page 32

புருவுக்கெனவே அன்று ஏகாந்தமாக கங்காதீரத்தில் அமர்ந்திருந்தார் ஆத்மபோதர்.

புரு அவரிடம் முட்டிக் கொண்டு, கதறமுடிந்த வரை கதறினான். ஞானியைத் தலைச்சனாக வளர்த்தெடுத்த அந்த அம்மையப்பரோ இமையும் கலங்காமல் அசல ப்ரதிஷ்டமாக அமர்ந்திருந்தார்! அம்மாவின் காரியத்தில் அவர் தலையிடுவாரா?

"இந்தப் பாழும் உயிர் தானாகப் போகவில்லையே!" என்று தேம்பினான் புரு.

"தானாகப் போகாதது தடி கொண்டு அடித்தாலும் போகாது" என்று உறாஸ்யம் செய்தார், ஆம், கருணைக்குப் பெயர் கொண்ட காஞ்சி முனிவரேதான்!

"கங்கையில் விழுந்து நான் சாகப்போகிறேன். அப்படியே சத்தியம் செய்திருக்கிறேன்" என்றான் புரு.

"ஆஉறா" என்றால். ஆசான் – துளிக்கூட அதிராமல், பதறாமல்! "இந்த 'நான்' சாகத்தான் வேண்டும். நானைச்சாக அடிப்பதற்கென்றே மகா வெண்மையாக, பரம தண்மையாக, அதி மென்மையாக, வெகு இனிமையாக ஒரு கங்கை ஓடிக் கொண்டு இருக்கிறது. அந்த கங்கைக்கு ராம நாமா என்று பெயர். அந்த சாசுவத கங்கையில்

சாசுவதமாக விழுந்து சாசுவதமாகச் செத்துக் கொண்டிரு. போகிற இடமெல்லாம் அந்த கங்கையைப் பாய்ச்சிக் காசியாக்கு. பார்க்கிற பிராணிகளை எல்லாம் அதனால் புரோக்ஷணம் செய்து அமரமாக்கு" படபடவென்று பொழிந்து கொண்டே போன ஸ்வாமிகள், புருவின் வலச் செவியருகே தமது திருவாயைக் குவித்தார்.

"ராம ராம ராம" என்றார்.

@Page 33

ஆஉறா, மந்திரோபதேசம் செய்கையில் அந்த இரு அக்ஷரங்களை அவர் எந்த பாவத்தில் கூறினார்? விசுவாதிகரான அவர் காசி விசுவநாதனின் பாவத்திலேயே ஐக்கியப்பட்டுத் தாரக நாமத்தை ஓதிவிட்டாரா? பரப்பிரம்மத்தின் பரங்கருணைப் பிரவாகம் முழுவதும் அவ்விரு எழுத்துக்களில் உருண்டு, திரண்டு, இறுகி முறுகி, முதிர்ந்து பதிர்ந்து புருவுக்குள் புகுந்து விட்டதா' என்ன?

காசியில் மரிக்கும் தறுவாயில் இருப்போரை அம்பிகை தன் மடியில் வாரிக் கிடத்திக்கொண்டு முந்தானையால் விசிறுகிறாள் என்றும், அப்போது ஈசன் நஞ்சுண்ட தன் அமுத கண்டத்தால் அவர்களது வலச்செவியில் ராமநாமத்தை ஓதி அவர்களை முக்தியாம் அமர நிலையில் சேர்க்கிறான் என்றும் புராணம் கூறும். ஸ்ரீ பரமஉறம்ஸ ராமகிருஷ்ணர் இந்தப் புராண ஐதிஉறயத்தைப் பிரத்தியக்ஷ சம்பவமாகவே கண்ணாரக் கண்டிருக்கிறார். அம்பாள், அவளது வாத்ஸல்ய மடி, வாஞ்சை முந்தானை, ஈசுவரன், அவனது அம்ருத கண்டம், ராம நாமம், ராமன் என்கிற இன்ப மகா சமுத்திரம் – இவை அவ்வளவும் ஸ்வாமிகள் செய்த உபதேசத்தில் நிறை கர்ப்பமாகத் துளும்பிக் கொண்டு புருஷோத்தமனின் செவியில் பாய்ந்து இதயத்தே புகுந்து நிறைந்துவிட்டன! ஸ்வாமிகள் தமது தவ வாழ்வின் அநுபூதி அனைத்தையும் திரட்டி அந்த உபதேசத்தின் மூலம் அவனுள் புகுத்தி விட்டார். தியாகிகளில் மகாத் தியாகி!

நாம கங்கை கணத்தே புருஷோத்தமனை உருட்டித் தள்ளிக் கொண்டு போய் ராம ஸாகரத்தில் சேர்த்துவிட்டது. அந்த பிரசண்டப் பிரவாகத்தில் பழைய பாபம், தாபம், அஞ்ஞானம் யாவும் அடிநாசமாயின. 'ராம' என்பதில்

@Page 34

அக்னி பீஜமாம் 'ர' வின் தீயொளியில் பாபம் பஸ்மமாயிற்று; ஸூர்ய பீஜமாம் 'அ' வின் மகாப் பிரகாசத்தில் அஞ்ஞான இருளானது ஓட்டம் பிடித்தது; சந்திர பீஜமான 'ம'

வின் மதிநிலவில் தாபமெல்லாம் தீர்ந்தது. இன்பக் குளுமை கொழித்தது. சரீர இன்பம் அல்ல ; புலனின்பம் அல்ல ; புத்தி வன்மையின் இன்பம் அல்ல ; சாக்ஷாத் இன்பத்தின் இன்பமே அது – அதாவது ஆத்மா என்கிற இன்பம். ஆத்மா என்பதன் இன்பமல்ல; ஆத்மா என்கிற இன்பம். ராமன் என்றால் ரமிக்கிறவன். ரமிக்கச் செய்கிறவன். எதை ? ஆத்மாவால் ஆத்மாவை ரமிக்கச் செய்யும் ஆத்மாராமன் அல்லவோ அவன் ?

கல்பகோடி காலமாக சம்ஸாரத்தில் உழன்று கொண்டிருக்கும் அனந்த கோடி உயிர்களில் கோடாநு கோடியரில் ஒருவருக்கே நெடுங்கால சாதனைக்குப் பின் கிட்டும் ஆத்மானந்தம் என்ற அருமையிலும் அருமையான அநுபூதியானது புருஷோத்தமனுக்கு குரு உபதேச வழி வந்த நாமத்தின் கிருபையால், காமகோடியின் கிருபையால் கணத்தே சித்தித்து விட்டது !

வெடிகுண்டுத் திரியிலே ஒரு சிறு பொறியை வைப்பது அற்ப காரியமாகவே தெரிகிறது. ஆனால் வைத்துவிட்டால் ஏற்படும் விளைவோ! புருவின் கர்மாவை நன்றாக கெட்டித்துத் திரி போட்டுத் தயார் செய்திருந்த ஆத்மபோதர் இன்று அதில் நாமப் பொறியை வைத்துவிட்டார். அவ்வளவுதான் ; பண்டைய கர்மா முழுவதும், பூர்வ வாஸனை முற்றிலும் வெடித்துச் சிதறிவிட்டன. பாக நேசம் யாவும் பாழ்த்து விட்டன. தோழமை தூர்ந்தே விட்டது.

@Page 35

இதென்ன விந்தை! அதிசயித்தான் புருஷோத்தமன். 'இதோ ஞானஸாகரனை நினைக்கிறேன். அவன் மாண்டதை நினைக்கிறேன். ஆனாலும் என் நெஞ்சு நோகவில்லையே, கண் கலங்கவில்லையே! பூர்வ வாசனை தீருவது என்பது இதுதானா ? சிறிது போதுக்கு முன்பு கூட அவனை ஓர் உண்மையாக எண்ணியிருந்தேன். உண்மை மலரிலிருந்து வாசனை வருவதேபோல் பாச வாசனை மண்டி வந்தது. இப்போதோ அம்மலர் ஓவிய புஷ்பமாக மாறிவிட்டது. சித்திரத்திலுள்ள பூவிலிருந்து எப்படி வாசனை வரும் ? சத்தியமென எண்ணியது சித்திரமான இந்த விசித்திரமென்ன ? நாம மகிமைதான். ஆகா, இம் மஉறிமையை மலர்வித்த குருநாதனிடமே சொல்வோம்!

இவன் வாய் திறக்கு முன் ஆத்மபோதரே பேசினார். குறுநகை கொழிக்கக் குருநாதர் கூறுவார் ; நெருப்புக் கங்குகளையே பனிக்கட்டிபோலக் கூறுவார் : "மற்ற சத்தியங்கள் பொய்யாகட்டும், பகற் கனவாகட்டும், பேய்த்தேராகட்டும் ; ஆனால் தனி ஜீவனாக ஒன்று இருப்பதாகத் தோன்றுமட்டும் பிரதிக்ஞையாகச் செய்த

சத்தியவாக்கைக் காப்பாற்றத்தான் வேண்டும். கங்கையில் விழுவதாக என் பாதத்தின் மேல் ஆணையிட்டுச் சபதம் செய்தாயே, அது என்ன ஆயிற்று ? போ, விழு கங்கையில். அதற்கு முன் இன்னொன்று. பிரதிக்ஞையையே நீ மறந்து விட்டாய். நான் தான் நினைவு படுத்த வேண்டியதாயிற்று. இந்தப் பாபத்துக்குப் பரிகாரம் மானபங்கம். சாஸ்திரப்படி மொட்டையடிப்பதே பெரிய மான பங்கம். எனவே முதலில் தலையை மழித்துக் கொள். பிறகு கங்கையில் விழு."

@Page 36

3

மஉேறாததி

புருவை உயிராக வளர்த்து உருவாக்கிய குரு. அவன் உயிரைவிட வேண்டுமென சகஜமாகக் கூறிவிட்டார்.

அவனுக்கும் சாவது சாமானியமாகவே இருந்தது. அவர் செய்த உபதேசம்தான் சற்று முன்பே அவனது உடலுணர்வை எரித்து விட்டதே ; அவன் தன்னை என்றும் அழியா ஒரு பேருயிரின் பங்காகவே உணருமாறு செய்து விட்டதே! இனி சரீரத்தை விடுவதற்கு யோசனை என்ன ?

ஆசானைக் கண்குளிர ஒரு முறை தரிசனம் செய்து கொண்டான். அவரைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தான்.

அவர் கற்சிலையாக அமர்ந்திருந்தார்.

நெளி நெளியாகச் செழித்திருந்த கட்டுக் குடுமியை மழித்துக் கொண்டு கங்கைக் கரையில் வந்து நின்றான்.

தேவி பாகீரதி சுழித்தோடிக் கொண்டிருந்தாள்.

"பாவம் தீர்க்கும் பவானி, கங்கை பவானி!" என்று அவளை நோக்கிக் கும்பிட்டான் புரு.

மறு விநாடி

கங்கைக்குள் மறைந்தது புருவின் உடல்.

கோடி அலைகள் ராம சப்தம் பாடின. அந்த ராமகோடி மயிர்க்கால்கள் வழியே புருவினுள் புகுந்தன. மூச்சு முட்டி நின்றது.

@page 37

இதோ, சரீரம் மேலே மிதக்க வேண்டியதுதான்.

"வா எழுந்திருந்து! குரு ஆக்ஞை! பிரதிக்ஞைகளையெல்லாம் விடப் பெரிய குரு ஆக்ஞை" – மேலேயிருந்து ஆசானின் குரல் வந்தது.

உடலில் இம்மியே உயிர் ஒட்டியிருந்த நிலையில், கங்காப் பிரவாகத்தை எதிர்த்து அவன் எப்படி எழும்ப முடியும்? ஆனாலும்...

எழும்பி விட்டான்!

குரு ஆக்ஞைக்குக் கட்டுப்பட்ட அவனை கங்காதேவியே தூக்கிவிட்டாளா? முன்பு ஆதிசங்கரரின் அருமந்தச் வீடர் பத்மபாதருக்காகத் தாமரைப் பாலம் போட்டுக் கொடுத்தவள் அல்லவா?

ஸ்ரீராமனின் மூலவனான நாரணனின் பாதத்தில் உண்டான கங்கையில் முழுகி எழுந்து சொட்டச் சொட்ட குருவின் முன் நின்றான் புரு.

கருணை சொட்டச் சொட்ட அவர் அவனை நோக்கி வந்தார்.

கருணையின் சிவப்பாலேயே நெய்தாற் போன்ற புத்தம் புதுக் காஷாயத்தை அவன் முன் நீட்டினார்.

"உனக்குப் பிராண உறானி, பிரதிக்ஞா உறானி இரண்டும் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அம்பாள் எனக்குக் கொடுத்தாள். 'கங்கையில் முழுகிச் சாவேன்' என்று சபதமிட்டாய். கங்கையில் விழு முன்பே உன் அகங்காரத்தை ஸ்ரீராம நாமம் அடியோடு சாகடித்துவிட்டது. பிறகு சரீரத்தையும் வாக்குப்படி கங்கையில் முழுக்கினானய். க்ஷணகாலம் உன் சுவாசமே

@Page 38

போய்விட்டது. திவ்ய சங்கற்பத்தால் புத்துயிரோடு வந்திருக்கிறாய். அதில் உனக்கு ஐயம் இருந்தாலும் பரவாயில்லை. வாக்குப்படி உயிர் விடவில்லையே என்று எண்ண வேண்டாம்.

துறவியாகி விட்டால் பழைய பிறவி தீர்ந்து, புது ஜன்மா உண்டாகிவிடுவதாக ஸகல சாஸ்திரமும் கூறுகிறதல்லவா ? நம் ஆதி ஆசார்யாளே ஸந்நியாஸ ஆச்ரமம் ஏற்று மறுபிறவி பெற்றதால்தானே முதலை வாயினின்று மீண்டார் ? பகவத் பாதாளின் பாதச் சுவட்டில் நீ போவதற்காக உனக்கும் அதே பாக்கியம் லபிக்கிறது. அதற்காகத்தான், இந்தா இதோ..."

கையிலிருந்த காஷாயத்தை மந்திரபூர்வமாக வழங்கினார்.

இதற்குப் பூர்வாங்கமாகவே சிகையை மழித்துக் கொள்ளும் காட்சியை ஜோடித்திருக்கிறார்!

மனித வாழ்வை விட்டு தெய்வ வாழ்வை சந்திக்கும் புரு, சந்தியாகாலத்தைத் தரித்த வானம் போல் துவராடை பூண்டு தூய்மையில் தூய்மையாக நின்றான்.

நூறு மன்மதர்களை நிகர்த்தவர்' (கமலாஸூத சத ஸுந்தர ரூபம்) என்றும், இவ்வளவு சொன்னாலும் போதாது என்று 'கோடி மதனராக உள்ளம் கவர் உருவத்தினர்' (மன்மத கோடி மனோஉறர ரூபம்) என்றும் இன்றும் பஜனைப் பாடல்களில் போற்றப்படுபவர் நம் சரித நாயகர். கோடி காமரை ஒத்தவர் காமகோடி விலாஸத்தால் காமனைப் போல் வெற்றுச் சரீர ஆணையைத் தூண்டாமல் திவ்ய இன்பம் தரும் புனித அழகினராக இருந்தார். இந்த அழகுக்கு அலங்காரம் பீதாம்பரமும்

@page 39

சுருள் முடியும் அல்ல ; காவியும் முண்டனமுமே இதற்குப் பேரலங்காரம். இவ்வழகு

மன்னனின் செங்கோல், கல்மூங்கிலாலான தண்டம்.

வெளியே செவ்வாடை, உள்ளேயோ வெள்ளை வெளேரென்றாகி விட்டிருந்தது. ஆத்ம ஆசாசத்துக்கு நிறம் ஏது ?

நிறமற்ற ஆகாசமே அழகு நிமித்தமாக சிவப்பைப் போர்த்திக் கொண்டு ஸந்தியில் விளங்குகிறது. அந்த அழகு தான் அன்பு. அதுவே செக்கச் சிவன் காமாக்ஷி, காமகோடி, இகமும் பரமும் சந்திக்கும் ஸந்தி.

உள், வெளி இரண்டுக்கும் இடை நிலையான கருணைக் காமகோடி! அந்தச் சிவப்பி வெளி உலகை உள்ளே திருப்புவதற்காக அவதரிக்கும்போது, தன் அன்பின் புதுமையையும் செழுமையையும் காட்டுவதற்காகப் பசேலென வருவாள். அதிலும் அவதார சிரேஷ்டனாக, ஸ்ரீ ராமசந்திரனாக வந்து புருஷ உத்தமனாக தர்மத்தை நொடி நொடியும் வாழ்ந்து காட்டியபோது மரகதப் பச்சையாகவே வந்தாள்.

மரகதம் கல். இதுவோ கனிவு.

நம் புருஷோத்தமரிடம் ஆத்மாகாசத்தின் சாந்த வெண்மை, பராசத்தியின் லீலைச் சிவப்பு. ஸ்ரீ ராமனின் தர்மோத்தாரணப் பச்சை யாவும் வந்து குடி கொண்டன.

கூட்டுப் புழு தேனீயாகி வந்ததைக் கண்டு குரு எல்லையில்லா நிறைவு எய்தினார். புழுவைத் தேனீயாக்கியவதே, கொட்டிக் கொட்டிக் குளவியாக்கியவரே அவர்தான். நாம ரஸத்தைப் பருகும் தேனீ.

@Page 40

"வத்ஸ, வா அருகே! ஜீவப் பிரம்ம ஐக்கியத்தைக் கூறும் உபநிஷத மஉறாவாக்கியங்கள் நான்கும் கெட்டித்துப் போய் ராம நாமமாக உன்னுள் இறங்கிவிட்டன. கெட்டித்தாலும் அது ரஸம். இளக்கத்திலும் இளகியது. இருந்தாலும் சாஸ்திரப்படி உன்னை சந்நியாசியாக்குவதற்காக, இந்தப் புனித மஉறா காமகோடி பீடத்தின் அடுத்த அதிபதியாக்குவதற்காக மஉறாவாக்கியங்களை உபதேசிக்கிறேன், வா."

மஉறாவாக்கிய உபதேசம் முறைப்படி நடந்தேறியது.

ஆயினும் இந்தச் சீடருக்கும் சரி, சீடர் மூலம் உலகுக்கும் சரி, ராம நாமமே மகாமகா

வாக்கியம் எனக் கருதினார் குரு. எனவே இதுகாறும் புருஷோத்தமனாக இருந்த வியக்திக்கு பகவன் நாம போதர் என்று சந்நியாசத் திருநாமம் இட்டார்.

காமகோடி பீடாதிபதிகளுக்குரிய 'இந்திர ஸரஸ்வதி' என்ற துறவுப் பட்டமும் சேர்ந்து, இது ஸ்ரீ பகவந்நாம போதேந்திர ஸரஸ்வதி என்று அழகாக நீண்டது.

குரு ஆத்ம போதர். சீடர் நாம போதர். நாமத்திலேயே ஆத்மாவைக் கண்டவராதலால் சீடரும் ஆத்ம போதர் தான்! தாமும் சீடரும் ஒன்றெனக் காட்டவே இப்படிப் பெயரிட்டார் குரு.

குரு இப்படி ஐக்கியத்தைக் காட்டினாலும், சிஷ்யரோ அடங்கிப் பணிவதிலுள்ள இனிமையை அனுபவிப்பதற்காக குருவிடம் அத்வைதம் பாராட்டாமல் அவரது அடித் தொழும்பராகவே தம்மை வைத்துக் கொண்டார்.

@Page 41

போதம் என்றால் ஞானம், அறிவு. போதை என்றால் அறிவு மயக்கம். பகவந்நாம போதரோ நாமத் தேனில் போதை கொண்ட தேனீயும் ஆவார் ; அதையே போதமாக உணர்ந்து அதுவாகவே ஆனவரும் ஆவார். முன்நிலை பரமனிடம் பக்தி, உலகிடம் கருணை ; பின்நிலை ஞானம் – பரமன், உலகம், தான் என்ற பிரிவுகளே இல்லாத ஸ்தானம்.

"அப்பனே! அம்பாள் சங்கற்பம் உனக்கு உள்ளூர அத்வைத போதமிருப்பினும், வெளியே நாம போதையே அதிகமிருந்து, நீ உலகிலும் நாம வெள்ளத்தைப் பரப்ப வேண்டும் என்பதுதான். நீ ஞான போதத்தில் மட்டும் நிலைத்து நிச்சலனமாகக் காரியமற்று இருந்து விடக்கூடாது. ஓயாமல் சஞ்சரித்து நாமப் பிரவாஉறத்தைப் பாய்ச்ச வேண்டும். நாமஸாகரனாக இருக்க வேண்டும்" என்று கூறிய விச்வாதிகர், பகவந்நாம போதரின் பிறவிப் பணியை விளக்கலானார்.

'ஸௌம்யா, நாமபோதா! வரவிருக்கும் காலங்களில் யோகம், யாகம், பூஜை இவற்றுக்கான தேக பலம், மனோதிடம், திரவிய சுத்தி யாவுமே உலகில் மிகவும் குறைந்து விடும். கலியின் ஆட்சி நாளுக்கு நாள் வலுக்குமாதலால் இப்படி ஏற்படும். ஆயினும் பராசக்தி உலகத்தை அப்படியே கலிபுருஷனுக்குச் சாஸனம் செய்து விடப் போவதில்லை. சக்தி, சுத்தி இரண்டும் குறைந்த மக்களையும் கைதூக்கிக் காப்பதற்காக நாம ஸங்கீர்த்தனம் என்ற எளிய மார்க்கத்தைப் பிரகாசப்படுத்த திவ்விய சங்கற்பம் ஏற்பட்டிருக்கிறது. கலியில் மோக்ஷ ஸாதனம் கீர்த்தனந்தான்

என்று பூர்விக ரிஷிகளே கூறியிருக்கிறார்கள். இதனால், அநாதியாக வந்துள்ள வேத –

@Page 42

– வேதாந்த சாஸ்திரங்களையும், யோகத்தையும், மந்திர தந்திர வழிபாட்டு மார்க்கங்களையும் அடியோடு விட்டு விட வேண்டுமென்று பொருளல்ல. இருந்தாலும் இனிமேல் நாம ஜபனைக்கும், பஜனைக்குமே முதலிடம் தரவேண்டும். இச் சங்கற்பப்படியே கடந்த ஒரு நூறாண்டாகப் பராசக்தியின் திட்டம் பாரத வர்ஷத்தின் ஒவ்வொரு பகுதியிலும் செயலாகி வந்திருக்கிறது.

"இந்த உத்தர பாரதத்தில் ரயிதாஸ், கபீர்தாஸ், துளஸீதாஸ் ஆகியோரும், ராஜபுதனத்தில் மீராபாயும், கௌட தேசத்தில் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரும் அவதரித்து நாம மகிமையை வெகுவாகப் பரப்பி விட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் நாமதேவர் ஏற்றிவைத்து, ஏகநாதரும் துகாராமும் தூண்டி விட்டுள்ள நாம தீபம் சிகர ஜோதியாகப் போகிறது. ஆஞ்ஜநேய ஸ்வாமியே ஸமர்த்த ராமதாஸ் என்ற மகா புருஷராக அவதரித்து, தற்போது இளைஞராக உள்ள அவர் மூலம் ஸ்ரீராம திரயோதசாக்ஷரி மந்திரம் பரவி வருகிறது – சமீபத்து எதிர்காலத்திலேயே அங்கு அவரது அநுக்கிரக பலத்தால் பெரிய உறிந்து சாம்ராஜ்யம் எழும்பப் போகிறது. பராசக்தியின் சங்கற்பம், அதே மகாராஷ்டிர ரத்தம் ஓடுகிற உன்னால் தமிழ்நாட்டில் நாம சித்தாந்தம் மகோன்னதமாக நிலை நாட்டப்பட வேண்டுமென்று இருக்கிறது. அத்வைத ஞானத்தையே ஆதாரமாகக் கொண்ட நாம உபாஸனை உங்களிருவராலும் குன்றிலிட்ட ஜோதியாகப் பிரகாசிக்கவிருக்கிறது.

"ஆம் அப்பனே! நீ வெறுமே கர்மகதியால் பிறந்து பிறந்து மரிக்கிற அனந்த கோடி ஜீவர்களில் ஒருத்தனல்ல. நீ லோக காரியம் ஒன்றைச் சாதிப்பதற்கென்றே பராசத்தியால் முத்திரை குத்தி அனுப்பப்பட்ட ஒருததன். உன்னுடைய பூர்வ கர்ம பாக்கி ஞானஸாகரனின்

@Page 43

மரணத்தோடு தீர்ந்துவிட்டது. இனி உன் பிறவிப் பணியைத் தொடங்க வேண்டியதுதான்.

"சுருக்கமாக நாம சித்தாந்தம் என்ன? சொல்கிறேன் கேள். பரம்பொருளுக்குப் பல ரூபங்கள் இருப்பது போலவே பல நாமங்களும் உள்ளன. நாமமே பரம்பொருள் என

உளமார நம்பி, அன்பு மயமாக அந்த நாமத்தைச் சுவைத்துக் கூறினால், இந்த எளிய உபாயத்தை மேலும் இனிமையாக்கி நாமங்களைக் கோத்து, பண்ணும் லயமும் சேர்த்துப் பாடினால், முடிவில் முக்தி எய்திவிடலாம். தனியாரின் சாதனையாக இல்லாமல், அனைவரும் கூட்டாகக் கோஷ்டி சேர்ந்து உயர்நிலை பெற நாமஸங்கீர்த்தனமே உதவுகிறது. கோஷ்டி சேருவதால் சாதனைக்கு இடையூறு என்றில்லாமல், அப்படிச் சேருவதாலேயே உற்சாகமும், புத்தெழுச்சியும் தரும் அற்புத வழி இதுவே.

"இதன் மற்றொரு மகா பெருமை, இன்னாருக்குத் தான் இம் மார்க்கத்தில் அதிகாரம் உண்டு என்ற கட்டுப்பாடு எதுவும் கிடையாது. பண்டித – பாமரரான சகல மக்களும், பெரியவர்களும் குழந்தைகளும், ஆடவரும் பெண்டிரும், ஸகல ஜாதியாரும் இதை அநுஷ்டிக்கப் பூர்ண உரிமை பெற்றிருக்கிறார்கள். மனம் வேண்டும், சொல்ல நாக்கு வேண்டும். அவ்வளவுதான்.

"இவ் வழியில் இன்னொரு சிறப்பு. இதற்கு கால தேச நியமங்கள், மடி ஆசாரங்கள் தேவையில்லை. சகல தோஷத்தையும்தான் நாமமே நிவர்த்தி செய்துவிடுமே! என்றாலும், இந்நாட்டில் யுகயுகாந்தரமாகப் பல ஆசாரங்கள் தொடர்ந்து வந்திருப்பதால் அவற்றில் ஒரு கௌரவ புத்தி காட்டுவதும், அவற்றுக்கு அடங்கி

@Page 44

நடப்பதும் நமக்கே நல்லதுதான். ஆகவே கடுமையான நியதிகள் இல்லாவிடினும், அகத்தூய்மை – புறத் தூய்மைக்கான முக்கியமான சாஸ்திர விதிகளைப் பற்றி ஒழுகத்தான் வேண்டும்.

"இன்னொரு முக்கியமான விஷயமும் கவனமாகக் கேட்டுக் கொள். வைதிகமான யக்ஞாதி கர்மாக்களை செய்ய இயலவில்லை என்பதால்தான் நாம ஸங்கீர்த்தனத்தைப் பரப்ப வேண்டுமேயன்றி, வேத கர்மாக்களை செய்யக் கூடாது என்பதற்காக அல்ல. எனவே கர்மாநுஷ்டானக்காரர்களை நீ சிறிதும் கண்டனம் செய்துவிடக் கூடாது. நாம ஸித்தாந்தத்தைத் தழுவுகிறவர்களுங்கூட அடிப்படை வேத கர்மாக்களான ஸந்தியாவந்தனம், சிராத்தம் முதலியன செய்வதற்கு ஊக்க வேண்டும். இது தொன்று தொட்ட மரபுக்கு நாம் காட்ட வேண்டிய மரியாதை. பகவத்பாதர் காட்டிய ஸம்பிரதாயக் கட்டுப் பாட்டு நெறி. பகவானே இந்த மரியாதையை மெச்சுவான்.

"இந்த மரபை மதித்துத்தான் என் தலைமுறையிலேயே இந்தப் பணியைத்

தொடங்காமல் உனக்காக நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. என் தலைமுறையினருக்கு விரோதமாகத் தெரியும்படி எதுவும் செய்ய வேண்டாம் என்றே அடுத்த தலைமுறையினரை மட்டும் ஓரளவு நாம மார்க்கத்தில் ஈடுபடுத்தியிருக்கிறேன். உனக்காக உழுது வைத்திருக்கிறேன். இனி நீ பயிரிட வேண்டும்.

"நாமபோதா! வேத வழி நமக்கு விரோதமல்ல என்று நாம் இருக்கலாம். ஆனால் தீவிர ஸநாதனிகளோ நாம ஸித்தாந்தம் வைதிகத்துக்கு விரோதமானது என்று போருக்கு வரக்கூடும். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் இந்த ஆபத்து வலுவாகவே உள்ளது. ஆரியாவர்த்தத்தில் பண்டிதர், பாமரர் அனைவருக்குமே உணர்ச்சிப் பரவசம்

@Page 45

அதிகம். எனவே எளிதில் ஆவேச ஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்டு நாமருசியைப் புரிந்து கொண்டு விட்டனர். ஆனால் பக்தி பிறந்த மண்ணே தமிழகந்தான் என்றாலும் கூட, காலக்கிரமத்தில் அங்கு உணர்ச்சிக்கு மேல் புத்தியின் வீச்சு அதிகமாகியிருக்கிறது. எனவே வித்வான்களின் வாதப் போர் நிச்சயம் எழும்பும். அவர்களுக்கெல்லாம் விடை தருகிற ஓர் அற்புத கிரந்தம் இருக்கிறது. சமீபத்தில் புரி ஜகந்நாதத்தில் வாழ்ந்த லக்ஷ்மீதர கவி எழுதிய நாம கௌமுதி* என்ற நூல்தான் அது. நாம பஜனையும், ஜபனையும் வேதத்திலேயே கூறப்பட்டவை. அவை பரம வைதிகமானவையே என்று இந்த நூல் ஆதாரபூர்வமாக நிலைநாட்டுகிறது.

"ஒருபுறம் கர்மானுஷ்டானக்காரர் நாம ஸித்தாந்தத்தை ஆக்ஷேபிப்பர் எனில், மறுபுறம் அத்வைத ஞான சாஸ்திரக்காரர்களும் இது ஸகுணப் பிரம்மத்தை அடைந்து பக்தனாக நிற்பதோடு முடியுமேயன்றி, நிர்குணப் பிரம்மத்தில் இரண்டறக் கலந்து அதுவாகவே ஆவதைத் தடுத்து விடும் எனக் கண்டனம் செய்யலாம். இது பக்தி மார்க்கத்தில் சேருமாதலால் அத்வைத ஞானத்துக்கு முரணானது என்ற இத் தவறான கருத்தையும் களைந்தெறிந்து, நாம சித்தாந்தத்தின் முடிந்த முடிவு பிரம்மஞானமும், பிரம்ம ஸாக்ஷாத்காரமுமே என்பதற்குப் பல அத்தாட்சிகளைக் காட்ட வேண்டும். 'நாம கௌமுதி'யே இதையும் ஒருவாறு காட்டும் நூல். சுருங்கச் சொன்னால் 'நாம கௌமுதி'யே உன் பிரமாண கிரந்தம்.

"அதன் விளக்கங்களோடு, உன் சொந்த அநுபவத்தில் கண்ட, புத்தியில் பிரகாசிக்கிற, உணர்வில்

---

*'கௌமுதி' என்றால் நிலா, பகவந்நாமம் சந்திரிகையாகத் தண்மையுடனேயே ஞான

ஒளி பரப்புவதால் 'நாம கௌமுதி'

@Page 46

ஸ்புரிக்கிற உண்மைகளையும் சேர்த்து நாம சித்தாந்தத்தை விளக்கி நீயே லக்ஷம் சுலோகங்கள் செய்ய வேண்டும். இது பகவத் ஆக்ஞை, மலைக்காதே! கருணை உன் விஷயத்தில் என்னவெல்லாம் சாதித்தது என்பதைத்தான் கண்டுவிட்டாயே, அதுவே இதையும் சாதித்துத் தரும்!

'ஜகந்நாத புரிக்குச் சென்று நீ 'நாமகௌமுதி'யைப் பெற வேண்டும். அதோடு அங்கு இன்னொரு விசேஷம் நிகழப் போகிறது. தமிழகப் பண்டிதர்களைப் பற்றிச் சொன்னேன். அங்கே சாமானிய மக்களை எடுத்துக் கொண்டாலும் ஆரியாவர்த்த மக்களைப் போல் அவ்வளவு எளிதில் அவர்கள் நாமத்தை நம்பி ஏற்கமாட்டார்கள். வெறுமே "கிருஷ்ணா, ராமா, சிவா, அம்பா" என்றால் போதுமா என்றுதான் நினைப்பார்கள். எனவே, 'வெறும்' நாமா என்று நினைக்கப்படும் அக்ஷரங்களின் அளப்பரிய அற்புத சக்தியைக் காட்டித்தான் அவர்களைத் திருப்ப முடியும். தமிழகம் அறிவில் சிறந்தது என்றாலும், அறிவு வாதத்துக்குப் பிறகு நடந்த அற்புதங்களால்தான் அங்கு பெரியாழ்வாரும், ஞானசம்பந்தரும் வைஷ்ணவ, சைவ சமயங்களை நிலைநாட்ட முடிந்தது. பாண்டிய சபையில் பொற்கிழி தானாக வந்து ஆழ்வார் கையில் அமர்ந்ததால் தான் வைஷ்ணவம் நிலைநாட்டப்பட்டது ; மற்றொரு பாண்டியன் நடத்திய அனல்வாத, புனல்வாதங்களில் சம்பந்தரின் ஏடு அனலில் எரியாமலும், புனலை எதிர்த்து வந்ததாலுந்தான் சைவம் நிலைநாட்டப்பட்டது. ஏன், அத்வைதத்தின் மகா வெற்றியாக பகவத்பாத ஆசாரியாள் மண்டனமிச்ரரை வென்றாரே, அது கூட அறிவு ரீதியிலா முடிவு பெற்றது ? அல்லவே! ஆசாரியாள் அணிந்திருந்த புஷ்பஉறாரம் இருபத்தியொரு நாட்கள் வாடாமலே இருந்த அற்புதத்தால்தானே மண்டனர் அவரிடம்

@Page 47

தோற்றதாக ஏற்பட்டது ? எனவே நாமபோதா, பரஞானத்தைச் சொல்லும் அத்வைத மடாதிபதியானதால் நாம் இயற்கைக்கு அதீதமான அற்புதங்களை இகழ வேண்டும் என எண்ணாதே. அம்பாளின் விளையாட்டு அனந்தம். அத்வைதிகளுக்கும் செருக்கு ஏற்படலாகாது என்றே அவர்களுடைய காரியத்தையுங்கூட அற்புதத்தின் மூலம் நடத்தினாலும் நடத்துவாள். இப்போது நம் மடத்தின் மூலம் பிரசாரமாக வேண்டிய நாம மஉறிமையில் தக்ஷிணத்தின் சாமானிய மக்களை இழுத்து அழுத்த அற்புதம்தான் நடந்தாக வேண்டும். நாமஸித்தாந்த நிரூபணமாக உனக்குத்

தேவைப்படும் அறிவு நூலோடு இப்படிப்பட்ட அற்புத சம்பவமும் புரியிலேயே கிடைக்கும்.

"குழந்தாய்! நாமம், நாமம் என்று பொதுவாகச் சொன்னேனே ஒழிய எந்த நாமத்தை நீ பரப்ப வேண்டும் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்த நாமமானாலும் ஒரே பரம்பொருளைச் சுட்டுவதுதான். அன்போடு சுவைத்துச் சொன்னால் எப் பெயரும் உய்வு தரும். இருந்தாலும் பராசக்தி தனது லீலையில் பல பேதங்களை வைத்து ரஸிக்கிறாளல்லவா? அதன்படி, நீ எல்லா நாமங்களையும் பரப்ப வேண்டுமாயினும், குறிப்பாக ராம நாமத்தையும், அதற்கடுத்தபடி கோவிந்த நாமத்தையும் பிரசாரம் செய்ய வேண்டும். இது காமகோடியின் சமரஸ சங்கற்பம் எனலாம். நம் மடத்தில் ஸ்ரீசந்திரமௌளீசுவர பஞ்சாயதனம் அமைந்திருப்பதால் இது பலரால் சைவப் பிரதானமாகவே எண்ணப்படுகிறது. ஆனால் அத்வைதிகளான நமக்கு சைவ – வைஷ்ணவ பேதமேயில்லை. இதைக் காட்டவே, இங்கிருந்து ராமநாமப் பிரபாவத்தைப் பிரகாசப்படுத்த அம்மா சித்தம் கொண்டிருக்கிறாள்.

@Page 48

"இன்னொரு வேடிக்கைகூடச் செய்திருக்கிறாள். சிவ நாமத்தில் பிடிப்புள்ளவர்களுக்காக அதையும் பரப்ப வேண்டுமல்லவா? பொதுவாக வைராக்கியம், சந்நியாஸம் இவற்றுக்கு சிவன் என்றும் ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் இப்போது தேவி, துறவியான உன் மூலம் வைஷ்ணவ நாமங்களையும், கிருஉறஸ்தர் ஒருவரின் மூலம் சிவ நாமத்தையும் தமிழகத்தில் பரப்பத் திருவுள்ளம் பற்றியிருக்கிறாள்! உன்னைப் போலவே முத்திரை குத்திக் கொண்டு பிறந்த அந்த கிருஉறஸ்த மஉறாபுருஷரைப் பிற்காலத்தில் நீ சந்திப்பாய்.

"அம்மா விளையாட்டே விளையாட்டு! சிவநாமாவில் ஊறிய என்னைக் கொண்டு உன்னை ராமநாமாவில் ஊறப்போட்டு விட்டாள். எனக்கு சிவநாமம், உனக்கு ராமநாமம் என்பது போல் நம் பகவத்பாதாளுக்கு உகந்தது கோவிந்த நாமம். 'பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்! என்று மும்முறை கூறினாரே! நம் பரமாசாரியாள் விரும்பிய அந்த நாமத்தையும் நீ தழைக்கச் செய்வாயாக!"

அவர் கூறியதை எல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்ட பகவந்நாம போதல், "அம்பாள் கிருபையில், பெரியவாள் ஆசியில் அடியேனால் என்ன ஆக வேண்டுமோ அது ஆகட்டும் ; ஆக்கியவன் நான் என்ற அகங்காரம் மட்டும் எனக்கு எந்நாளும் ஏற்படாதிருக்க திவ்ய கிருபை துணை நிற்க வேணும்" என்று மனத்துள் சொல்லிக் கொண்டு ஆசானை வந்தனம் செய்தார்.

புருஷோத்தமன் அடுத்த பீடாதிபதிகளாகப் பரிணமிக்கப் போவது ஸ்ரீமடம் நீண்ட காலமாக

@page 49

எதிர்பார்த்த விஷயம்தான். எதிர்பாராத அம்சம், சந்நியாஸ ஸ்வீகாரம் காஞ்சியில் நடவாமல் காசியில் நடந்ததுதான். காஞ்சியில் முக்தி தருவது காமகோடி. காசியில் முக்தி தருவது ராம நாமம். ராம நாம மகிமைக்கெனவே தோன்றியவர் காசியிலே புதிதாக உதிப்பதுதானே பொருத்தம்?

காசி முகாமில் மடத்துக்கு வரும் அடியார்கள் சூரிய சந்திரர் போன்ற இரு ஆசாரியர்களைக் கண்டு களி எய்தினர்.

உபதேசமெல்லாம் ஆத்மபோதரே செய்வார். அவர் முன்பு தமது பிறவிப் பணியான நாமப் பிரசாரத்தைத் தொடங்க லஜ்ஜைப்பட்டு, அடங்கியே இருந்தார் பகவந்நாம போதர். "நானும் நீயும் ஒன்று" என்று குருநாதனே கூறியும்கூட, ஆசான் ஒருவரிடம் மட்டும் அத்வைதம் பாராட்டாமல் அன்பில் அடங்கி அடிமையாகக் கிடப்பதே ஆனந்தம் என்று மௌனியாக இருந்தார் நாமபோதர். முன்னிருந்த இளமைத் துடிப்பு. ஸ்வாதீனம் எல்லாமே அடங்கிவிட்டது. தமக்கு உருமாற்றம் தந்து விட்ட மகானுபாவ குருவிடம் மரியாதையில் கரைந்து வாய்மூடிக் கிடந்தார். உள்ளுக்குள்ளேயோ நாள்தோறும் தெய்விக முதிர்ச்சி பெற்று வந்தார். பரஞான மோன ஸமாதியிலேயே அவரது அந்தரங்கம் ஆணிவேர், சல்லிவேர் விடலாயிற்று. ஆனால் வெளியே தெரிந்த தண்டும், கிளையும், பூவும், பழமும் தர்மாசாரம், கர்மாநுஷ்டானம், பக்தி, நாமரஸம் ஆகியனவாயிருந்தது.

ஆம், மஉறா புருஷர் வரிசையில் சேர்ந்து விட்டார் நம் நாமபோதர். ஆயினும் 'மஉறான்', 'பெரியவாள்' என்றால் அது ஆத்மபோதரே எனக்கொண்டு, தாம் சிறியரில் சிறியராக ஒதுங்கி நின்றார்.

@Page 50

பார்த்தார் குரு. தம் சந்நிதானத்தில், 'தலை இருக்க வால் ஆடலாவது?' என்று சீடர் பேசாதுதான் இருப்பார் என்று புரிந்து கொண்டார். ஆனாலும் சிஷ்யர் ஜன்மப் பணியைத் தொடங்கச் சந்தர்ப்பம் வந்து விட்டது என உணர்ந்தார். தம்மால் அப் பணி தடைபடக் கூடாதெனக் கருதினார்.

"அப்பாநாமபோதா! இந்த வட தேசம் நாம ருசியில் தளிர்ப்பதைக் காணக் காண, தமிழ்நாட்டை இன்னும் வாடவிடக் கூடாது என்று உணர்கிறேன். நான் இங்கேயே சஞ்சாரம் செய்கிறேன். நீ புரி ஜகந்நாத மார்க்கமாகத் தமிழ் நாட்டுக்குச் சென்று உன் காரியத்தைத் தொடங்கு. ஜய விஜயீ பவ!" என்றார்.

தாய்ப் பசுவிடம் பிரியாவிடை கொண்டது கன்று!

ஒட்ட வேண்டிய போது ஒட்டுவதும், வெட்ட வேண்டியபோது வெட்டுவதுந்தானே மகான்கள் காரியம்!

மடத்துப் பரிவாரம், அடுத்த பீடாதிபதி என்பதற்கான அந்தஸ்துச் சின்னம் எதுவும் இன்றி தன்னந்தனியாகப் புறப்பட்டார் நாமபோதர். ஜகந்நாத புரியை அடைந்தார். எத்தனையோ ஆண்டிப் பிரதேசிகளில் ஒருவராக, உண்மைத் துறவியாதலின், பீடத்து இளவரசு என்ற பெருமிக ஸ்தானத்தைவிட அநாமதேய ஆண்டித் தன்மைக்கே அவர் அவாவினார்.

"கிருஷ்ணா கிருஷ்ணா" என்று கூவிக்கொண்டு, தன்னோடு உலகையும் சேர்த்துக் கண்ணனின் நீல மோகனத்தில் ஆழ்த்திப் பித்தாக்கிய ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், "என் நீல மணாளன்" என்று சொல்லிக்

@ Page 51

கொண்டு பாய்ந்த மஉேறாததி (வங்காள விரிகுடா) க்கரையில் வந்து நின்றார் நாமபோதர். ராம நாமாவுக்குக் காசி எனில், கோவிந்த நாமாவுக்குப் புரிதானே தலைநகரம் என்றெண்ணினார். அந்த நாமப் பெருங்கடலில் – மஉறா உததியில் – முங்கிக் களித்தார்.

சமுத்திரத்தில் ஸ்நானம் செய்கையில் சைதன்யரின் நினைவோடு, 'ஆபூர்யமாணம் அசல ப்ரதிஷ்டம் ஸமுத்திரம்' என்ற வாக்கும் ஞானஸாகரன் நினைப்பும் வந்தன.

'இது கீழ்க்கடல், பக்தியில் கீழே கீழே பணிந்து சென்ற சைதன்யர் முக்தி இன்பம் கண்ட கடல், ஞானத்தில் மேலே சென்ற ஞானஸாகரன் நர்மதை வாயிலாக மேலைக் கடலில் போய்ச் சேர்ந்திருப்பான். ஆனால் அந்த ரத்னா கரமும் இந்த மஉேறாததியும் உண்மையில் வேறுவேறா? நடுநடுவே உள்ள நிலத்திட்டுகளால் வெவ்வேறு போல் காணும் கடல்கள் உண்மையில் ஒரே நீர்த்திரள் தானே? ஞானி, உன் ஞானத்தையே

என் பக்தியாகக் கொண்டு, நீயே நானாக அதில் திறைத்தாடுகிறேன். உனக்காக என் அழுகை அன்றே நின்றுவிட்டாலும், ஏன் நின்றது என்று எனக்கே தெரியாமல்தான் இருந்தது. இப்போதுதான், ஸகல தீர்த்தங்களும் பிறந்து முடியும் ஸாகரத்தில் முழுகும் போதுதான், ஏன் நின்றது என்று புரிகிறது!'

அண்ணன் பல பத்ரனும், தங்கை ஸுபத்ரையும் இரு மருங்கு நிற்க நடுவே விளங்கும் ஜகந்நாதனை, புருஷோத்தமனைத் தரிசனம் செய்து கொண்டார். பூர்வாசிரம புருஷோத்தமர். இரவு ஆலயம் மூடும் வரை அங்கேயே திவ்யபோதத்தில் இருந்தார். கோவிந்த நாம ரஸாயனத்தைத் தம்முள் இறக்கிக் கொண்டார்.

@Page 52

'நாம கௌமுதி'யைப் பெறுவதற்கு, நள்ளிரவிலே லக்ஷ்மீதர கவியின் வீட்டுக்குச் சென்று தொந்தரவு செய்ய வேண்டாம் எனக் கருதினார். ஏதோ ஒரு வீட்டுத் திண்ணை ஓரத்தில் அப்படியே கட்டையை நீட்டி நிச்சிந்தையாக நித்திரை கொண்டார்.

நாமம்தான் ஒருத்தரை எப்படித் தாழ்ந்து குழைந்து போகச் செய்கிறது? நல்ல யௌவனமிடுக்கு கொண்டவர். தாம் ஒரு பீடாதிபத்திய வாரிசு என்று இறுமாப்பு இம்மியுமின்றி எங்கோ ஒரு திண்ணை மூலையில் அநாமதேயமாக ஒடுங்கி உறங்கினார். நாமமோ அப்போதும் அவருள் விழித்துக் கொண்டிருந்தது!

கதவை இடிக்கும் ஒலி.

பகவந்நாமர் விழித்துக் கொண்டார். ஆயினும் அசக்தியால் எழுந்திராமல், படுத்தவாறே கவனித்தார்.

வீட்டுக்குரியவர் கையில் விளக்குடன் வந்து கதவைத் திறந்தார்.

வெளியே இருவர். அவர்களில் ஒருவர் கதவைத் தட்டிய பிராமணர். மற்றது ஒரு பெண்மணி. வீட்டு ஆளோடியைக்கூட மிதியாமல், தெரு ஓரத்தில் நிற்கிறாள். தலையோடு கால் கறுப்புத் துணியால் அவள் போர்த்திக் கொண்டிருப்பதிலிருந்து துருக்கப் பெண்மணி என்று ஊகிக்க வேண்டியுள்ளது. அவள் எப்படி ஆசாரப் பிராமணனோடு வந்தாள்?

விளக்கொளி காட்டிய வீட்டுக்காரர் நல்ல சாந்தராகவும் தேஜஸ்வியாகவும் இருந்தார்.

@Page 53

கதவைத் தட்டியவர் அவருக்கு எண்சாணும் நிலம் தோயத் தண்டனிட்டார். கண்ணீரும் கம்பலையுமாக, "ஸ்வாமி! ஒரு மகத்தான தோஷம் நீங்குவதற்கு, இடுக்கண் தீருவதற்குத் தாங்கள் தான் கதி" என்று பிரார்த்தித்தார்.

"ஐயா, பதறாமல் விஷயத்தைச் சொல்லுங்கள். ஸ்ரீராமன் பரிகாரம் தராமலும் போவானா என்று பார்க்கலாம்" என்று பரிவோடும் பணிவோடும் கூறினார் வீட்டுக்காரர்.

@Page 54

4

## சந்தன தடாகம்

வந்த மனிதர் விம்மினார்.

"விஷயத்தைச் சொல்லத்தான் வேண்டும். எத்தனை கசப்பானாலும் தங்களிடம் விண்டு கூறத்தான் வேண்டும்" என்ற பீடிகையுடன் தொடங்கினார்.

"ஸ்வாமீ! அதோ முக்காட்டுக்குள் அழுகையில் குலுங்கிக்கொண்டு நிற்கிறாளே, அவள் துருஷ்க ஸ்திரீ அல்ல. அவள் சாக்ஷாத் என் தர்மபத்தினி. நாங்கள் தமிழ்நாட்டவர். காசி யாத்திரை கிளம்பினோம்.

"ஜகத்குரு ஆத்மபோதாசார்யாளிடம் ஆசி பெற்றுத்தான் புறப்பட்டோம். ஆனால் ஸ்வாமி, ஏனோ அவர் எங்களிடம் மந்திராக்ஷதை தரும்போதே, இவள் கையை சரியாகப் பிடித்து வாங்காததால், அவ்வளவும் சிதறி விழுந்து விட்டது. எங்களுக்குச் சுருக்கெனத் தைத்தது. இவள் திரட்டி எடுத்துக் கொண்டாள். ஆசாரிய ஸ்வாமிகள், 'சிதறினாலும் திரட்டியாகி விட்டதல்லவா? அசுபமும் சுபமாக முடியட்டும் – உங்களுக்கு மட்டுமல்ல, ஊர் உலகத்துக்கே!' என்று கூறி அனுப்பிவைத்தார்.

"பாமனி ராஜ்யத்தின் வழியாக வரும்போது ஒரு சத்திரத்து வாசலில் படுத்திருந்தோம். அங்கே ஆட்சி புரியும் துருக்கர் செய்யும் துராக்கிரகம் தாங்கள் அறிந்ததுதானே ? ஸ்வாமீ, பாபிகள் இவளைத் தூக்கிப் போய்விட்டார்கள். கையாலாகாத நான் என்ன செய்ய இயலும்? பல நாள்கள் பலவாறு யோசித்துத் தவித்தேன்.

@page 55

அப்புறம், காசிக்குப் போய் கங்கையில் விழுந்து பிராணத் தியாகம் செய்து விடலாம் என்று முடிவு செய்தேன். புறப்பட்டேன், பைத்தியம் போல் எங்கெங்கோ எப்படியெப்படியோ சுற்றிச் சுற்றிச் சென்றேன்.

"பல மாத யாத்திரைக்குப் பின் ஒரு நாள் ஓர் ஆற்றில் ஸ்நானம் செய்து கரையேறினேன். அப்போது இவள், இப்போது பார்க்கிற மாதிரியே, துருஷ்க முறையில் முக்காட்டுடன் எனக்குச் சிறிது தூரம் வரையில் வந்து நமஸ்கரித்துவிட்டு ஊேறாவென்று அழுதாள். முதலில் எனக்கு யாரென்றே தெரியவில்லை. குரலைக் கேட்டபின் தான் அடையாளம் புரிந்தது. துடித்தேன். இவள் சொன்னாள்.

"அந்தப் பாவிகளை ஏமாற்றிவிட்டுத் தப்பி ஓடி வந்து விட்டேன். சுல்தான் ராஜ்யத்தைத் தாண்டி வந்து விட்டதால் இனி அவர்களின் பயமில்லை. என்னைத் திரஸ்கரிக்காமல் ஏற்க வேண்டும்" என்று முறையிட்டாள். "இப்படிக் கேட்க எனக்கு யோக்கியதையே இல்லை. பாவிகள் எனக்குச் செய்த மானபங்கம் கொஞ்ச நஞ்சமல்ல. என் காதில் ஏகப்பட்ட துவாரங்களைக் குத்தி வளையங்கள் மாட்டிவிட்டார்கள். பழைய சேலையைக் களைய வைத்து கரும் புடவை உடுத்திச் செய்து, அதன்மீது இந்தக் கறுப்புப் பர்தாவைப் போர்த்திவிட்டார்கள். ஈவு இரக்கமின்றித் திருமாங்கல்யத்தை.... விட்டார்கள். நெற்றித் திலகத்தை அழித்து, இனிமேல் குங்குமம் வைத்தாலே எரிகிற மாதிரி ஒரு திராவகத்தைப் பூசிவிட்டார்கள். ஐயோ, செய்யக் கூடாததையெல்லாம் செய்து விட்டார்கள். மகாதோஷியாகி விட்டேன். இருந்தும் சண்டாளிக்குச் சாகத்துணிவில்லையே! என்னை நீங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டாம். கண்ட துண்டமாக வெட்டிப் போடுங்கள்.

@Page 56

அது ஸ்த்ரீ உறத்தியல்ல ; சுத்திதான்' என்று அலறினாள்.

"நான் யோசித்தேன். 'நீ சொன்னதே சரி. நான் கங்கையில் விழ முடிவு செய்திருந்தேன். முதலில் உன்னைத் தள்ளிவிட்டுப் பிறகு விழுகிறேன். நாம் அளவுக்கு மீறிப் பிரேமை வைத்திருந்ததற்கு இதுதான் சரியான தண்டனை' என்றேன்.

"அச் சமயம் இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியவர் நெருங்கி

வந்தார். 'நீங்களாகவே எந்த முடிவும் எடுக்க வேண்டாம். எந்த தோஷத்துக்கும் பிராயச்சித்தம் உண்டு. புரியில் லக்ஷ்மீகாந்தர் என்ற மகாபெரியவர் இருக்கிறார். அவர் புண்ய புருஷரான லக்ஷ்மீதர கவியின் புத்திரர். அவரை சரணடையுங்கள். பிராணத் தியாகமில்லாமலே இவளது தோஷம் தீர அவர் உபாயம் தரக்கூடும்' என்று அவர் கூறினார்.

"ஸ்வாமீ ! அதன் மீதுதான், தங்கள் தலைவாசல் மிதிக்கத் தகுதியில்லாத நாங்கள் இங்கே வந்தோம். இந்த அகாலத்தில் தங்களை சிரமப்படுத்தக்கூடாது எனினும், தாங்கள் மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் எங்களுடைய தாங்கொணாத் தவிப்பின் நெரிப்பில் தங்களை எழுப்பிவிட்டோம். வேறு ஆடை இல்லாததால் துருக்கக் கோலத்திலேயே வந்துள்ள பேதையைப் பாருங்கள். குங்குமம் இடமுடியாத நெற்றி என்பதால் மட்டுமின்றி தனக்கு ஏற்பட்ட மானபங்கத்தாலும் முகத்தைக் காட்டமாட்டாமல் முக்காட்டிலிருக்கும் என் தாரத்துக்குத் தாரகம் தாருங்கள்.

"ஸ்வாமின்! தங்களிடம் ஒளிக்கவில்லை. நாங்கள் ரொம்பவும் நேசம் கொண்ட தம்பதி. மறுபடியும் சேர்ந்து

@Page 57

வாழத்தான் எங்களுக்கு உள்ளூர ஆசை. தீராப்பொறியே என்று தான் சாகத் துணிந்தோம். தகுந்த பிராயச்சித்தம் இருந்து எங்களை சேர்த்து வைத்துக் காக்க முடியுமானால் காத்தருளுங்கள்" என்று முடித்தார் வந்த அந்தணர்.

"பிராயச்சித்தம் ஏன் இல்லாமல் ?" என்று கம்பீரமாகக் கேட்டார் வீட்டுக்கரியவரான லக்ஷ்மீகாந்தர். "பாபத்திலும் கொடும் பாபத்துக்கும், மகாபாதகத்துக்கும் பிராயச்சித்தம் இருக்கவே இருக்கிறதே! ஸ்ரீராம நாமாவைத்தான் சொல்கிறேன்" என்றார்.

வந்தவருக்கு இதைக் கேட்டதும் சப்பிட்டுவிட்டது. அதை வெளிச் சொல்ல முடியாமல் பூமியைப் பார்த்தபடி நின்றார்.

லக்ஷ்மீகாந்தர் இளநகை செய்தார். "ஐயா, அவ நம்பிக்கைப் படாதீர். ஏதோ பெரிய பெரிய பிராயச்சித்தச் சடங்குகள் செய்தால்தான் விமோசனமாக்கும் என்று எண்ணாதீர்! பிரபஞ்சம் முழுவதையும் ஆக்கி, அளித்து, அழிக்கிற மகாசக்தி அநுக்கிரஉறார்த்தம் எப்படி வேண்டுமானாலும் வெளிப்படமுடியும் என்று நம்பும். இந்தப் பெண்ணும் நம்பட்டும். அந்த நம்பிக்கையோடு இவள் 'ராம ராம ராம' என்று மும்முறை தன் உயிராழத்திலிருந்து சொல்லட்டும். அந்த அக்ஷரவடிவிலேயே

மகாசக்தி வெளியாகி இவளுடைய மாசையெல்லாம் மாய்த்துத் தீய்த்து விடும். தோஷம் போயிற்று என்று இவளுக்கே ஸர்வ நிச்சயமாகத் தெரிந்துவிடும்.

"அது சரி. ஆனால் அவள் நிர்தோஷியானது உமக்கு எப்படி உறுதிப்படும் என்கிறீரா ? மேலும், 'உலகத்துக்கு அது எப்படி ஊர்ஜிதமாகும் ? ஊர் ஒப்பாவிடில் இவளை

@Page 58

எப்படிச் சேர்த்துக் கொள்வது ?" என்று நினைக்கிறீரா ? நல்லது. தோஷமும் தீர வேண்டும், தூஷணையும் தீர வேண்டும். தோஷம் போயேவிட்டது என்று ஸ்தூலமாக உமக்கும் உலகுக்கும் தெரிந்துவிட்டால், பிறகு நீர் இவளோடு குடித்தனம் செய்யத் தடையிராது. அப்படித்தானே ? ஸ்ரீராமனின் கிருபா வேகத்தில் இந்த அற்புதமும் லோகமறிய நடக்கட்டும்."

இவ்விதம் கை கூப்பி, உளம் கூம்பிக் கூறிய லக்ஷ்மீ காந்தர் தெருப்புறம் பார்த்து மொழிந்தார் ;

"அபலைப் பெண்ணே! நான் சொல்வதைக் கேள். நாளை பொழுது புலர, ஊர் எல்லையிலிருக்கும் சந்தன்தாலாப் என்ற தடாகத்துக்குப் போவோம். நீராட நிறைய ஜனங்கள் கூடியிருப்பார்கள். நீ குளத்தில் இறங்கு. தழுதழுக்கிற குரலை உறுதிப்படுத்திக் கொண்டு, ஸ்ரீராமனின் அருள் எதையும் சாதித்துவிடும் என்ற நெஞ்சார்ந்த நம்பிக்கையோடு, "பிரபோ! லோகமறிய என் தோஷம் தீர்ந்து புனிதத்தையும், மிலேச்ச சின்னம் நீங்கி வைதிகத்தையும் பெறுவதற்கு உன் மணி நாமத்தையே நம்பினேன்" என்று ஒரு கூப்பாடு போடு. எல்லார் கவனமும் உன்னிடமும் திரும்பும். ஆனால் நீ உன் கவனம் முழுவதையும் ஸ்ரீராமநாமத்திலேயே ஒருமுகப்படுத்தி மூன்று முறை உச்சாரணம் செய். பிறகு நடப்பதைப் பார்ப்போம். என்ன, செய்கிறாயா ? பிராண மூலத்திலிருந்து பிரபுவின் நாமாவைச் சொல்கிறாயா ? முழுமூச்சோடு நம்பிச் சொல்கிறாயா ?"

"அப்படியே ஸ்வாமி" என்று அவளது பணிந்த குரல் வந்தது. "என்றாலும் பலவீனையான நான் என்னையே நம்பிக்கொள்வதற்கில்லை. நாமத்தை நான்

@Page 59

நெஞ்சாழத்திலிருந்து நம்பிக் கூறுவதற்கு தேவரீர்தான் கிருபை கூரவேண்டும்" என்று தேம்பலிடை கூறினாள்.

"ஸ்ரீ ராமா!" என்றார் லக்ஷ்மீகாந்தர். அதை அவர் இதயக்கருவிலிருந்து மொழிந்த பாங்கிலேயே எத்தனை ஆறுதல்!

அவர்கள் மறுக்க மறுக்க அவர்களை இடைகழியில் அமர்த்தி உண்பித்தார். "திண்ணையில் படுத்து நிம்மதியாகத் தூங்குங்கள். அப்பன் ராமன் இருக்கிறான்" என்று கூறிவிட்டு உட்சென்றார்.

திண்ணையின் மறுகோடி இருளிலிருந்து இவ்வளவையும் கவனித்த நாமபோதல், 'நாம கௌமுதி'யை இயற்றியவரின் இல்லத்துக்கே தம்மைக் கொண்டு சேர்த்திருக்கும் இறையருளை வியந்து கொண்டார். தம் குருநாதர் கூறிய அற்புதமே மறுதினம் நடக்கவிருக்கிறது என்று திட்டமாக விளங்கிக் கொண்டார்.

இருள் மாசை அநாயாசமாகத் துடைத்தெறிந்து கதிரவன் குணதிசையில் பொற்குடமாக உதித்தான்.

இருள் மூடிய அந்தண தம்பதி சந்தன் தாலாப்புக்குப் புறப்பட்டனர், லக்ஷ்மீகாந்தரோடு.

இவர்களுக்கு முன்பே, பிராம்ம மஉறூர்த்தத்திலேயே தீர்த்தக் கரைக்கு வந்து நீராடி, நிமலனை நினைந்து அமலமாக அமர்ந்திருந்தார் நாமபோதர், அநாமதேயராக.

சிறுகச் சிறுக ஜனங்களும் வந்து சேர்ந்தனர்.

"இதென்ன, துருக்கப் பெண்மணியை லக்ஷ்மீகாந்தர் அழைத்து வருகிறாரே!" என்று அவர்களில் பலரது கவனம்

@Page 60

அப் பேதையிடமே திரும்பியது.

அவள் திருக்குளத்துள் இறங்கினாள்.

அன்று அன்னை ஜானகி தனக்கு நேராத தோஷத்துக்காக, மனித இனத்தை விடத் தாழ்வாகக் கருதப்படும் குரக்கரும் அரக்கரும் காண அக்கினிக்குள் முழுகினாள். அதற்குக் காரணமாக இருந்தவனின் நாமத்தை நம்பியே இன்று, மெய்யாலும்

தோஷியான இவள், எரிக்கும் நெருப்பில் அல்ல, குளிர்பூம் புனலில், சந்தனப் பெயரே கொண்ட தடாகத்தில் இறங்குகிறாள். ஸ்ரீராமா! உன் ரூபத்தில் தீயின் கடுமை எப்போதேனும் கூடினாலும், உன் நாமம் மட்டும் எப்போதும் சந்தனமாகத்தான் இருக்குமா?

சந்தன் தாலாப்பில் அமிழ்ந்து தலையைத் தூக்கினாள் அபலை. அபலைதானா? இப்போது அவளுக்கு எல்லையில்லா பலம் வந்துவிட்டது. தெளிவு பிறந்துவிட்டது. தெம்பு உதித்துவிட்டது. நாமப் பிரபாவம் ஜகந்நாத க்ஷேத்திரத்திலிருந்து ஜகமெல்லாம் பரவ வேண்டும் என்று தெய்வ சங்கற்பம் இருந்ததால், அவளது கண்டம் தழுதழுத்துத் தடுமாறாமல் தங்கமணியாகக் கணீரென்று ஒலித்தது.

"பிரவு, நீ பதித பாவனன் என்பதைப் பார் அறியப் பிரகடனம் செய்வாய்! இந்தப் பதிதைக்கு உலகம் காணமிலேச்சச் சின்னங்கள் நீங்கி, வைதிகமான செளமாங்கலியம் சித்திப்பதற்கு உனது மணி நாமம் அருளட்டும்!

"ராம ராம ராம!"

@Page 61

காலைக் காற்றில் சந்தன தடாகத்தில் சிலு சிலுத்த அலைகளின் ஒலிக்கு மேலாக நாலு புறப்படித்துறைகளிலும் அவள் குரல் மோதி எதிரொலித்தது. ஆவியின் வேரிலிருந்து அவள் கூவிய ராம நாமம் தேன் மழையாகத் தெளித்தது. இதுவரை அவளை கவனியாதார் உட்பட அத்தனை மக்களின் கண்களும் அவளிடமே பதிந்தன.

அற்புதம் நடந்தது நாம மகிமையாலே!

உள் கருமை கருகியது அவளுக்கே தெரிந்தது. வெளியிலும் கறுப்புப் பர்தா மறைந்தது. பல்லாண்டுகளுக்கு முன் மாங்கலிய தாரணத்தின்போது கொசுவம் வைத்து உடுத்தியிருந்த அதே மஞ்சள் கரையிட்ட அரக்குச் சேலை அணிந்து செளபாக்கியவதியாக நின்றாள் 'துருஷ்கி'! துருஷ்கியா? துருக்கர் அறுத்தெறிந்த மங்கல நாண் இதோ முன்னிலும் பளிச்சென அவள் கண்டத்தில் துலங்குகிறதே! நெற்றியிலோ சதையோடு சதையாக, எந்தத் திராவகத்தாலும் அழிக்க வெண்ணாததாகச் செங்குங்குமம் சோதி வீசுகிறது!

இவற்றுக்கு மேலான அற்புதம்! அவளது காது மடல் முழுவதும் துருக்கர் பல

துளையிட்டு வளைகளை மாட்டியிருந்தனரே, அந்தத் துவாரங்கள், வளையங்கள் யாவும் மாயமே மறைந்து விட்டன. ஆயினும் உலகுக்கு இந்த அற்புதத்தின் சான்றாக, துளைகள் இருந்த இடங்களில், சருமமே பொற்பொட்டுகளாக மின்னுகிறது.

அவளது முகத்திலும் தோற்றம் முழுதிலும் அதிபவித்திரமான காந்தியும் சாந்தியும் மேவிவிட்டன.

@Page 62

"ஜேய் ஸ்ரீ ராம்!" என்று தொண்டை திக்கக் கேவினார் லக்ஷ்மீகாந்தர்.

"ஜேய் ஸ்ரீ ராம், ஜேய் ஸ்ரீராம்! பதிதபாவன ஸீதாராம்!" என்று சகல ஜனங்களும் ஆரவாரம் செய்தனர் ; ஆஉறாகாரம் செய்தனர்.

அந்தண மாதின் உணர்ச்சிகளை எவரே கூற இயலும்? தீர்த்தத்திலிருந்து வெளி வந்து, தன் பாபம் தீர்த்த நாமத்தில் நனைந்து லக்ஷ்மீகாந்தரின் முன் நன்றியின் உருவாக நமஸ்கரித்தாள்.

தம்பதியாக வணங்கவேண்டும் என்பதால் அந்தணரும் உடன் தண்டனிட்டார். இருந்தாலும் அதே போதில் இருவரின் மனத்திலிருந்தும் தாம்பத்திய எண்ணமே விலகிவிட்டது. ராமன் உள்ள இடத்தில் காமன் இருப்பதில்லையன்றோ ?

இதையே அவள் லக்ஷ்மீகாந்தரிடம் சங்கேதமாக, "ஸ்வாமீ! நான் விரும்பியதற்கும் மேலே என்னை ஐயனின் நாமம் புனிதப்படுத்திவிட்டது. இனி உலக வாழ்வே எனக்கு ஒட்டாது. பெயரின் பெருமையே பெருமை!" என்று கண்ணீர் சொரிந்து கூறினாள்.

அவனது பதியும், 'ஆச்சரியம் ஸ்வாமின்! இவளாவது நாமத்தை உள்ளுருகிச் சொல்லிப் பயன் பெற்றாள். ஆனால் இந்த வைபவத்தை பார்த்த பாக்கியத்தாலேயே, எனக்கு இவளை மாதாவாகத்தான் பார்க்கமுடிகிறது. எல்லாம் தேவரீரது அருள்!" என்றார்.

"நாமத்தின் சக்தி என்று சொல்லும். அதில் நீசமான இச்சை யாவும் நீர்த்து, நீற்றுப் போகும். இதுதான் அற்புதத்தில் பெரிய அற்புதம்" என்று உளம் கரைந்து கூறினார் லக்ஷ்மீகாந்தர்.

@Page 63

இதுவரை 'யாதும் சுவடு படாமல்' அற்புதத்தைக் கண்டு விம்மி விதிர்த்த நாமபோதர் இப்போதுதான் வெளிவந்து லக்ஷ்மீகாந்தருக்குத் தம்மை அறிவித்துக் கொண்டார்.

"ஆஉறா, தாங்கள் வந்துவிட்டீர்களா ? என் பிதா லக்ஷ்மீதரர் செய்த தவம் பலித்துவிட்டது. அவர் இயற்றிய 'நாம கௌமுதி' தங்களுக்கெனவே காத்துக் கொண்டிருக்கிறது. ஓர் இரவு என் இல்லத்தில் ஸத்காரம் பெறாமலே அஜ்ஞாத வாசம் செய்து சோதித்து விட்டீர்களே! அதற்கு நஷ்ட ஈடு செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார் லக்ஷ்மீகாந்தர்.

லக்ஷ்மீகாந்தரது இல்லத்தை அவருடன் சென்றடைந்தனர் நாம போதரும், பிராமண தம்பதியும்.

"அம்மா! ஸ்ரீராம நாமமே மூர்த்திகரித்த காமகோடி பீடத்து இளவரசு நம் கிருஉறத்துக்குப் பொன்னடி சார்த்துகிறார்" என்று கோஷித்தபடி வீட்டுள் நுழைந்தார் லக்ஷ்மீகாந்தர்.

வயதிலும் பக்தியிலும் பழுத்த பழமான அவரது தாய் உள்ளேயிருந்து வந்து நாமபோதரின் பாதத்தில் பணிந்தாள்.

நாமபோதர், "அம்மா, நீ மகா பாக்கியவதி. உத்தம பதியை அடைந்தாய், உத்தம ஸுதனைப் பெற்றாய். நாம மகிமையை வெளிப்பட ராமன் உன் மணி வயிறு வாய்த்த இவரைக் கருவியாக்கிக் கொண்டான். ஆமாம், அந்த அற்புதம் காண நீ ஏன் வரவில்லை ? உன்னை இவர் அழைக்கவில்லையா ?" என்றார்.

@Page 64

"எல்லாம் அழைத்தான்" என்று அசுவாரஸ்யமாகச் சொன்னாள் மூதாட்டி.

நாமபோதருக்கு அந்த அசிரத்தை விந்தையாக இருந்தது. விந்தையை அதிகமாக்கி அவள், "குருஜீ! எனக்கு இவன் காரியம் ரொம்ப அதிருப்தி" என்றாள்.

"அதிருப்தியா ? நிஜமாகவா ?"

"ஆமாம். நேற்று ராத்திரி இவன் விதித்த பிராயச்சித்தத்தைக் கேட்டேன். அதில் இரண்டு விஷயம் எனக்கு அதிருப்தி."

"புரியவில்லை, தாயே!"

"புரிய வைக்கிறேன், ஸ்வாமீ, முதலாவதாக மும்முறை ராம நாமாவைச் சொல்லச் சொன்னானே, அதுவே நாம அபசாரம்தான். அப்பன் பெயரை ஒரு முறை உணர்ந்து சொன்னால் போதாதோ ? பஞ்சமா பாதகமும் பஞ்சாகிப் பறந்தோடுமே! மூன்று நாமா தேவைப்படும் அளவு பாபம் பண்ணுகிறவர் மூவுலகிலும் இருக்க முடியாதே! இவனுக்கே நம்பிக்கைக் குறைவால்தான் திவ்ய ஔஷதத்தை மிகையளவில் கொடுத்துவிட்டான். இரண்டாவதாக, இவனுக்கே நம்பிக்கை போதாதபோது அந்தப் பெண்ணிடம், 'நம்பிச் சொல், நம்பிச் சொல்' என்று இவன் கூறியது நாமத்தை நம்பிக்கையோடு சொன்னால் தான் பலன், இல்லாவிட்டால் நிஷ்பலன் என்றுதானே இந்த முட்டாள் நினைக்கிறான் ? எப்பேர்ப்பட்ட அபசாரம்! நெருப்பு சுடும் என்று நம்பித் தொட்டால்தான் அது சுடுமா ? அம்ருதம் தித்திக்கும் என்று நம்பி உண்டால்தான் அது இனிக்குமா ? என் பர்த்தா எழுதிய 'நாம கௌமுதி' யை எத்தனை முறை பாராரயணம் செய்தும் இவன் பயன்

@Page 65

பெறவில்லை. தாங்கள் என் ராமசந்திரமூர்த்தி போலவே இருக்கிறீர்கள். அதைத் தங்களிடமே தந்து விடுகிறேன்."

நாமபோதர், லக்ஷ்மீகாந்தர் இருவருக்கும் கிழவியின் கோபம் ஆனந்தமே தந்தது.

லக்ஷ்மீகாந்தர் அன்னையை வணங்கினார்.

"உன் பக்தி எனக்கும் ஸித்திக்க ஆசீர்வாதம் செய்யம்மா" என்றார்.

மந்திராக்ஷதையாக அவள் கண்களிலிருந்து முத்துக்கள் மகன் மீது சிதறின.

"நாம கௌமுதி" சுவடிக்கட்டைப் பூஜையிலிருந்து எடுத்துவந்த லக்ஷ்மீகாந்தர், "கன்னிகையை வரனிடம் ஒப்புவிப்பது போல், இந்தக் குலதனத்தை யதிவரரான தங்களிடம் சமர்ப்பித்தேன்" என்றார்.

நாமபோதர் நவ மல்லிகையாக நகைத்து, "மோகத்திலிருந்த ஒரு தம்பதியை சந்நியாசிகள் போலாக்கினீர். சந்நியாசிக்குக் கன்யாதானம் செய்கிறீர!" என்றார்.

மகா பெரியவர்களுக்கே உரிய பொருள் பொதிந்த நகைச்சுவை நமது சரித நாயகருக்கு வந்து விட்டது கண்டு லக்ஷ்மீகாந்தர் வியந்தார்.

நாமபோதரோ கனத்த உணர்வில், சிக்கிக்கொள்ளும் குரலில், "நாமத்தை நான் கலியாணம்தான் செய்து கொண்டு விட்டேன். ஆனால் நான் மணமகனாகி அதைக் கன்யாதானம் பெறவில்லை. நாமம்தான் வரன் ; நானே கன்னி! ராமன்தானே புருஷன், புருஷோத்தமன் ?" என்றார்.

@Page 66

பூர்வாசிரமத்தில் இவரே புருஷோத்தமர்தான். இப்போது பௌருஷம் எல்லாம் போய்க் கனிவு மயமாகிவிட்டார். மீரா சொன்னாற்போல் அந்த ஒரே பரமபுருஷனுக்குரிய கன்னியாகிவிட்டார். நாமம் செய்த ரஸவாதம்!

"இன்று இங்குதான் பிக்ஷை" என்று லக்ஷ்மீகாந்தர் பிரார்த்தித்தார்.

"நீர் கேட்காவிட்டாலும் அப்படித்தான் உத்தேசம். துருக்கர் தூக்கிப்போன ஸ்திரீயின் கையால் சமைத்ததே இன்று நமக்கு பிக்ஷை" என்றார் நாமபோதர்.

அது அவளிடம் நாமம் செய்த ரஸவாதத்தின் மகிமை.

அந்தண தம்பதியிடம் நாமபோதர், "நீங்கள் தான் இந்த சந்நியாசிக்கு ரொம்ப உறவு. என் போலவே கங்கையில் விழப் போனீர்கள். என் மாதிரியே நாம கங்கையால் சுத்தீகரிக்கப்பட்டீர்கள் அல்லவா ? அத்தியந்த பந்துவானதால் நீங்கள் இனி என்னுடனேயே இருக்க வேண்டும். விளையாட்டில்லை, காரணத்தோடுதான் சொல்கிறேன். நாமத்தின் சக்தியை மக்களுக்கெல்லாம் காட்டி அதில் அவர்களை ஈடுபடுத்த இந்த அம்மையே பிரத்தியக்ஷப் பிரமாணம், நிதரிசனமான நிரூபணம். இவள் நெற்றியில் உள்ள அழியாத சிவப்புப் புள்ளியும், காதோரத்திலுள்ள மறையாத பொற் புள்ளிகளும் போகிற இடமெல்லாம் நம் பிரபுவின் சிவந்த சித்தத்தை, பொன்னான இதயத்தைப் பறைசாற்றும் ; நாமம் செய்யும் அற்புதத்தை நானிலத்தில் நிலைநாட்டும். கங்கா யாத்திரையை முடித்துக் கொண்டு காஞ்சி மடத்துக்கு வந்துவிடுகிறீர்களா ?" என்றார்.

@Page 67

"தாங்களே எங்களுக்கு கங்கை, கங்காதரன், கங்கோத்பவன் எல்லாமும், நாங்கள்

காசிக்குப் போக வேண்டியதேயில்லை. இந்த க்ஷணத்திலிருந்தே தங்களோடு இருக்கிறோம்" என்றனர் அத் தம்பதி.

"அப்படியே" என்று ஆமோதித்தார் நாமபோதர்.

ராமபாணம் போல, ஜகந்நாக புரியிலிருந்து அத்தம்பதியருடன் காஞ்சீபுரிக்கு வந்து சேர்ந்தார் நாமபோதர்.

காமாக்ஷியின் முன் கரைந்து நின்றார். "காம ஆட்சி குறைய நாம ஆட்சியைத் தொடங்கப் போகிறாயா தாயே ?" என்று கேட்டார்.

"நீ தான் கொடியேற்ற வேண்டும்" என்று காமாக்ஷி தன் பொங்கும் சிரிப்பினாலேயே தெரிவித்தாள்.

அம்பாளிடமிருந்து சக்திவேல் பெற்றுப் போருக்குப் புறப்பட்ட முருகனைப்போல், புது உற்சாகத்துடன் அஉறிம்ஸைப் போருக்குக் கிளம்பினார் நாமபோதர்.

@Page 68

## 5
## ஸர்வ தீர்த்தம்

ஒரு தீபத்தின் முன்பு, அதிலிருந்தே ஏற்றப்பட்ட இன்னொரு தீபம்! காமாக்ஷியைத் தரிசித்துக் கொண்டு, காம கோட்டச் சுற்றுப் பிராகாரத்திலுள்ள பகவத் பாத சங்கரர் சந்நிதியில் வந்து நின்றார் போதேந்திரர்.

ஸகல ஸித்தாந்தங்களுக்கும் இடம் கொடுத்து, அவற்றை சுத்த உருவில் புதுப்பித்த மேதை மேருவின் சந்நிதி.

வெறும் சந்நிதியா ? அல்லது அவரது ஜீவ ஸமாதியா ? இதோ அந்த ஜீவ ஜோதியின் கீற்றொன்று பகவந்நாம போதருள்ளே பளீரெனப் பாய்ந்து... ஆஉறா, தேவ ரகசியமொன்றை அவரது அகத்துள் திரை நீக்கி வெளியாக்கி விட்டதே!

பகவந்நாமருக்குப் புல்லரிப்பு என்பதற்கும் மிக மிக மேம்பட்ட எதுவோ ஒன்று உண்டாகி அவரது சரீரம் வெடவெடவென ஆடியது. கண்கள் தாரை பெருக்கின.

மிகுந்த பிரயாசையுடன் தம்மைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

ஸர்வ தீர்த்தக்கரையில் உள்ள முக்தி மண்டபத்திற்குச் சென்றமர்ந்தார்.

@Page 69

காசியில் முகதி மண்டபத்தில் அமர்ந்து தான் தமது இணையற்ற பாஷ்யங்களை எழுதினார் பகவத்பாதர். பகவந்நாமர் காசியில் துறவு பெற்று. காஞ்சி முக்தி மண்டபத்திலிருந்து கொண்டு தமது நூற்பணியைத் தொடங்கினார்.

குரு ஆக்ஞைப்படி, நாம கௌமுதியைக் கரதலப் பாடமாக்கிக் கொண்டு, அதை அடியொற்றியும், விஸ்தரித்தும் நாம சித்தாந்தத்தைப் பற்றித் தாமே லக்ஷம் சுலோகம் செய்யலானார். அக்ஷரலக்ஷம் பெறும் லக்ஷம் சுலோகங்கள்! அக்ஷரபுருஷனின் அருளால் கொண்டலாகக் கொட்டிய சுலோகங்கள்! இவை நாமாம்ருத ரஸோதயம், நாம ரஸாயனம், நாம ஸூர்யோதயம், நாமதரங்கம், நாமார்ணவம், உறரிஉறர பேத திக்காரம். உறரிஉறராத்வைத பூஷணம், மூர்த்த ப்ரஉற்ம விவேகம் என்று எட்டு நூல்களாகப் பரிமளித்தன.

ஆத்மபோதரின் ஆணைப்படியே, முதல் குருவாக கீர்வாணேந்திரருக்கு வந்தனத் துதி படைத்தார் நாமபோதர்.

நாம ஜபமே ஞானத்தை நல்கி, அந்த ஞானவாயிலாக அத்வைத முக்தியும் அருளும், மற்ற புருஷார்த்தங்களையும் வழங்கும் என்பதை இந் நூல்கள் சுருதி, ஸ்மிருதி, புராணப் பிரமாணங்களால் நிலைநாட்டின. ஒரு நாமத்தில் ஒருவருக்கு ருசியிருப்பதால், ஏனையவற்றை நிந்திக்கலாகாது என்று உபதேசித்தன. குறிப்பாக சிவ–விஷ்ணு பேதத்தை ; அவர்களது அபேதத்தை போதித்தன.

ஒரு முறை நாமம் ஓதினாலே பாபம் தீரும் என்றால், சதாகால ஜபம் ஏன்? ஒரு முறை நாமத்தை உருகிச் சொன்னாலே பழைய பாபம் போவது உண்மைதான்.

@Page 70

ஆனால் பராசக்தி வேசில் ஜீவனின் தனி மனத்தைத் தன்னில் ஐக்கியமாக்கிக் கொள்ளாததால், மனித மனம் புதிதாகப் பாவங்களை எண்ணுகிற ஊேறது எளிதில் மறைவதில்லை. இதற்காகத்தான் நாமத்தை ஓயாமல் நாவில் புரட்டிக்கொண்டும், நெஞ்சில் உருட்டிக் கொண்டும் இருக்கவேண்டும் என்பது ; அதோடு, சுத்தீகரிப்பது

ஒரு பக்கம் இருக்கட்டும் ; சுகித்திருப்பது அதைவிட விரேஷமல்லவா? நாமச் சுவையில் சுகிக்க அறிந்த பின் சதாகால ஜபம் தவிர வேறெதை மனம் நாடும்? சொல்லச் சொல்லத் தெவிட்டா தேவாமுது அல்லவா இறை நாமம்?

இப்படியெல்லாம் விண்டு விளக்கி நூல்களை எழுதியவரே, அவற்றின் சத்தியத்துக்குப் பெரிய நிரூபணமாக இருந்தார். "ராமா, கோவிந்தா, மஉறாதேவா, உறர உறரா" என்று அவர் ஆழ நனைந்து சொல்லக் கேட்கும் ஆனந்தத்தை, பாவனத்தை எழுத்தில் எப்படி வடிப்பது?

பனிப் படலமிடும் கண்களால் ஸர்வ தீர்த்தத்தைப் பார்ப்பார். "புண்ணிய தீர்த்தம் என்று எங்கெங்கோ சென்றாலும், அத்தனையும் சேர்ந்த ஸர்வ தீர்த்தமோ, அப்பனே ராமா, உன் நாமந்தான்!" என்பார்.

தீர்த்தம் யாவும் நாமகீர்த்தனத்தில் கோடியிலொரு பங்குமாகாது என்றே விச்வாமித்ர ஸம்உறிதையும் கூறும்

விச்ருதானி பஉறூன்யேவ தீர்த்தானி விவிதானி ச!
கோட்யம்சைர் நாபி துல்யானி நாமகீர்த்தனதோ உறரே : !!

வாஸ்தவமாகவே அப்படிப்பட்ட ஸர்வ தீர்க்கத்தில் பகவந்நாம போதர் ஊறியிருந்ததுதான் நாமத்தை விசேஷமாகப் பிரசாரம் செய்து விட்டது.

@Page 71

எழுத்திலே வர முடியாத நாமபோதரின் அநுபூதியே பெரிய போதனையாக இருந்து அவர் காலத்தில் நாம மஉறிமையைப் பரப்பிற்று என்பது உண்மைதான். ஆனால் தரிசனமாத்திரத்தில் மஉறாபுருஷரின் அநுபூதியால் கவரப்பட்டு நாம மார்க்கத்தில் ஈடுபட எளியோராலும் பக்குவிகளாலுந்தானே இயலும் ? அக்கால வெற்றறிவினரும், அதோடு பிற்காலத்தோரும் அவரை தரிசித்து, அதன் மூலமே அவரது ஸித்தாந்தத்தில் ஆழங்காற்பட முடியாதே! இவர்களை உத்தேசித்தே அவர் அநுபூதியை எந்த அளவுக்கு அறிவு மூலம் உணர்த்த முடியுமோ அப்படிச் செய்வதற்கே அரும்பாடுபட்டு லக்ஷம் கிரந்தங்கள் அருளி நாம ஸித்தாந்தத்தை ஸாங்கோபாங்கமாக விளக்கினார்.

நாம ஸித்தாந்தம் என்பது என்ன என்று இங்கு சற்று ஆர அமரப் பார்ப்போம். இதைத் தெரிந்து கொள்ளாவிடில் இச் சரிதை பூர்த்தியானதாகாது.

சித்த சுத்தி பெற்றாலே ஆசைகள் அழிந்து, அகங்காரம் அழிந்து, ஜீவன் பிறவிச் சுழலிலிருந்து தப்ப முடியும். சித்தசுத்தி பெற வழியாகவே வைதிக கர்மங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பலனை எதிர்பார்க்காமல் யக்ஞாதி கர்மாநுஷ்டானங்களில் ஈடுபட ஈடுபடச் சித்தம் சுத்தமாகும். பரோபகாரமும் இப்படிச் சித்தத்தைத் துலக்குவதே. எந்த மத அநுஷ்டானமாயினும் அதற்கு அடிப்படை 'நான்', 'எனது' என்கிற பற்று நெகிழ்வதுதான். பக்தியும் பூஜையும் இவ்வாறு எண்ணத்தைத் தூய்மைப் படுத்துவனவே. அதோடு சகலத்துக்கும் காரணமான மூலவஸ்துவைப் பல விதங்களில் அநுபவிக்கிற ஆனந்தமும் பக்தியில் உள்ளது. மூலத்தோடு இப்படிப் பிரிந்திருந்து அநுபவிக்காமல்,

@Page 72

தானும் அதுவன்றி வேறல்ல என்ற உணர்வினைப் பெற்று, அதன் பின் வேறெந்த சாதனையும் இல்லாத சாசுவத சுகத்தில் கரைவதே அத்வைத முக்தி. இவ்வாறு ஒன்றின் பல தோற்றங்களே இத்தனையும் என்று அநுபவத்தில் உணர்ந்து மனத்தை அந்த ஒன்றில் அடியோடு கரைத்து விடுவதை ஞானமார்க்கம் என்கிறார்கள். மனத்தை அடியோடு இப்படிக் கரைக்காமல், மனோ விகாரங்களை மட்டும் ஒழித்துவிட்டு, சுத்தமான மனத்தால், அந்த ஒன்று ஒரு தெய்வ ரூபத்தில் தோன்றிப் பலப் பலவான ஜீவ–ஜகத்துக்களாகிச் செய்யும் லீலையை அன்போடு ரஸிப்பதை பக்தி மார்க்கம் என்கிறார்கள். மனத்தின் தீய குமுறல்கள் இல்லாமல் பகவத் விபூதியை ரஸிக்கும் இந்த ஆனந்த நிலையும் மனச்சுமையிலிருந்து விடுபட்ட முக்தி நிலைக்குச் சமதைதான்.

பூஜை, ஜபம், பஜனை இவை பக்தி மார்க்கத்தில் அங்கமாகக் கொள்ளப்படும். இவற்றால் பகவத் சம்பந்தம் அநுபவ பூர்வமாக ஏற்பட்ட பின் ஒரு சாதகன் பகவானது லீலா விபூதிகளிலேயே திளைத்துக் கொண்டு பொதுவில் 'பக்தன்' என்று சொல்லப்படுபவனாகத்தான் தனித்து அற்ப ஜீவனாக இருக்க வேண்டும் என்பதில்லை. பகவானை அவன் பிரார்த்தித்தால், அல்லது பகவான் தானாகத் திருஉளம் கொண்டால், இவனை பக்த நிலையிலிருந்து அவ்வப்போதோ, அல்லது நிரந்தரமாகவோ, அத்வைத ஞான நிலையில் சேர்ப்பித்து மூல சத்தியத்தோடு இவன் இரண்டறக் கரைந்திருக்கச் செய்வான். ஆக பக்திமார்க்கமானது சித்த சுத்தி, பகவத் குணாநுபவம், நிர்குண பிரம்ம சாக்ஷாத்காரம் எல்லாவற்றையுமே சாதிப்பதாகும்.

@Page 73

பூஜை, மந்திர ஜபம், ஸ்வரூப – அல்லது குண த்யானம், பகவந்நாமாவை ஓதுவது ஆகியன பக்தி மார்க்கத்தில் பல்வேறு சாதனைகள் ஆகும். பகவந்நாமா ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தை ஓட்டி வந்தது. அவனது லீலையையோ, குணத்தையோ அவை குறிப்பனவாகும். எனவே இந்த நாமங்களைச் சொல்லும் போது அந்த தெய்வீக லீலைகளையும் குணத்தையும் மனம் நினைத்து அவற்றில் மூழ்கி, தனது அற்ப விளையாடல்களையும், அற்ப குணங்களையும் தாற்காலிகமாகவேனும் இழக்கிறது. பழகப் பழகத் தாற்காலிகமே நிரந்தரமாகிறது.

இனி, ஒவ்வொரு நாமமும் குறிக்கிற கலியாண குணமும், காருண்ய லீலைகளும் நம் சித்தத்தைத் துலக்குவது ஒரு புறம் இருக்க, அந்த நாமத்தின் சப்தம் மட்டுமே கூட மனத்தைப் பரிசுத்தப்படுத்துவதாகும். நம்மால் அடக்க முடியாத மனத்தை அடக்க கூடிய ஒரே ஒரு மஉறாசக்தியை நினைத்துத்தானே இந்த நாமத்தைச் சொல்கிறோம் ? இந்த நாமத்தின் மூலமே அது இந்தச் சுத்தீகரிப்பைப் புரிகிறது. அது எந்த ரூபத்திலும் இருப்பதன்றோ ? சப்த ரூபத்தில் வந்து அருள் செய்கிறது. இது மட்டுமல்ல, நாம் மகா சக்தியை நினைப்பதால்தான் நாமத்தின் வழியே அது கிருபை புரிகிறது என்பது மட்டுமல்ல. நாம் நினைத்தாலும், நினைக்காவிட்டாலும், பகவந் நாமாக்களுக்குத் தாமாகவே, தம் இயல்பாகவே சித்த சுத்தியையும், பக்தி என்கிற அன்பினையும், அந்த அன்பால் ஸம்ஸாரத்தை லீலையாகக் காண்கிற ஆனந்தத்தையும், அந்த லீலைக்காரனோடு முகமுகமாகத் தொடர்பு கொள்ளும் பேரானந்தத்தையும், ஒருக்கால், அவசியமானால், அத்வைத மோக்ஷானந்தத்தையுங்கூடப்

@page 74

படிப்படியாகத் தருகிற சக்தி உண்டு. நாம் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் சிற்சில காட்சிகளை, ரூபங்களைக் காணும்போது மனத்தில் பாவன உணர்வு ஏற்படுகிறதல்லவா ? அப்படியே இந்த தெய்வீக நாமாக்களின் சப்தத்துக்கு நம் கர்ம மூட்டையைக் குறைத்து, விடுதலையை நோக்கி நம்மை முடுக்கி விடுகிற சக்தி இயல்பாகவே உள்ளது.

பகவந் நாமங்களை ஓதுவது மிகப் பெரிய பலனை மிக மிக எளிதில் வழங்குவதாகும். பூஜை என்றால் வெளித் திரவியங்கள் பல வேண்டும். அதோடு தீபம் அணையாமல் எரிய வேண்டும். நிவேதனம் இவ்விதமாக இருக்க வேண்டும் என்பது போன்ற வெளி விவகாரங்கள் நம்மைக் கட்டுப்படுத்துகின்றன. சரி, தியான மார்க்கத்துக்குப் போகலாம் என்றாலோ, அதில் மனத்தை ஒன்றிலேயே கட்டுப்படுத்துகிற மகா கடினமான காரியம் தொக்கி நிற்கிறது. யோகாப்பியாசத்தில் சரீரத்தையும் கட்ட

வேண்டியதாகிறது.

உள், வெளி இரண்டையும் கட்டுப்படுத்த முடியாத நிலையில், மிருக சஞ்சீவினியாக நம்மை ரக்ஷிக்க வந்து நிற்கிறது நாமம். பகவந் நாமங்களை ஓத வெளி வஸ்து ஏதுமே தேவை இல்லை. அதோடு நம் மனம் கட்டுப்படாவிட்டால் கூட பாதகமில்லை. 'நற்றவா, உனை நான் மறக்கினும் சொல்லு நா நமசிவாயவே' என்றபடி வாய் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாலே போதும். அந்த நாமத்துக்கே உள்ள இயல்பான சக்தியால் அது கர்ம த்வம்ஸத்தைத் தொடங்குகிறது. கர்மம் நசிக்க நசிக்க இந்திரிய வாஸனைகளும் குறைகின்றன. பிறகு மனமும் நாமத்திலேயே அன்பில் கட்டுப்படத் தொடங்குகிறது. ஆரம்பத்தில் மனம் ஈடுபடாவிட்டாலும்

@Page 75

நாளாக ஆக, நாமத்தின் சக்தியாலேயே மனம் அன்பில் ஊறி ஊறி, அப்படி ஊறுவதில் உள்ள இன்பத்தை விட்டு விலகப் பிடிக்காமல், நாமத்தில் சொக்கிச் சொருகிக் கொள்ளத் தொடங்குகிறது. பிறகு படிப்படியாகப் பரிபூர்ண கர்மநாசனம், வாஸனாக்ஷயம், பகவத் தரிசனம், மோக்ஷம்.

இதுவே பகவந் நாம மகிமை.

அப்படியானால் பரம சுலவமான நாமம் இருக்க, சிரமப்பட்டுச் செய்யவேண்டிய யாகம், பூஜை, தியானம் முதலியவற்றை ஏன் வேதங்களும் சாஸ்திரங்களும் விதித்தன என்ற கேள்வி எழுகிறது. இதற்குக் காரணம் மனித இயல்புதான். 'இத்தனை எளிய வழியால் எங்கேனும் அத்தனை பெரும் பயன் அடைய முடியுமா ? என்ற சம்சயம் மனித மனத்துக்கு ஏற்படலாம்தானே ? அதனால் இந்த எளிய வழியில் செல்லவே பிரயாசை இல்லாமல் போகும் அல்லவா ? இப்படிப்பட்ட மனப்பான்மைக் காரர்களுக்குத்தான் மற்ற சாதனங்கள் வைக்கப்பட்டன.

நாமஸித்தாந்தம் என்ற பெயரில் இறை நாம மகிமையை எடுத்தோதும் பெரியோர்கள் இன்னொரு காரணமும் சொல்லுவார்கள். கர்மத்தைக் கழித்துக் கொள்வது என்பது பாபத்தைக் கழித்துக் கொள்வதே. கர்மச் சுமை அல்லது பாப பாரம் குறைவதும் சித்தம் சுத்தமாவதும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. பகவந் நாமம் போக்கக்கூடிய பாபச்சுமை மகத்தானது. எனவே இத்தனை மகத்தான பாபம் தீர்க்கிற நாம அநுஸந்தானத்தை முற்கால மனிதர்கள் செய்த சொற்பப்பாபத்துக்குப் பிராயச்சித்தமாக வைக்கவேண்டிய

@Page 76

அவசியமே இல்லை ; இது உக்ர மருந்தைச் சிறிய வியாதிக்குத் தருகிற மாதிரியாகும். எனவேதான் ஆதியில் மற்ற சாதனங்களை வைத்தார்கள். இப்படி நாம ஸித்தாந்திகள் சொல்வர். ஆதிகாலத்தில் பாபச் சுமை குறைச்சல். அதுவே கலியில் மகா வீரியத்தோடு வளர்ந்து நிற்கிறது. எனவே இந்த யுகத்தில் மகா வீரிய மருந்தான பகவந் நாமத்தையே சாதனையாகக் கொள்ளவேண்டும் என்பர். பாப பாரம் எப்படி இப்போது அதிகமோ, அதேபோல் யாகமும் யோகமும் விஸ்தார பூஜையும் செய்வதற்கான தேகபலம், மனோபலம் இவை இப்போது மிகக் குறைவாகும். பூஜைக்கு வேண்டிய திரவியங்களின் சுத்தியும் முன் எப்போதையும்விட இப்போது குறைவாகும். எனவே இந்த ரீதியிலும் பகவன் நாமமே இக்காலத்துக்கு விரேஷமான பக்தி–ஞான–மோக்ஷ சாதனமாக உள்ளது.

"கிருதயுகத்தில் தியானத்தாலும், திரேதாயுகத்தில் யக்ஞத்தாலும், துவாபரயுகத்தில் அர்ச்சனையாலும் எந்த ஸித்தியை அடைந்தனரோ, அதையே கலியில் கேசவனின் நாமங்களை சங்கீர்த்தனம் செய்வதன் மூலமே அடைந்து விடலாம்" என்று விளம்புகிறது :

கலௌ ஸங்கீர்த்ய கேசவம் ||

விஷ்ணு புராணமாதலின் 'கேசவம்' என்றது. இவ்வாறே பற்பல தெய்வங்களில் ஒவ்வொன்றுக்கும் உரிய புராணங்கள் அந்தந்த தெய்வத்தின் நாமமே கலியுகத்தில் கடைத்தேற்றும் தாரகம் என இயம்பும்.

கலியுகத்தில் கடைத்தேற வழி, "உறரே ராம உறரே ராம ராம ராம உறரே உறரே| உறரே கிருஷ்ண உறரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண உறரே உறரே||" என்ற நாம ஜபனம்,

@Page 77

அல்லது பஜனமே என்று நாரதருக்குக் கூறுகிறார் பிரம்மா. "இந்த சாதனைக்கு உரிய விதிகள் யாவை?" என்று நாரதர் கேட்க, "எந்த விதியுமே கிடையாது. எவர் வேண்டுமாயினும் எப்போது வேண்டுமாயினும் – அவர்கள் சுத்தமாக (மடியாக) இல்லாவிட்டாலும் கூட இவற்றை மொழியலாம்" என்கிறார். எந்த மனிதனாயினும் இப்பதினாறு நாமங்களை ஓதினால் அவற்றின் சக்தியால் அவனது ப்ராணாதி நாமாந்தமான பதினாறு காலைகளும் நசிக்கப் பெற்று, அவன் தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிப்பானாம்! கலிஸந்தரண உபநிஷத்திலிருந்து இவ்வுண்மை கிடைக்கப் பெறுகிறோம். ஜாதி, குலம், வயது, பால் என்கிற வித்யாஸமின்றி

அனைவரும் நாம ஜபத்தை, ஸங்கீர்த்தனத்தை மேற்கொள்ள அதிகாரம் பெற்றிருப்பது அதன் தனிச்சிறப்பு.

நாமத்தை ஜபமாக உள்ளுக்குள்ளோ, வாய்விட்டோ ஓதுவது ஒருவிதம். அதையே இசையில் கலந்துவிட்டால் இன்னும் இன்பக் கவர்ச்சி அதிகமாகிறது. கலந்து உண்ணும் களிப்போடு, பலர்கூடி இப்படி சங்கீர்த்தனம் செய்வதே பஜனை என்ற அமிருத ஔஷதம். தனித்தனியாகச் செய்வதை விடப் பலர் ஒன்று சேர்ந்தால் மிக அதிகம் சாதிக்கலாம் என்பது லௌகிகப் பணிகளில் மட்டுமின்றி பக்தியோடு பஜனை புரிவதற்கும் பொருந்துகிறது.

ஒருவரது உணர்ச்சி தொய்ந்தால்கூட, மற்றவர்களின் விருவிருப்பான கோஷம் அவரைத் தொய்ய விடாமல் தூக்கி நிறுத்துகிறது. காதிலே மோதிக் கொண்டேயிருக்கும் நாம கானம் மனஸை வெளியே ஓட விடாமல் இழுக்கிறது.

@Page 78

நவ வித பக்திகளை ஸ்ரீமத் பாகவதம் வரிசைப் படுத்துகையில் முதல் இரண்டாகக் கூறும் 'சிரவண'மும் 'கீர்த்தன'மும் சேர்ந்தே திவ்ய நாம பஜனையாகிறது. மூன்றாவதான 'ஸ்மரணம்' என்பதே இதன் உள் ஓடும் உயிர்நாடி, ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், ரூப கோஸ்வாமி முதலியோர் த்வைத–வசிஷ்டாத்வைச் சார்புடன் கௌட தேசத்தில் நாம சங்கீர்த்தனத்தை வலியுறுத்தியுள்ளனர். பிற்பாடு வட புலத்தே ராமானந்தர், துளஸிதாஸ், கபீர்தாஸ், ஸுர்தாஸ், மீராபாய் ஆகியோரும் ; ஆந்திரத்தில் பத்ராசல ராமதாஸரும் ; கர்நாடகத்தில் புரந்தரதாஸர், விஜய விட்டலதாஸர் கனகதாஸர் முதலானோரும் ; மஉறாராஷ்டிரத்தில் நாமதேவர், துகாராம், ஸமர்த்தராமதாஸ் ஆகியோரும் சங்கீர்த்தனத்தை வெகுவாக வளர்த்திருக்கிறார்கள். இவர்களுள் ஸமர்த்தரைத் தவிர மற்றவர்களை அத்வைதிகள் என்று சொல்லுவதற்கில்லை. உன்னத அநுபவ நிலையில் மற்றவர்களின் வாக்கிலும் ஆங்காங்கே அத்வைதச் சுடர் ஒன்றிரண்டு தெறிக்குமாயினும் இவர்கள் (தாங்களாக எந்த ஸித்தாந்தச் சார்பையும் நினைக்காவிடினுங்கூட) த்வைத விசிஷ்டாத்வைத அநுபவிகள்தாம்.

பக்தி இன்பமே மோக்ஷமாகும் என்ற கருத்துடைய த்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் பகவந்நாம மகிமையைக் கூறியதில் வியப்பதற்கில்லை. ஆனால் வியப்பு என்னவெனில் குணம், குறி, பெயர், ஊர் இல்லாத நிர்குணப் பிரம்மத்தையே முக்கியமாகக் கொண்ட பரம அத்வைதிகளுள்ளும் நாம சித்தாந்தத்தை ஆதரித்த அவதார புருஷர்கள் தோன்றினர். மதுசூதன

ஸரஸ்வதியையும், ஸதாசிவ பிரம்மேந்திரரையும் இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். ஆத்ம போதரின் சகாவாக, 57வது

@Page 79

காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ பரமசிவேந்திரரிடம் உபதேசம் பெற்ற ஸதாசிவர், குருவும் போற்றும் பிரம்மேந்திராளாக, ஜீவன் முக்தராக விளங்கி, பரம அத்வைத ஸத்தியத்தில் தோய்ந்திருந்தவர். ஆயினும் "பிபரே ராமரஸம் ரஸனே" என்றும், "ப்ரூஉறி முகுந்தேதி ரஸனே" என்றும் தம் நாவை எக் காலமும் நாமருசியைச் சுவைக்குமாறு பணித்தார். அத்வைதிகளுள் தக்ஷிண தேசத்தில் நாம ஸித்தாந்தத்தின் பிரவர்த்தகர்கள் என்றே பூஜிக்கப்படுகிற இருவர் ஸ்ரீ பகவந்நாம போதேந்திரர்களும், ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாளும் ஆவர். இருவரும் அத்வைதிகளான ஸ்மார்த்தர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விருவரையும் துதித்து விட்டே இன்றும் திவ்ய நாம பஜனை தொடங்கப்படுகிறது. பிறகு பஜனை பத்ததி வகுத்த மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகளிலிருந்து, இன்றளவும் பஜனை சம்பிரதாயத்தில் ஆழங்காற்பட்ட பெரியோர்களாக நம் தமிழகத்தில் உதித்தவருள் ஓரிருவர் நீங்கலாக அனைவருத் அத்வைத ஸ்மார்த்தர்தாம் என்பதும் ஆச்சரியமான உண்மையாகும்.

நாம மகிமையை மறுப்போருக்கு வாதங்களின் மூலம் அவற்றின் பெருமையை விளக்கும் பொருட்டு போதேந்திராளும் அய்யாவாளும் ஆதார கிரந்தங்களை எழுதினர். மறுப்பவர்களில் நாஸ்திகரைப் பற்றிக் கவலையில்லை. அவர்களை எப்படியும் திசை திருப்ப முடியாது. ஆஸ்திகர்கள் என்று எண்ணிக்கொண்டே நாம மகிமையை உணராதிருந்தவர்களுக்காகத்தான் இவர்கள் காரணம் காட்டினர். இவர்களுக்கு முன்னரும் பல மகாத்மாக்கள் இத்திருப்பணியைச் செய்வதாலும் இவர்களே அதை முடித்துக் கும்பாபிஷேகம் செய்தவர்கள். இந்த ஆதி

@Page 80

மகாபுருஷர்களில் 'நாம கௌமுதி' இயற்றிய லக்ஷ்மீதரர் ; அதற்கு வியாக்யானமான 'ப்ரகாசம்' என்கிற நூலும், தனிப்பட 'பக்தி நிர்ணயம்' என்ற கிரந்தமும் செய்த அனந்த தேவர் ; 'நாம மாலிகை' எழுதிய காசிவாசியதீச்வரர் ஆகியோரின் திருப்பெயர்களையேனும் ஸ்மரித்து நமஸ்கரிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இவர்களுக்குப் பிற்பாடு போதேந்திராளும் அய்யாவாளும் ஆஸ்திகர்களுக்கு நாம மகிமையை விளக்கும் நூல்களை அருளியிருக்கிறார்கள்.

ஸகுண உபாஸனையை மட்டமாக நினைக்கும் அத்வைதிகளுக்கும், வைதிக கர்மாநுஷ்டானங்கள் இருக்கும் போது நாம சங்கீர்த்தனம் எதற்கு வேண்டும் என்று

எண்ணுவோருக்கும் இவர்கள் ஆணித்தரமாக விடை தந்திருக்கிறார்கள். நிதித்யாஸனம் எனப்படும் விதத்தில் நிர்குண பிரம்மத்துடன் ஜீவாத்மாவானது ஆழ்ந்த தியானத்தில் ஐக்கியப்பட்டிருக்கும் அத்வைத ஞானநிலையே தங்களது லக்ஷியமுமாகும் என்றும், அந்த நிலைக்கே நாம சங்கீர்த்தனம் ஒருத்தரைச் செந்தூக்காகத் தூக்கிக் கொண்டு போய்ச் சேர்க்கிறது என்றும் இவர்கள் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள்.

ஆயினும், நாம ஸங்கீர்த்தனமே நேராக அத்வைத முக்தியை அளிக்கவில்லை என்றும், அதனால் ஞானம் எளிதிர் உதித்து, பிறகு முக்தி கிட்டுகிறது என்றுந்தான் அத்வைத சங்கரபீட ஆசாரியராக வந்த நம் போதேந்திராள் கூறுகிறார் : "ஞானம் வினா கீர்த்தனஸ்ய முக்தி ஊறதுத்வம் நாஸ்த்யேவ" என்பார். ஆனால் மந்த அதிகாரிகளுக்கே பக்தி மார்க்க ஸாதனைகள் தேவை என்றும், ஒரு நிலை கடந்தபின் இவற்றை விட்டு விட்டு ஞான மார்க்கத்தில் (ஆத்ம விசாரத்தில்) இறங்க வேண்டும் என்றும் கூறும்



அத்வைதிகளை இவர் ஆட்சேபிப்பார். உத்தம அதிகாரியும் கூட நாம உபாஸனை மட்டுமே செய்து வந்தாலும் போதும் ; ஏதோ ஒரு கட்டத்தில் இவனாக அதை நிறுத்தி ஆத்மதியானத்தில் ஈடுபட வேண்டும் என்பதின்றி, தானாகவே நாம ஜபம் வலுக்க வலுக்க, ஜபிக்கும் ஜீவாத்மாவுக்கும் ஜபிக்கப்படும் பரமாத்மாவுக்குமிடை உள்ள தடுப்பு கரைந்து ஜீவனானவன் நாமத்தோடும், அதற்குரிய நாமியோடும் ஒன்றுபடும் நிலையில் தானாகவே ஞான நிதித்யாஸனத்தில் சேர்க்கப்பட்டுவிடுகிறான் என்பார். அத்வைதிகளுக்கு, 'மாயை மாயை என்று மட்டும் பிரபஞ்சலீலையைத் துச்சமாகக் கருதவேண்டா. இதெல்லாம் ஈசவரனின் லீலையன்றோ ? நிர்குண பிரம்மம் லக்ஷ்யம் என்று சொல்லிவிட்டு, அதே பிரம்மம் ஸகுணமான ஈசுவரனாகிப் புரியும் லீலைகளை மதிக்க மாட்டோம் என்பது பிரமமத்தை அவமதிக்கிற குற்றம் போலவே ஆகும்' என்பார். ஈசுவரானுக்கிரஉறமின்றி அவனது ஆளுகையிலுள்ள மாயை விலகாதாகையால், ஸகுண உபாஸனையின் மூலம் இவ்வருளைப் பெறுவதன் அவசியத்தை நாம ஸித்தாந்திகள் உணர்த்துவர்.

பிறகு கிடைக்கிற மாயா நாசம், ஞானோதயம், அத்வைதாநுபவம் முதலியன ஒரு புறம் இருக்கட்டும். ஸகுணோபாஸனை செய்யும் போதே கிடைக்கிற பக்தி ஆனந்தத்தையும் இவர்கள் புல்லரித்துக் கூறுவார்கள். அதிலும் குறிப்பாக பகவந் நாமாவைச் சொல்லும் அமிருதானந்தம், அமிருதத்துக்கு மேலும் சுவை ஊட்டுவது போல், இந்த நாமாவை வெறும் ஜபமாக இல்லாமல், இசையுடன் சேர்த்து மற்ற பக்த

கோடிகளுடன் இசைந்து ஸங்கீர்த்தனம் செய்கிற பேரானந்தம் இவற்றை



விளக்குவர். ராகமும் லயமும் கொண்டு, பகவானிடம் அநுராகம் கொண்டு, அவனது நாமத்தில் மனோலயம் கொண்டு பஜனை செய்வது எத்தனை ஸௌக்கியமான, ஸுலபமான ஸாதனை? 'ஸாதனை' என்று சொல்கிற மாத்திரத்திலேயே ஏதோதோ சிரமங்களை மேற்கொள்ள வேண்டும் என்று தோன்றும். இதுவோ நேர்மாறாக, தோல் உரிக்கக்கூட அவசியமில்லாமல் திராக்ஷையை உண்பது போல் எளிதாகவும், உடனுக்குடன் ரஸத்தைக் கொட்டுவதாகவும் இருக்கிறது. திராக்ஷையைக் கூட உண்டபின் தோலும், கொட்டையும் தும்பும்படி உள்ளது. நாம பஜனமோ தோலில்லாத கொட்டையில்லாத ஸர்வ ரஸ மய ஆனந்தமாயுள்ளது.

'நித்ய கர்மாநுஷ்டானங்களையும், இவை தவிர, சாஸ்திரங்கள் விதிக்கும் பாக யக்ஞங்கள், உறவில் யக்ஞங்கள், ஸோம யக்ஞங்கள் இவற்றையும் செய்யவே பிராம்மணனுக்கு ஆயுள் போதாதே ; ஸங்கீர்த்தனம் செய்யப் பொழுதேது? எனவே இந்த சாதனையை பிராமணரல்லாதாருக்கே ஏற்பட்டதாகக் கொள்ள வேண்டும்' என்போருக்கும் நாம ஸித்தாந்திகள் தக்க விடை கூறுவர். பெரிய யக்ஞங்களை விதித்த அதே வேதம், சில சிறிய கர்மாநுஷ்டானங்களுக்கே அந்தப் பெரு வேள்விகளின் பூரணபலனும் உண்டு எனக் கூறும். உதாரணமாக அக்னிஷ்டோமம் என்ற யாகத்தால் பெறும் பெரும்பலனை நித்யப்படி கர்மாவான அக்னி ஹோத்திரத்தினாலேயே அடையலாம் என வேதவாக்யமே உள்ளது.

ய ஏவம் வித்வான் அக்னிஹோத்ரம் ஜுஹோதி |
யாவத் அக்னிஷ்டோமேனோபாப்னோதி தாவதுபாப்னோதி ||*

---

*யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதை 1.6.9.1



பெரியதாக ஏதோ செய்யத் துடிப்பவர்களுக்கும், சிறியதில் சிரத்தையற்றோருக்கும்தான் விஸ்தாரமான யாகாதிகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பலனை வேறு சிறிய கர்மாவால் பெறலாம் என்று வேதமே சொல்வதால், பெரிய வேள்வியை விட்டுவிட்டு, சிறிய அநுஷ்டானத்தில் முழு ஈடுபாடும் நம்பிக்கையும் செலுத்தினாலே போதுமானது என்றாகிறது. எனவே நாம

ஸங்கீர்த்தனத்துக்காக யக்ஞாதி அநுஷ்டானங்களைக் குறைத்துக் கொண்டாலும் தவறே இல்லை என இம்மார்க்கத்தின் பிரவர்த்தகர்கள் கூறுவர். அக்னிஷ்டோமம் போன்ற யக்ஞங்களை மேற்கொள்கிறவர்கள், அதற்கு அவகாசம் கிடைக்கும் பொருட்டே நித்ய கர்மாக்களைக் குறைத்துக்கொள்ளலாம் என்றும் சாஸ்திரம் அநுமதிப்பதால், இதே நியாயத்தில் நாம ஸங்கீர்த்தனத்துக்காக வைதிக நித்ய கர்மானுஷ்டானங்களைக் கூடச் சிறிது குறைத்துக்கொள்ளலாம் என்பர்.

ஆயினும் நமது கதாநாதரான போதேந்திராள், அய்யாவாள் ஆகியோரும் சரி, பிற்பாடு பஜனை சம்பிரதாயத்தை அற்புதமாக நிர்ணித்துத் தந்த மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகளும் சரி, வைதிக அநுஷ்டானங்களை அறவே விட்டுவிட்டு நாம ஸங்கீர்த்தனத்தில் இறங்குவதை ஆதரிக்கவில்லை. அவ்விதம் செய்வது நாமத்துக்கே அபராதம் செய்வதாகும் என்பர்.

நாமத்துக்கு இழைக்கும் பத்து அபராதங்களாக நமது போதேந்திராள் கூறுவதில் இரண்டு : 1. நாமபலம் தமக்கு உள்ளது என்ற துணிச்சலால் செய்யத்தகாத அவைதிக கர்மங்களைச் செய்வது (நாமாஸ்தீதி நஷித்த வ்ருத்தி) ;

@Page 84

2. இதே காரணம்பற்றி, வேதம் விதித்த கர்மங்களை விடுதல் (விஉறித த்யாகௌ) பிராமணர்கள் ஸந்தியா வந்தனம், ஸமிதாதானம் அல்லது ஔபாஸனம், ப்ரஉற்ம யஜ்ஞம் இவற்றை விடாமலே நாம ஸங்கீர்த்தனம் மேற்கொள்வதைத்தான் ஸாம்ப்ரதாயிகர்களிடம் பார்த்திருக்கிறோம், பார்க்கிறோம்.

வைதிகத்தோடு கரைந்ததே நாம பஜனம் என்று காட்டிய நாம ஸித்தாந்திகள், நாம வைபவத்தை வேதங்களே உத்கோஷிக்கின்றன என்று ஆணியறைந்தாற்போல் எடுத்துக் காட்டி, ஸங்கீர்த்தனம் என்பது வேதத்துக்கு முரணானது என்ற வாதத்தைத் தகர்த்தெறிந்திருக்கிறார்கள். நாம ஸித்தாந்தம் பற்றி இங்கு இவ்வளவு கூறியபின் அந்த வேத வாக்கியங்களிலும் இரண்டொன்றை எடுத்துக் காட்டுவது அவசியமாகும்.

வேதத்தின்படி 'அர்ச்சித்தல்' என்றாலே 'பக்தியுடன் பாடுவதுதான் என்று பல மேற்கோள்களை அறிஞர்கள் காட்டுகின்றனர். இது நாம ஸங்கீர்த்தனந்தானே? ரிக்வேதீய 'விஷ்ணு ஸூக்த'த்தில் (மண்டலம் 7, ஸூக்தம் 100) பரமனை, 'உருகாய'ன் என்பதற்கு 'மிகவும் சிறந்த முறையில் பாடப் பெறுபவன்' என்றே பொருள் கொள்வர். ஸங்கீதம் சேர்ந்த ஸங்கீர்த்தனமே இது. இந்த ஸூக்தத்தில்,

"ப்ர தத் தே அத்ய சிபிவிஷ்ட நாமார்ய
சம்ஸாமி வயுநாதி வித்வாந்"

என்கிற மந்திரத்தில் "நாம ப்ரசம்ஸாமி – உன் நாமத்தை நன்கு புகலுகிறேன் ; புகழுகிறேன்" என்று கூறப்படுகிறபோது 'தத்–தே–நாம' என்கையில் 'ஓம் தத்ஸத்' என்பதில் உள்ள 'தத்' தாகிற பரம்பொருளே 'உன் நாமம்' என்று உணர்த்தப்படுகிறது. இம்மந்திரத்தில்,

@Page 85

"அற்பனான (அதவ்யான்) நான் ஜீவனின் உள்ளொளியான அந்தர்யாமி – யாகவும் (சிபிவிஷ்ட), உலகுக்கு அப்பாற்பட்ட வனாயும் (அஸ்யரஜஸ : பராகே), உள்ள பெரும் பொருளான (தவஸம்) உன்னை இந்த நாம பஜனம் கொண்டே நன்கு அறிந்து கொண்டவனானேன் (வயுநாநி வித்வாந்)" என்று திருப்பெயரின் பெருமை பரக்க ஓதப்படுகிறது. இதற்கு முன்பே இந்த ஸூக்தத்தில், "விஷ்ணுவானவன் பெரியவற்றுக்கெல்லாம் பெரியவன் (தவஸஸ்தவீயான்)" அவனது தேஜஸை முற்றிலும் பொதிந்து கொண்டது அவனுடைய நாமமே ஆகும் (த்வேஷம் உற்யஸ்ய ஸ்தவிரஸ்ய நாம) என்று சொல்லியிருக்கிறது. இதையே அச்சடித்தாற்போல், ரிக்வேதீய பஞ்ச ருத்ர ஸூக்தத்திலும் "த்வேஷம் ருத்ரஸ்ய நாம" – "ருத்ரனின் திருநாமம் அவனது திவ்விய தேஜோ மயமானது" எனப்படுகிறது. ஓலியே ஒளியாக, நாதமே பிந்துவாக ஆகிற அற்புதம் இது. "மநாமஉேற சாருதேவஸ்ய நாம"–"பரமனின் நாமத்துடைய அழகில் (சாரு) மனத்தைத் தோய்க்கிறேன்" என்று நாம பஜனத்திலுள்ள ஸௌந்தர்யச் சிறப்பையும் வேதம் கானம் செய்கிறது.

"தமு ஸ்தோதார : பூர்வ்யம் யதா வித
ருதஸ்ய கர்பம் ஜநுஷா பிபர்தன|
ஆஸ்ய ஜானந்தோ நாம சித்விவக்தன
மஉறஸ்தே விஷ்ணோ ஸுமதிம் பஜாமஉேற||

எனும் ரிக்வேத (மண் : 1. ஸூ : 156, மந் : 3) மந்திரத்தில் நாமஸித்தாந்தம் முற்றிலும் அடங்கியிருப்பதாக அனந்த தேவர் வியாக்கியானத்திலிருந்து ஏற்படுகிறது. இது ஸம்உறிதா மந்திரமாயினும், ஓதுவதற்கு மட்டும் ஏற்பட்டதல்ல ; ப்ராஉற்மண வாக்யம் போல் இதில் நாம்

@Page 86

நடத்திக் காட்ட வேண்டியதொரு விதியைக் கட்டளையே இடுகிறாள் வேத மாதா. மந்திரத்தை ஓதுவதோடு மட்டுமன்றி அக்கட்டளையைக் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டும். "அறிஞர்களே! விஷ்ணுவின் நாமத்தில் ஏதேனும் ஒன்றையேனும் புகலுவீர்" (ஜானந்தோ விஷ்ணோ நாம சித் விவக்தன) என்று இங்கு உத்தரவிடுகிறாள் வேதமாதா, பூர்வகர்ம பலனைக் கூட்டி வைக்கும் 'ருத'த்தையும், அதற்குக் கருப்பொருளான (கர்பம்) அவித்யை எனும் மாயையையும் கடக்க இதுவே உபாயம். இவ்வாறு 'ஜானந்த' எனப்படும் அறிஞர்களுக்கு வேதநாயகி உபதேசிக்கிறாள். அதாவது ஞானமார்க்கத்தில் செல்வதானால் நாமம் உதவாது என்போருக்கே நல்லுரை தருகிறாள் போலிருக்கிறது! "விஷ்ணோ! உன் நாமத்தைச் சொல்வதாலேயே, உன் உத்தமமான மதிநலத்தை நாங்களும் அடைகிறோம்" (விஷ்ணோ ஸுமதிம் பஜாமஹே) என்று ஸ்ரீதர அய்யாவாள் இங்கு அற்புதமாக விளக்கம் தருகிறார். விஷ்ணுவின் மதி என்பது சுத்த சைதன்யமின்றி வேறென்ன? அதில் இரண்டறக் கரைவது தவிர வேறென்ன செய்யக் கிடக்கிறது?

விஷ்ணுவைக் குறித்த வேத ஸூக்தங்கள் யாவுமே விஷ்ணுஸூக்தம்தான் என்றாலும், விசேஷமாக விஷ்ணுஸூக்தம் என்றே போற்றப்படும் ரிக்வேத முதல் மண்டல 154–வது ஸூக்தத்தின் மூன்றாம் மந்திரத்தில், "கிரிக்ஷித உருகாயாய" என்ற சொற்றொடர் உள்ளது. இதற்கு, "எவர்கள் தன்னைப் பாடிப் புகழ்கின்றனரோ அவர்களது சொல்லில் வசிப்பவன்" என்று நாமஸித்தாந்திகள் வெகு பொருத்தமாகப் பொருள் கூறுவர். நான் வைகுண்டத்திலோ, யோகியர் உள்ளத்திலோ, சூரிய மண்டல மத்தியிலோ இல்லை

@Page 87

(அதாவது சாமானிய மக்களுக்கு எட்டாத இம்மூன்று இடங்களில்தான் இருக்கிறேன் என்றில்லை). என் அன்பர்கள் எங்கு என்னைப் பாடினாலும் அங்கு நான் இருக்கிறேன்" (மத் பக்தா: யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத) என்று பகவான் சொன்ன புராணவசனத்துக்கு "கிரிக்ஷித உருகாயாய" என்பதே வேத ப்ரமாணமாம்.

இனி உபநிஷதங்களைப் பார்ப்போம். சுக்லயஜுர் வேதத்தைச் சேர்ந்த ஜாபால ப்ராஉற்மண உபநிஷதத்தில், "சதருத்ரீயத்தில் கூறியுள்ள அமுதமான சிவ நாமங்களைச் சொல்வதே அமர நிலைக்கு உபாயம்" என்று யாஜ்ஞவல்க்ய மாமுனிவர் கூறுகிறார். "ஸஉேறாவாச–யாஜ்ஞவல்க்ய் : சத ருத்ரீயேணேத்யேதாநி ஏதாநி உற வா அம்ருதஸ்ய நாமதே யான்யேதைர்உற வா அம்ருதோ பவதி")

கலிஸந்தரண உபநிஷதத்தை முன்பே பார்த்தோம்.

க்ருஷ்ண யஜுர் வேதத்தைச் சேர்ந்த கைவல்ய ப்ராஉற்மண உபநிஷதத்தில், "சதருத்ர நாமங்களால் ஒருவன் அக்கினியைப் போலவும் வாயுவைப் போலவும் தூயோனாகிறான். ப்ரம்மஉறத்தி முதலிய மகாபாபங்களிலிருந்தும் விடுபட்டு சுத்தனாகிறான். தவற்றைச் செய்ததாலும், நல்லதைச் செய்யாததாலும் ஏற்படும் தோஷங்களிலிருந்து சுத்தீகரிக்கப்படுகிறான். சாதகன் அவிமுக்தம் எனப்படும் காசியை அடைந்து (அல்லது புருவமத்தியில் சித்தத்தை நிறுத்தி), ருத்ர நாமத்தை ஜபித்து ஆசிரமக் கட்டுப்பாடுகளைக் கடந்து ஞானம் எய்துகிறான், பவக்கடலைக் கடக்கிறான்" என்று கூறப்பட்டுள்ளது.

@Page 88

வேதாந்த சமயத்தின் மூன்று ஆதாரங்கள் உபநிஷதமும் பிரம்ம ஸூத்திரமும் பகவத்கீதையும் ஆகும். உபநிஷத மேற்கோள் பார்த்தோம். பிரம்ம ஸூத்திரத்தில் பரமாத்மா "சொல்லாலேயே அளவிடப் பெறுகிறான்" (சப்தாதேவ ப்ரமித : ) என வருவது நாம அல்லது நாத ஸித்தாந்தமே எனலாம். (நாதம் பற்றிப் பின்னர் பார்ப்போம்,) கீதையில் பகவான், "நான் யக்ஞங்களுள் ஜப யக்ஞமாக இருக்கிறேன்" என்பது நாம உபாஸனையே.

புராணங்கள் யாவுமே ஜபம், கீர்த்தனம் ஆகியவற்றை சிலாகித்துப் பேசினாலும், நாம பஜனையை விசேஷித்துச் சொல்வது ஸ்ரீமத் பாகவத புராணமேயாகும். அதில் (1.5.11) பக்தி ஸூத்ரம் தந்த பக்த சிரோமணி நாரதர், "சுலோகம் தோறும் பிழை இருந்தாலும், பகவானின் கீர்த்தியால் அழகுபெற்ற திவ்ய நாமங்களில் வாக்கை உபயோகிப்பதுதான் மக்கட் சமூகத்தின் பாபத்தைப் போக்கும் ; நாம சிரவணத்திலும், கானத்திலும், ஜபத்திலுமே ஸாதுக்கள் மகிழ்வர்" என்று அடித்துச் சொல்கிறார். இந்த மஉறாபுராணம் தலைக்கட்டப் பெறும்போது கூறப்படும் கடைசி சுலோகம், "எவனுடைய நாம ஸங்கீர்த்தனமே ஸகல பாபங்களையும் முற்றும் அழிக்குமோ, எவனை நமஸ்கரிப்பதே துயர் நீக்குமோ அந்த உயர் பொருளாம் உறரியை வணங்குகிறேன்" என முடிகிறது :

நாம ஸங்கீர்த்தனம் யஸ்ய ஸர்வ பாப ப்ரணாசனம்|
ப்ரணாமோ து : க சமனஸ் – தம் நமாமி உறரிம் பரம்||

நாமம், ப்ரணாமம் (வணங்குதல்) இவையே கலியின் தனி மருந்துகள்.

@Page 89

பாத்ம புராணத்தில் காணப்படும் ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடலாம் :

ஸர்வ தர்மோஜ்ஜிதா விஷ்னோ:
நாம மாத்ரைக ஜல்பகா: |
ஸுகேன யாம் கதிம் யாந்தி
ந தாம் ஸர்வே தார்மிகா: ||

'மற்ற எல்லா வைதிக நெறிகளைக் கைவிட்டாலும், திருமாலின் நாமத்தை மாத்திரம் மொழிபவர்கள் சுகமாகப் பெறும் பரகதியை, நாம உபாஸனை செய்யாமல் மற்ற நெறியனைத்தையும் பின்பற்றுபவராலும் பெறமுடியாது' என்று அர்த்தம்.

ஆயினும் போகேந்திராள், அய்யாவாள் போல் நாம மஉறிமையை நிலைநாட்டவே அவதரித்தவர்களோ இவ்வளவு அதியாகச் சொல்லாமல், மற்ற வைதிக நெறிகளையும் முடிந்தமட்டில் பின்பற்றியபடிதான் நாம உபாஸனை செய்யவேண்டும் என விதித்திருக்கிறார்கள்.

மற்ற சாஸ்திர நூல்களில் நாம பஜனம் கூறப்பட்டிருப்பதைச் சற்றே பார்ப்போம். "நரஉறரியின் நாமங்களை எவன் நிதமும் நிமல மனத்துடன் ஓதுகிறானோ, அவன் சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு உறரியுடன் ஒன்றுபட்டு விடுகிறான்" என்று 'பாதஞ்ஜல ஸம்உறிதை' கூறுகிறது. "பசுஉறத்தி, ஸுராபானம் முதலிய பாபங்களிலிருந்தும் உறரிநாம மகிமையால் விடுபட்டு உறரியுடன் ஸாயுஜ்யம் பெறமுடியும்" என்கிறது 'வாத்ஸ்யாயன ஸம்உறிதை'. "என் நாமத்தைச் சொல்வதாலேயே மானுடன் என்னோடு கலந்து விடுகிறான்" என்று பகவானே மொழிவதாக 'சாதாதப ஸம்உறிதை'யில் காண்கிறோம். பாஞ்சராத்ரத்தில்

@Page 90

அடங்கியுள்ள யாஜ்ஞவல்க்ய் ஸம்உறிதை சொல்லும் : "உறரியின் பெயரைச் சொன்னால் எவ்வளவு பாபம் அகலுமோ அவ்வளவு பாபத்தை எவருமே செய்ய முடியாது. எனவே நாமத்தை மொழிவது, சாதாரணமாக ஒருத்தன் செய்யக் கூடிய பாபங்களைப் போக்க அதிகப்படியாகும் என்ற அச்சத்திலேயே சாஸ்திரங்கள் (க்ருச்ரம், சாந்த்ராயணம் முதலிய) மற்ற பிராயச்சித் தங்களை விதித்திருக்கின்றன."

ந தாவத் பாபமஸ்தீஉற யந்நாம்நா ந உற்ருதே உறரே : |
அதிரேக பயாதாஉறு : ப்ராயச்சித்தாந்தரம் புதா : |

தாங்கள் ஸநாதன வேத தர்மத்துக்கும் உறிந்து தர்ம சாஸ்திரங்களுக்கும் புராணங்களுக்கும் விரோதமாக, விநோதமாக நாம ஸித்தாந்தத்தை அவலம்பிக்கவில்லை என்று போதேந்திராள், அய்யாவாள் முதலானோர் விவரமாக விளக்குவர்.

அவ்வாறே தாங்கள் அத்வைதத்தை ஆட்சேபிப் போரும் இல்லை என்று தெளிவுபடுத்துகிறார்கள். பக்தி என்றால் அது பரமனிடமிருந்து பிரிந்து நின்று ரஸிப்பதோடு முடிந்துவிட வேண்டும் என்பதில்லை ; பரமனே பக்தியை ஞானமாக்கி பத்னை ஞானியாக்கி அத்வைதத்தில் கரைக்கிறான் என்பவர். அநந்த தேவர் மேற்கோள் காட்டும் ஒரு சுலோகம் இதை வெகு ஸ்பஷ்டமாகக் கூறும் :

வசீக்ருதே மநஸ்யேஷாம் ஸகுண–ப்ரஉற்ம சீலநாத் |
ததேவாவிர்பவேத் ஸாக்ஷாத் அபேதோபாதி கல்பனம் ||

பரம்பொருளைக் குணங்கள் கொண்டதாக பாவித்து அதனிடம் சித்தத்தை ஒருமுகப்படுத்தும் சாதனையில் மனத்தை வசப்படுத்தி விட்டால், பிறகு தானாகவே குண

@Page 91

கற்பனை ஒழிந்து, ஸகுணமே நிர்குணமாக ஆவிர்ப்பவிக்கிறது ; பக்தியே ஞானமாகி விடுகிறது.

அத்வைத ப்ரதிஷ்டாபன மஉறா ஆசாரியர்களான ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களுக்கு பக்தியில், குறிப்பாக நாம மகிமையில், இருந்த ஈடுபாடு மிகவும் ஆழ்ந்தது. இது முக்திக்குக் கொண்டு சேர்ப்பது என்பதைத் தமது "ப்ரச்நோத்தர ரத்ன மாலிகை"யில் ஜயமற மொழிவார் :

பிரச்னம் (கேள்வி) : மானுடரால் ஸ்மரிக்கத் தக்கது எது ?

உத்தரம் (விடை) : எக்காலத்திலும் உறரிநாமமே. (ஆத்ம விசாரமே என்று கூறவில்லை!)

கேள்வி : மனிதருக்குத் துர்லபமானது எது ?

விடை : உறரி பக்தி. (உறரி நாமம் இருக்க மற்ற கர்மானுஷ்டானங்களை வேதம் ஏன் விதித்தது என விவாதம் செய்வோருக்கு இதுவே விடையாகிறது. சுலபமாக இருப்பதாலேயே, 'இதுவா பலன் தரும்!' என்றெண்ணிப் பலரால் கைவிடப்பட்டு 'துர்பல'மாகி விடுகிறது.)

கேள்வி : முக்தி அடைவது எங்ஙனம் ?

விடை : முகுந்த பக்தியால். ('ஞானத்தால்' என்ற விடையையே எதிர்பார்க்கிறோம். ஆனால் ஆசார்யாள் இப்படிச் சொல்கிறார்!)

கேள்வி : முகுந்தன் என்பவன் யார் ?

விடை : எவன் அவித்தை (மாயை)யிலிருந்து கடத்துவிக்கிறானோ அவனே முகுந்தன். (ஞானமார்க்கத்தின் மூலம் தானாகவே



மனோநாசம் என்கிற மாயா நாசத்தைச் செய்து கொள்வதாக நினைப்பதுதான் மோக்ஷோபாயம் என்பதில்லை. பக்தி செய்தாலும் பரமனே மாயையை மாய்ப்பான் என்கிறார்!)

கேள்வி : அவித்தை என்பது என்ன ?

விடை : ஆத்மாவை ஆத்மா விளங்காதிருக்கும் நிலை. (ஆக, பசுவந்நாம ஸ்மரணத்தால் ஆத்மாவொன்றே விளங்கும் அத்வைத ஸாக்ஷாத்காரமே கிட்டுவதாக ஆகிறது : வைகுண்ட கைலாஸாதி புண்யலோக ப்ராப்தி மட்டுமல்ல என்று ஆசாரியாள் வாக்குகளைச் சேர்த்துப் பார்த்தால் தெளிவாகிறது.)

பரமனை நாமங்களால் துதிக்கின்ற வழிபாடே மற்ற சாதனைகளைவிடச் சிறந்தது என்று விஷ்ணு ஸஉறஸ்ரநாம பூர்வபாக பாஷ்யத்திலும் ஆசாரியாள் கூறுகிறார். "இதில் (யாகத்தில் உள்ளது போல்) உறிம்ஸையில்லை : (பூஜை முதலியவற்றில் உள்ளது போல்) இதர திரவியங்களில் அபேட்சையில்லை ; தேச–கால நியமம் இல்லை" என்று விசேஷித்துப் பேசுகிறார்.

சுருங்கச் சொன்னால், மிகவும் சுலபம், மிகவும் சுகம். அதே சமயத்தில் மிகப் பெரிய நற்பலன் தருவது நாம பஜனம். மக்களை எல்லாம் எவ்வித போதமுமின்றி ஒன்று

கூட்டுவதும் இதுவே.

"எவ்வித பேதமுமின்றி" என்பதில் குறிப்பாக சிவ–விஷ்ணு அபேதத்தைச் சொல்ல வேண்டும். அத்வைதிகளான நாம ஸித்தாந்திகள், நாம அபராதம் எனக் கூறும் பத்துக் குற்றங்களில் ஒன்று ஒரு தெய்வத்தை உயர்த்தி இன்னொன்றை நிந்திப்பது (குறிப்பாக உறரி–உறர

@Page 93

தாரதம்யம் கற்பிப்பது). ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட மூர்த்தியிடம் விரேஷப் பிடிமானம் இருக்கலாம். இதில் தவறில்லை. உதாரணமாக போதேந்திராளுக்கு உறரியிடமும் அய்யாவாளுக்கு உறரனிடமுமே உளம் நிறைந்த அன்பு பொங்கி எழுந்தது. ஆனால் தன் இஷ்ட தெய்வத்தைப் போற்றுவதற்காக மற்றவர்களின் இஷ்ட தெய்வங்களைத் தூற்றுவது தகாது என்ற உயரிய கொள்கையை நாம ஸித்தாந்திகள் கைக் கொண்டுள்ளனர்.

இனி போதேந்திரர்கள் கூறும் பத்து விதமான குற்றங்களைப் பார்ப்போம் : 1. நல்லோரை அவமதிப்பது. 2. நாமத்தில் ருசியில்லாத தீயோரிடம் அதன் பெருமையைக் கூறுவது. 3. சிவ – விஷ்ணுக்களை பேத புத்தியோடு நினைப்பது. 4. வேதத்தில் அவநம்பிக்கை. 5. சாஸ்திரங்களில் அசிரத்தை. 6. குருவாக்கியத்தில் அவநம்பிக்கை. 7. நாமத்தை மோக்ஷசாதனமாகக் கூறும் வசனங்கள் உள்ளபடி, உண்மையல்ல என்றும் அவை நாமத்தில் ருசி ஏற்படுத்துவதற்காக மிகைபடக் கூறிய அர்த்தவாதமே என்றும் எண்ணுவது. 8. நாம பலத்தால் எதையும் செய்யலாம் என்று தகாத கர்மங்களை செய்தல், 9. மேற்சொன்ன காரணத்தால் வேத கர்மாக்களை விடுதல், 10. நாம சங்கீர்த்தனத்தை மற்ற சாமானிய தர்மங்களுக்குச் சமமான ஏதோ ஒன்றுதான் என எண்ணுதல். இந்த அபராதங்களை விலக்கி நாம பஜனம் புரிதல் வேண்டும்.

நாம மார்க்கமும் நாத மார்க்கமும் நெருங்கிய தொடர்புள்ளவை. நாதத்தில் பிறந்த ஸங்கீதத்தோடு நாமம் சேர்க்கையிலேயே அது ஸங்கீர்த்தனமாகிறது.

@Page 94

நாத மார்க்கத்தில் அது கீதமாகப் பரிணமிக்காமல், வெறும் ஒலி அதிர்வுகள் என்ற முறையிலே ஆத்மிகத்தை ஈட்டுவிக்கும் உபாஸனையும் உண்டு. சப்த பிரம்ம உபாஸனை, நாத ப்ரம்ம உபாஸனை என்ற பெயர்களில் சுத்தமான ஒலிகளின்

சக்தியாலேயே பரமாத்ம தத்வத்தை அநுபவிப்பதே இது. சப்தங்களின் சுத்தமான உச்சாரணத்தாலேயே தெய்விகத்தை எய்தும் மந்த்ரோபாஸனையும் ஒரு விதத்தில் இதனின்று பிறந்ததுதான். முஸ்லீம் ஸூஃபிக்கள், நானக் பத்திகள் எனப்படும் ஸிக்கியர் ஆகியோரும் சப்த உபாஸனைக்கு விசேஷ இடமளித்துள்ளனர். பைபிளில், "ஆதியில் வார்த்தை இருந்தது : அது இறைவனோடு இருந்தது ; அதுவே இறைவனாக இருந்தது (In the beginning was the Word ; the Word was with God ; and the Word was God.)" என்கிற இடத்தில் 'வார்த்தை' (Word) என்பது பிரணவ நாதத்தையோ, பகவன் நாமத்தையோதான் குறிப்பிடுகிறது என்பாருண்டு.

நாமியின் (அதாவது, நாமத்துக்குரிய இறைவனின்) நினைவில் ஊறாமலே வெறுமே நாமத்தைச் சொன்னாலும், பலனுண்டு என நாம ஸித்தாந்திகளில் சிலர் கூறுகையில், ஒலி அதிர்வுகளாலேயே உன்னத நலன்களைப் பெறும் நாத ஸித்தாந்த வழியில் நின்றுதான் பேசுகிறார்கள்.

ஆயினும் இப்படி நெஞ்சு நனையாமல் வறட்டு ஜபம் செய்து பயனில்லை என்று அடித்துச் சொல்லும் நாம ஸித்தாந்திகளும் உண்டு. உதாரணமாக உபநிஷத் பிரம்மேந்திரர், "ராம நாம அர்த்தம் ஞாத்வா நாம ஸ்மரேத்" என்கையில் பொருளுணர்ந்தே நாம ஸ்மரணை செய்ய வேண்டும் என்கிறார். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும்,

@Page 95

"தெலிஸி ராம சிந்தனதோ நாமமு ஸேயவே" – ராமனையே நினைந்து, நாமத்தின் பெருமை அறிந்து ஜபிப்பீர் – என்கிறார். ஆதி சங்கரர் ஸகலருக்கும் இடம் கொடுக்கிற வள்ளல். எனவே தமது விஷ்ணு ஸஹஸ்ரநாம விரிவுரையில் பக்தியநுபவமில்லாத வெறும் சப்த மார்க்கிகளுக்கு அநுகூலமாக, 'விஷ்ணு புராண'த்திலிருந்து. "தன் வசமின்றியும், பொருளுணர்ந்தோ உணராமலோ வாஸுதேவனைக் கீர்த்தனம் செய்பவனும் உய்வு பெறுகிறான்" (அவசேனாபி யந்நாம்னி ; ஞானதோ அஞ்ஞானதோ வாபி) என்ற வாசகங்களை மேற்கோள் காட்டுகிறார். சொற்பொருளில் திளைக்கக்கூடிய பாகவதர்களைத் தம் உளத்தோடு ஒட்டி, "விச்வம்" என்ற முதல் நாமத்துக்கு விரிவுரை எழுதும் போதோ, இறைவன்தான் இந்த விச்வம் என்று சத்தியமாக அநுபவிக்கக் கூடியவனே இந்த நாமாவைச் சொல்லலாம் என்கிறார்.

ராம நாமா பலன்தர அதில் நம்பிக்கையில்லாவிட்டால் என்ன, அதை ஏன் மும்முறை சொல்ல வேண்டும். ஒரு தரம் சொன்னால் போதாதா என்றெல்லாம் லக்ஷ்மீகாந்தரின் அன்னை வாதாடியதை இச்சரிதையில் கண்டோம். ஆனால் ஒரே முறை உச்சரிப்பில்

பலன் பெற வேண்டுமானால் அதற்கு நாமமும் அதை ஜபிப்பவனும் ஏறக்குறைய இரண்டறவே கலந்திருக்கும் அதி உன்னதப் பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவம் அந்த மூதாட்டிக்கும், மற்றும் பல நாம ஸித்தாந்திகளுக்கும் இருக்கலாம். ஆனால் நம் போன்றவர் ஒருமைப் படாத மனத்தோடு கோடாநு கோடி கர்ம வாஸனைகளைக் கழித்துக் கொள்ள வேண்டியிருப்பதால் கோடாநு கோடி ஆவிருத்தி நாம ஜபம் செய்தாலே ஸித்தி பெற முடியும்.

@Page 96

ராம ரஉறஸ்ய உபநிஷத்தில் ஸ்ரீ ராமனே விதிப்பது போல் தொண்ணூற்றாறு கோடி முறை ராமநாமாவை ஜபித்துத் தான் மஉறானான தியாகையரும் ஸ்ரீ ராம ஸாக்ஷாத்காரம் பெற்றார்.

ராம நாமாவைப் பெற்ற மாத்திரத்தில் புருஷோத்தமனின் கர்மா முழுதும் எப்படி விலகிற்று. பிராமண ஸ்திரீ மும்முறை உச்சரித்தே எப்படி மகா தோஷம் நீங்கப் பெற்றாள் என்ற கேள்விகள் எழலாம். இவை ஈச்வர ஸங்கல்பத்தில் நாமாவின் மஉறிமையை வெளிப்படுத்தவே ஏற்பட்ட நிகழ்ச்சிகளாதலாலேயே இப்படிப்பட்ட அசாதாரண சக்தியைக் காட்டியுள்ளன. இந்த அசாதாரணத்தை நம் போன்றவர்களின் சாதாரண நிலையில் அளவுகோலாகக் கொள்வதற்கில்லை. 'ஆர்ட்டீசியன் வெல்' என்கிற பொங்கு புனலில் தானாக நீர் ஊற்றெடுத்து வாரி அடிப்பதுபோல் ஈசுவர சங்கல்பமே இந்நிகழ்ச்சிகளில் நாமத்தின் அபரிமித சக்திப் பெருக்கை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆனால் நாம் பொறுமையுடன், விடாமுயற்சியுடன் நிலத்தை அகழ்ந்து அகழ்ந்து ஆழச் சென்று கிணறு எடுத்தால்தான் ஜலம் பெற முடியும். எத்தனை உழைப்பை நாம் மேற்கொண்ட போதிலும் இறுதியில் ஜலத்தை நாம் சிருஷ்டிக்கவில்லை என்பதே போல், நம் இடைவிடா ஸாதனையின் பலனும் நம்மாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை ; அது ஈசுவரப் பிரஸாதமாகத்தான் கிடைக்கிறது.

புருஷோத்தமனுக்கும், பிராம்மண பத்தினிக்கும் நாமா வெகு எளிதில் மிப் பெரிய பலன் தந்ததற்கு அவர்களது ஸம்ஸ்கார விசேஷமும் ஒரு காரணமாக இருக்கலாம். நாமும் விடாத ஸாதனையால் அந்த அளவு சுத்தீகரிக்கப்பட்ட நிலையில்தான் நமக்கும் நாமா அது

@Page 97

போன்று அதிவிரைவில் அற்புத பலனைத் தர இயலும். கந்தகத்தின் எட்டத்தில்

நெருப்பைக் கொணர்ந்தாலே அது குபீரெனப் பற்றிக் கொள்கிறது என்பதால் ஈரப் புளியங்கரிக்கு எண்ணெய் வார்க்காமலும் விசிறாமலும் இருப்பதா ? கர்மம் தீர நீண்ட சாதனை நிச்சயம் தேவை. பலன் எப்போதோதான் கிடைக்கும் எனில் எவரும் சாதனையில் ருசி கொள்ள மாட்டார் என்றே, அவர்களை உத்ஸாஉறப்படுத்தும் பொருட்டு, எளிதில் பலன் கிடைப்பதாக இம் மார்க்க பிரவர்த்தகர்கள் கூறுகின்றனர் போலும்! நாம ஜபம், பஜனை ஆகியவற்றில் பலர் உடனடி பலனை எதிர்பார்ப்பதாலேயே ஈடுபடுகின்றனர். ஆனால் அப்படி கைமேல் பலன் கிடைக்காவிடினும் இந்த ஜபத்திலும், பஜனையிலும் தாற்காலிகமாகவாவது ஒரு ஸௌக்கியம் இருக்கிறது என்பதால் அதை விடாமல் தொடருகின்றனர்.

கடுங்கோடையில் தபிக்கிறவர்களுக்கு அவ்வப்போதேனும் ஒரு குளிர் காற்றலையாக இருப்பது நாமமே. காற்றுக்கு அந்தக் குளிர்ச்சியை ஊட்டிய மூலமான ஸர்வ தீர்த்தத்தில்தான் பகவந் நாம போதர் அமிழ்ந்து நூல்களான காற்றலைகளைப் பரப்பினார்.

@Page 98

## 6
## கோடி தீர்த்தம்

விச்வாதிக ஆத்ம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் வடபுல யாத்திரையை முடித்துக் காஞ்சிக்குத் திரும்பினார்.

இனி வளர இடமில்லை என்னும் நிறைமதியாக நின்ற இளவலைக் கண்டு புளகமுற்றார். அஷ்ட ஐசுவரியங்களாக அவர் சமர்ப்பித்த எட்டு நூல்களையும் கண்ணுற்று, ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தாயாகப் பூரித்தார்.

சேதுவில் ராமநாதனுக்கு கங்காபிஷேகம் செய்தால் தானே கங்கா யாத்திரை பூர்த்தியாகும் ? ஸ்ரீமடம் ராமேசுவரத்துக்குப் புறப்பட்டது.

"காசியில் ராமனைப் பிடித்தாச்சு. ராமனே பிடித்த லிங்கத்தைப் பார்க்கவேண்டுமா ?" என்றார் ஆத்மபோதர்.

"இரண்டு பெரியவாளும் சேர்ந்து பார்ப்பதை நாங்கள் பார்க்கப் போவது எங்கள் பாக்கியம்" என்று பக்தர்கள் கூறினர்.

ஆத்மபோதர் சிறிது மௌனமாயிருந்தார். பிறகு தீவிரமான உணர்வுடன், "இரண்டு பேர் எதற்கு? இரண்டு என்றால் த்வைதம் இல்லையோ? இளைய ஸ்வாமிகள் பார்த்தாலே நான் பார்த்ததாகத்தான் அர்த்தம். அது சரி,

@Page 99

இனிமேல் அவரை இளைய ஸ்வாமிகள் என்று சொல்ல வேண்டாம். எங்கள் இருவர் பேரிலும் பொதுவாக 'போதம்' என்று வருகிறதல்லவா? அதனால் அவரை போதேந்திராள் என்றே சொல்லுங்கள். நான் காது குளிரக் கேட்கிறேன்" என்றார்.

சீடரைத் தாமே என்று சமமாக நினைத்தது மட்டுமல்ல, தம்மிலும் உயர்வாகச் சிலாகித்தும் பேசுவார். உடனே சீடர் முன்னிலும் அடங்கிவிடுவார். அற்புத குரு. அற்புத சிஷ்யர்!

அது சரி, ஏன் ஒருவர் மட்டும் ராமேசுவர தரிசனம் செய்தால் போதும் என்கிறார்?

தொண்டை நாட்டிலிருந்து நடுநாடாகிய இன்றைய தென் ஆர்க்காட்டை இரு பெரியவர்களும், ஸ்ரீமடத்தினரும் அடைந்தனர், சேது யாத்திரா மார்க்கத்தில்.

விழுப்புரத்தை அடுத்த வடவாம்பலத்தில் மடம் முகாமிட்டிருந்தது.

"வடவாம்பலம், வடவாம்பலம்" என்று முணுமுணுத்தார் ஆத்மபோதர். "இருதயத்தில் அம்பலம் இருக்கிறது. அதோடு அதாகிவிடவேண்டும் என்று வடவைத் தீ மாதிரித் தாபமாயிருக்கிறது. "வடவாம்பலம், வடவாம்பலம்" என்றார்.

தாம் பலகாலமாக ருசித்துச் சொன்ற நாமாவை கம்பீரமாக ஜபித்துக் கொண்டு நிஷ்டையில் அமர்ந்து விட்டார்:

"ஸதாசிவோம், ஸதாசிவோம், ஸதாசிவோ....ம்"

@Page 100

வடவைத் தீ அடங்கியது. அம்பலத்தில் ஐக்கியமாகி விட்டது புனிதரின் உயிர்.

ஆத்மபோதர் ஆத்மபோதமாகிவிட்டது.*

பரிபக்குவ சிகரமாகிவிட்ட போதேந்திரர் இம்மறைவை அலாதித் தெளிவுடன் ஏற்றுக் கொண்டார்.

ஞானபிதாவுக்கு சமாதியமைத்தார் போதேந்திரர்.

விழுப்புரத்தில் ஜனித்த விழுப்பொருளான நம் காஞ்சிப் பெரியவாள் 1927 தொடக்கத்தில் வடவாம்பலத்துக்கு எழுந்தருளினார். அங்கே ஆத்மபோதரின் சமாதி ஸ்தானம் எவருக்குமே தெரியாமல் மறைந்து போயிருந்தது. தேவரகசியங்களையும் துளைத்துக் காணக்கூடிய பெரியவாள் – இவர் துளைக்க வேண்டுமென்பது கூட இல்லை, அவை தாமாக இவர் முன்பு தங்களை மடலவிழ்த்துக் கொள்ளும் ! – வடவாம்பலத்தின் வயல் வரப்பு, மேடு பள்ளம் முழுதும் திருவடி பாலித்துக் கொண்டே சுற்றிச் சுற்றி வந்தார். சட்டென்று ஓரிடத்தைக் காட்டி, அங்கே வெட்டிப் பார்க்குமாறு பணித்தார். கிராம மக்கள், அவ்விடத்தில் வேறொரு சந்தர்ப்பத்தில் வெட்டியிருப்பதாகவும் சமாதியின் அடையாளம் எதுவும் அங்கு தென்படவில்லை என்றும் கூறினர். பெரியவாளோ தீர்மானமாக, "இருக்கட்டும், மறுபடி வெட்டுங்கள்" என்றார்.

பலர் நிலத்தை அகழலாயினர். கீழே கீழே செல்கையில் அவர்களில் ஒருவரான குமாரமங்கலம்

---

*ஆத்மபோதர் ஸித்தியான நாள் 1638 – ஈசுவர வருஷம் ஆச்வினம் (ஐப்பசி) கிருஷ்ணபட்ச அஷ்டமி

@Page 101

ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகளுக்கு ஆவேசம் மேலிட்டது. "நிறுத்துங்கள் நிறுத்துங்கள்" என்று கூவிப் பிரக்ஞையிழந்து சாய்ந்தார்.

ஆஉறா! அங்கே ஒரு சிதைந்த கபாலம் காணப்படுகிறது!

நீண்ட நேரத்துக்குப் பின் சாஸ்திரிகளுக்கு வெளியுணர்வு வந்தது. மயிர்க்கூச்செறிந்து கூறினார் ; "அந்த இடத்தை வெட்டியவுடன் ஆகாசத்துக்கும் பூமிக்குமாக ஒரு சந்நியாச் சிரேஷ்டரின் திவ்யரூபம் எனக்குத் தரிசனமாயிற்று. அவருக்கு முன் ஆயிரக்கணக்கான வேத வித்துக்கள் உபநிஷத கானம் செய்து கொண்டிருந்தனர். "தோண்டாதே, தோண்டாதே!" என்று முணமுணத்த ஸ்வாமிகள், உபநிஷத

பாராயணத்தையும் நிறுத்தினார். தமது விசுவ ரூபத்தைச் சுருக்கிக் கொண்டே வந்து, அப்படியே அந்தர்தானமாகிவிட்டார்! ஆனாலும் 'ஸதாசிவோம்' என்ற ரீங்காரம் மட்டும் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது."

விச்வாதிகர்தாம் விச்வ வியாபகராக வந்தார் என்பதில் சம்சயமும் உண்டா ?

அவ்விடத்தில் ஸ்ரீ பெரியவாள் திருவுளப்படி பிருந்தாவனம் நிர்மாணிக்கப்பட்டது. எப்போதுமே ஸஉறஜ சமாதியில் உள்ள நமது பெரியவாள், இச் சுற்று வட்டாரத்துக்கு வரும் போதெல்லாம் இந்த சமாதிக்குச் சென்று நீண்ட நேரம் நிர்விகல்ப சமாதி கூடியிருப்பது வழக்கம்!

@Page 102

சேது யாத்திரையைத் தொடர்ந்தார் போதேந்திராள். இனி அவர் இளைய ஸ்வாமிகள் இல்லை. அசல் ஸ்வாமிகளே! பூரண பீடாதிபதியானவுடன் விநயம் அதிகமாயிற்று.

செல்கிற இடமெல்லாம் நாம மகிமையைப் பரப்பினார். சத்திய சக்தி அவர் வாக்கில் சுடர் தெறித்தது. ஆனால் அதைக் கிரகிக்கும் பாக்கியம் இல்லாதவருக்குப் புவியில் தாம் பெற்ற அற்புதப் பிரமாணத்தை ஜகந்நாத புரியில் கண்ட அந்தண மாதின் மூலம் பிரத்தியக்ஷமாகக் காட்டி, அவர்கள் உள்ளத்தை நாமத்தில் ஈர்த்தார்.

"ஸ்ரீராமன், 'நானா நாராயணன் ? நான் நரன்தான், தசரதன் பிள்ளைதான்' என்று தன் தெய்விகத்தை மறுத்து மநுஷ்யனாகவே வாழ்ந்தான். அந்த ரூபம் ஒரு நாள் மறைந்தும் போயிற்று. ஆனால் அவனது நாமமோ மந்திர ராஜமாக, அதி மாநுஷ்ய சக்தியோடு சிரஞ்ஜீவியாய் இன்றும் விளங்குகிறது. பாப—தாபங்களைத் தீர்ப்பதில் அதற்குள்ள மகா வீரியத்தை ஸ்தூலமாகப் பார்க்கவேண்டுமானால் பிரமாணமாக இதோ இந்த பிராமண மாதைப் பாருங்கள்" என்றார்.

அவளது அழியாத் திலகமும் செவியில் மின்னிய பொட்டுகளும் நம்பிக்கை மழையைப் பொழிந்தன. அவள் ஒருத்திக்கு ஏற்பட்ட அருள் தமிழகம் முழுதையும் திவ்ய நாமத்திடம் திருப்பிவிட்டது.

இங்கு ஒரு நுட்பமான உண்மையைச் சொல்ல வேண்டும். அந்தப் பதிவிரதா ஸ்திரீ ஓர் உத்தம லக்ஷயத்துக்காகப் பலருக்குக் காட்சிப் பொருளாகிற தியாகத்தைச் செய்தாள். ஸகல மட்டங்களிலும்

உள்ளவர்களுக்கு நன்மை பயப்பதெனில் தியாகம் செய்தேயாக வேண்டியிருக்கிறது. ஒரு கவி, ஓர் எழுத்தாளன் உயர்ந்த விஷயங்களைப் பாமரருக்கும் உணர்த்த முற்படுகையில் எத்தனையோ வேதனையுடன் ரஉறஸ்ய ரஸங்களை, த்வனிகளை, வ்யாக்கியங்களை உடைத்துப் புட்டுக் காட்டுகிற தியாகத்தைச் செய்து, தன் காவியக் கற்பைக் காட்சிப் பண்டமாக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஏன், மகா மகாகவியான பகவானும்கூட 'இயற்கை' என்ற பெயரில் தான் ரகசியமாக இயற்றுகிற பிரபஞ்ச காவியத்தில், அவ்வப்போது இயற்கையை மீறி அற்புதம் நிகழ்த்தியே தன்னால்தான் பிரபஞ்ச இயக்கம் எனக் காட்டி மக்களை உயர் கதிக்கு இழுக்கும்போது, கலாரீதியில் கீழ் மட்டத்துக்கு வந்து தியாகமே புரிகிறான். இப்போது பிராம்மண பத்தினி செய்த தியாகத்துக்கு வித்து, அன்று இவள் பொருட்டே ஜகந்நாதபுரியில் இறைவன் செய்த அந்தத் தியாகந்தான்.

வித்வான்களின் வாதங்களுக்கெல்லாம் தெள்ளத்தெளிய விடை புகன்றார் போதேந்திராள். தமது அஷ்ட கிரந்தங்களை எடுத்துப் போட்டு அவர்களுடைய வாயை அடைத்தார்.

புரட்சியாக இல்லாமல் சாந்தமாகவே, வீரமாக இல்லாமல் நெஞ்சீரத்தாலேயே நாம சித்தாந்தத்தை நிலை நாட்டினார். வேதம், வேள்வி, யாகம், யோகம், மந்திரம், தந்திரம், பூஜை, ஆத்மவிசாரம் எதையும் பழிக்காமலே நாமத்தை வேரூன்றச் செய்தார். பழ மரபையும் மதித்து அதே சமயத்தில் நிகழ்கால – எதிர்காலத் தேவைகளையும் அநுசரித்துப் பெரிய மாற்றத்தை இதமாகவும் அநாயாசமாகவும் செய்வதற்கு அவதார புருஷர்களால்தான்



முடியும் ஒரு சிறிய உதாரணம் பாருங்கள் ; போதேந்திராளைப் பற்றிய பாடல் ஒன்றில் அவரை "ஊர்த்வ புண்ட்ராங்கித பாலம்" என்று வர்ணித்திருக்கிறது. அதாவது விபூதி தாரணமே செய்ய வேண்டிய இக் காமகோடி பீடாதிபர், கோபீ சந்தனத்தைக் குழைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். இந் நூலுக்கான முகப்புப் படத்தில் முதலில் அவரை ஓவியர் இவ்விதமே தீட்டினார். ஆனால் அது மிகவும் மரபுக்கு முரணாக உறுத்தியதால் விபூதி தரித்ததாக மாற்ற வேண்டியதாயிற்று. ஆனால் அவரோ அந்நாளில் எவருக்கும் உரசல் ஏற்படுத்தாமலே இப்படி ஊர்த்தவபுண்டரம் அணிந்திருந்திருக்கிறார்! பரம்பொருளாலேயே அனுப்பப்பட்ட மகாபுருஷரன்றோ போதேந்திரர் ? அதனால்தான் புரட்சித் தடபுடல் இல்லாமல் ஞான

விசாரணையையே நவிலும் அத்வைத மடத்திலிருந்து நாம உச்சாரணத்தை மலைச்சோதியாய் ஏற்றி வைத்தார்.

குறிப்பாக, ஏகாந்த ஜபத்துக்கு ராம நாமாவைத் தந்தார் ; சர்வ ஜனங்களும் சேர்ந்து கோஷிக்க கோவிந்த நாமத்தைக் கொடுத்தார். "கோவிந்தா கோவிந்தா" வோடு, "உறர உறர மஉறாதேவா"வையும் போகிற இடமெல்லாம் பொல்லெனப் பொலிவித்தார். ஒரு சிலருக்கு சிவ பஞ்சாக்ஷரியும் உபதேசித்தார்.

ஜபம் மட்டுமின்றி, இசை கலந்து இனிமை பயக்கும் பஜனை சம்பிரதாயத்துக்கும் அடிகோலினார். தேவாரத்தையும், திவ்யப் பிரபந்தத்தையும், திருப்புகழையும் பெற்றெடுத்த தெய்வத் தமிழ்நாட்டில் புதிய நாமாவளிகளும், அபங்கங்களும், அஷ்டபதிகளும், பஜன்களும் தலைதூக்கித் துளிர்விடலாயின. அது தருவாக வளர்ந்து இங்கு நிலைத்து நின்றது பிற்பட்ட கதை.

@Page 105

ஓர் அணை கட்டுபவரை நன்றியோடு நினைக்கிறோம். ஆத்மப் பயிருக்காக சாசுவதமானதொரு ஜீவ நதியை எதிர்காலத்துக்கெல்லாம் தேக்கித் தந்துவிட்ட தெய்வதூதருக்கு எத்தனை நன்றியஞ்சலி செலுத்தினாலும் போதுமா? சாதனைகளுக்குள் பரம சுலபமான, பரம சுகமான நாம ஜபத்தையும் ஸங்கீர்த்தனத்தையும் நமக்குத் தந்த வள்ளல் போதேந்திராளைவிடப் பெரிய உபகாரி எவருண்டு?

நாம மஉறிமையும், ஸங்கீர்த்தன ஸம்பிரதாயமும் தமிழகத்தில் வெகு விரைவில் வேர் பிடித்ததில் வியப்பே இல்லை. "வேர் பிடித்தது" என்பது கூடச் சரியில்லைதான். ஏற்கனவே தமிழ்நாட்டில் உள்ளோடி பலம் பெற்றிருந்த வேர்தான் அது. ஏனோ இடைக் காலத்தே ஜீவ ஸாரம் இழந்து, உளுந்து மட்கும் நிலைக்கு வந்தது. இப்போது போதேந்திராள் எரு வைத்து, மழை பொழிந்தவுடன் வேர் நல்ல உயிர்ப்பு கொள்ள, கிளுகிளுவென்று நாம விருக்ஷம் கிளைத்து எழுந்துவிட்டது.

பூர்வத்திலிருந்து தமிழகம் நாம மஉறிமையை உணர்ந்து போற்றியிருப்பதற்கு இங்கு சிறிது சான்றுகள் கேட்போம். மஉறனீயர் தம் மணிவாக்குகளைக் கருத்தினிக்கக் கேட்போம்.

சைவ நெறியை எடுத்துக் கொண்டால்,

திருஞானசம்பந்தரின் "நமச்சிவாயப் பதிகம்" நாம உபாஸனையே சகல புருஷார்த்தங்களையும் நல்குவதைத்தான் ஆணித்தரமாக நவில்கிறது. சகல பாபங்களையும், அதாவது கர்மங்களையும் அது கழுவி விடுகிறது என்பதையே,

@Page 106

எல்லாத் தீங்கையும் நீங்கவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே

என்கிறார் ஆளுடைய பிள்ளைகள். நாம உபாஸனை வைதிகத்துக்கு முரண் அல்ல ; மாறாக இதுவே வேதத்தைப் பிழிந்தெடுத்த ஸாரம் என்பதை,

வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என்கிறார்.

அப்பர் ஸ்வாமிகள் நாயிகா பாவத்தைப் பாடுகையில் தலைவியானவள் ஈசனின் திரு உருவப் பாங்கினை ("மூர்த்தி அவனிருக்கும் வண்ண"த்தை) அறியும் முன்பே அவனது நாமத்தைக் கேட்டு, அம் மாத்திரத்திலேயே அவனிடம் ஆரா அன்பு பூண்டதைத்தான்,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்

எனச் சிறப்பிக்கிறார். ரூபத்திலும் நாமம் பெருமை பொருந்தியது என்ற நாம ஸித்தாந்தமே இங்கு வந்து விட்டாற் போல் உள்ளது. இதையே.

ஓடினேன் ஓடிச் சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே

என்பதிலும் காண்கிறோம். முதலில் நாமம் கேட்டு ஈசனிடம் காமம் கொண்டார். அவனிடம் ஓடிச்சென்று ரூபம் கண்டார். கண்டபின் அப்படியே பஞ்சாக்ஷர ஜபத்தில் ஆழ்ந்துவிட்டார். அதாவது நாமத்தில் தொடங்கி, இடை நிலையில் ரூபத்தைக் காட்டி, மறுபடி நாமத்திலேயே தான் முடிகிறது சாதனை.

@Page 107

நாமம் தோன்றிய பின்னரே அவனுக்கு ஒரு ரூபம் தோன்றுகிறது என்ற கருத்தை 'சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்' என்பதால் சுட்டுகிறார் – சிவ நாமத்துக்குடைய செவ்விய ரூபம் என்கிறார். நாம் சாதாரணமாக ஒருவரின் உருவத்தைப் பார்த்துப் பிறகு அவர் பெயர் என்ன எனக் கேட்கிறோம். ஈசனுக்கோ முதலில் பெயர் உண்டாகி, அப்புறம்தான் ரூபமே ஏற்பட்டது. இதனால் தான் "நாம ரூபம்" என முதலில் நாமத்தைச் சொல்வது. சப்த ரூபமான ப்ரணவம் என்ற நாமம் தோன்றியபின்தானே தெய்வ ரூபங்களே ?

நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

என்று நாவரசர் நவின்றதை அறியாதார் யார் ?

சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் தமது திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில், நாம மகிமையில் கொடுமுடியைக் காட்டுவதே போல் பத்து அடிகளில் ஒவ்வொன்றின் ஈற்றிலும்

நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே

என்று உருகி உருகிக் கூறுகிறார்.

கேட்டு உருகாதார் இல்லாத திருவாசகம் தந்த வாதவூர் அடிகள்,

நமச் சிவாய வாஅழ்க, நாதன்தாள் வாழ்க

என்பதாகத் தமது திருமுறையை, திருமறையை, தொடங்கும் போதே முதலில் நாமத்தைப் போற்றி, பிறகு தான் நாமியின் தாளினைப் போற்றுகிறார்.

இறைவன் உபதேசித்த திருவார்த்தையே பிரம்ம ஸாக்ஷாத்காரம் கூட்டியது என்பதை,

@Page 108

ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே

என்று மணிவாசகர் நவில்கையில், நாம மார்க்கத்தின் தொடர்பு கொண்ட நாத

மார்க்கமே விரிகிறது.

சைவ தத்துவங்களையும், ஸகல ஸமயங்களுக்கும் பொதுவான ராஜயோக தத்துவங்களையும், மந்திர சப்த நுணுக்கங்களையும் சுருக்கெனக் கூறும் திருமூலர், 'சிவ சிவ என்னச் சிவகதியாமே' என்கையில் நாம ஜபம் ஒன்றாலேயே கதிமோக்ஷம் ஸித்திப்பதைச் சாற்றுகிறார்.

இனி வைஷ்ணவ நெறியை எடுத்துக் கொண்டாலோ,

திருமங்கையாழ்வார்,

'கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்! என அற்புத அஷ்டாக்ஷரப் பாசுரம் பாடி விட்டார்.

உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தென்
உடம்பெலாம் கண்ண நீர் சோர
நன்னிருள் அளவும் பகலும் நான் அழைப்பன்
நாராயணா என்னும் நாமம்

என்பது போன்ற வரிகள் எந்த உள்ளத்தையும் க்ஷணமேனும் உலுக்காமலிரா.

நாமத்தில் மனமார ஈடுபட்டு உணர்ந்து ஜபியாவிடினும் அது தன் உள்ளார்ந்த சக்தியால் நம்மைத் தூய்மைப்படுத்திவிடும் என்ற கருத்து பல நாம ஸித்தாந்திகளிடை உள்ள போதிலும், சிலர் இதனை ஆட்சேபிப்பர். மனமார உணர்ந்து சொன்னாலே பலன் உண்டு என்ற இவர்களது கருத்துக்கு ஆதரவாகவே திருமங்கை மன்னரும் பாடுவார் :

@Page 109

....பண்பன் பெயரினையே
புந்தியால் சிந்தியாது ஓதி உருவெண்ணும்
அந்தியால் ஆம் பயன் அங்கு என் ?

(உருவெண்ணும் – இத்தனை ஆவிருத்தி ஜபித்தோம் என்று கணக்கிடும் ; அந்தியால் – சந்தியா கால ஜபத்தால்)

"சிவ கதி" எனத் திருமூலர் எதைச் சொன்னாரோ அந்த "மாக்கதி" யான பரம பதம் பெற நாமமே போதும் என்பார் ;

நா வாயில் உண்டே ; நமோ நாரணாய என்று
ஓவாது உரைக்கும் உரையுண்டே ; மூவாத
மாக் கதிக்கண் செல்லும் வகை உண்டே!

திருமழிசைப் பிரானும் இதே நிலையில் இருந்து கொண்டு தமக்கு வேறெந்த ஸாதனையும் வேண்டாம் என்கிறார் :

தொழில் எனக்குத் தொல்லைமால் தன் நாமம் ஏத்த
பொழுதெனக்கு மற்(று) அதுவே போதும்

(தொல்லை – தொன்மையான)

சுவையானதொரு புது விஷயம் புகல்கிறார் திருமழிசையார், அம்பிகைக்கு ஈசன் ராம மகிமையை உபதேசிப்பதாக நாம் பல புராணங்களிலிருந்து அறிவோம். இவரோ அம்பிகையே ஈசனுக்கு உறரி நாம மஉறிமையை ஓதியதாகப் பாடுகிறார் ;

....காமனுடல் கொண்ட தவத்தாற்(கு) உமை
உணர்த்த – வண்(டு) அலம்பும்
தார் அலங்கல் நீண்முடியான் தன் பெயரே

@Page 110

(காமனுடல் கொண்ட தவத்தார் – காம தஉறனம் செய்த தபஸ்வியான ஈசன் ; வண்டு அலம்பும் தார் அலங்கல் – வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யும் பூமாலை)

நாரணன் நாமத்தை உபாஸிப்பதுதான் தவங்களுள் பெருந்தவம், அதுவே பரமனின் திருவடி சேர்ப்பிக்கும் என்பதைப் பூதத்தாழ்வாரின் கீதத்தால் பெறுகிறோம் :

பேர் ஓதி ஏத்தும் பெறும் தவத்தோர் காண்பரே
கார் ஓத வண்ணன் கழல்

(கார் ஓத – கரிய கடல்)

"நாமத்தைச் சொல்லிக்கொண்டு, செல்கிற இடங்களையெல்லாம் அதனால் புண்ணிய தீர்த்தமாக்குங்கள்" என்கிறார் இவர் இன்னொரு பாசுரத்தில் :

கர நான்குடையான் பேர் ஓதிப் பேதைகாள்
தீர்த்தகரர் ஆமின் திரிந்து

பேதைகளையும் உய்வித்துத் தீர்த்தகரராக்கி, அதன் மூலம் அவர்களாலேயே உலகையும் உய்விக்க நாம உபாஸனையை விதிக்கும் பூதத்தாழ்வார் மற்றோரிடத்தில் ஏழைகளை (ஆன்ம சம்பத்தில் ஏழையரை) விளித்துச் சொல்கிறார் :

"வேகத்தில் பாண்டித்தியம் இருந்து விட்டால் நிரம்ப நல்லதுதான். இப்புலமையை சம்பாதித்துக் கொள்ள மாட்டீர்களா ? பரவாரயில்லை. ஸகல வேதங்களின் ஸாரமாக மாதவனின் நாமா இருக்கிறது. வேதத்தின் தாத்பரியம் யாவும் முடியும் பரம சத்தியமான புருஷோத்தமனின் பேரை ஓதுகிற திறத்தை – வேத



அத்யயனம் போல் அரிய திறன் இதற்குத் தேவையில்லை ; இதனை – ஏழையரான நீங்களும் அடைவீர்களாக!"

ஓத்தின் பொருள் முடிவும் இத்தனையே, உத்தமன் பேர்
ஏத்தும் திறம் அறிமின் ஏழைகாள்! – ஓத்(து) அதனை
வல்லீரேல் நன்(று) ; அதனை மாட்டீரேல் மாதவன் பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு

(ஓத்து – வேதம், ஓதப்படுவதால் இப்பெயர் பெற்றது).

நாம ஸித்தாந்தம் வைதிகத்துக்கு விருத்தமல்ல ; வேதப் புலனை எய்த மாட்டாதாருக்கே அது விதிக்கப்படுகிறது என்ற கருத்து இங்கே காணப்படுகிறது.

பொய்கையாழ்வாரும் நாமப் பொய்கையில் ஆழ்ந்து மெய்ப்பொருள் முத்தை எடுத்தவர்தாம். ஓயாமல் நாமாவைப் பித்தாகக் கூறுவார் அன்றி வேறெவர் இறைவனை அறிய முடியும் என வினவுகிறார்.

பேரே வரப் பிதற்றலல்லால் எம்பெருமானை
ஆரே அறிவார் ?

ஆழ்வார்களின் முடிமணியான நம்மாழ்வார் நாம மகிமையைக் கூறாதிருப்பாரா ?

பாடீர் அவன் நாமம்
வீடே பெறலாமே!

என்று ரத்தினச் சுருக்கமாக, நாம ஸங்கீர்த்தனமே மோக்ஷ உபாயம் என்பதைப் பளீயரெனக் கூறிவிடுகிறார்.

ஜபம் என்பதே இப்படிப் பாடுகையில் பஜனை ஆகிறது. இசையை இறைவழி பாடாகக் கூறுவதில் தமிழக மஉறான்களின் வாக்குகளைச் சொல்லப் புகுந்தால்



பாரதமாக விரியும். எனவே நாம கீர்த்தனத்தின் கீர்த்தி நந்தமிழ் நாட்டில் வெகு சீக்கிரத்தில் தளிர்த்துத் தழைத்ததில் வியப்பில்லை.

ஸங்கீதம் இல்லாத ஜபம், ஸங்கீதம் கலந்த ஸங்கீர்த்தனம் இவற்றோடு 'லிகித ஜபம்' என்றும் ஒன்று நாம ஸித்தாந்தத்தில் உண்டு. அதாவது, பகவன் நாமாவை லக்ஷம் ஆவிருத்தி, கோடி ஆவிருத்தி என்று எழுதுவது. இவ்விதம் நாமத்தை எழுதிச் செய்யும் உபாஸனையும் பூர்வத்திலிருந்தே தமிழகத்தில் உண்டு என்பதற்கு,

கடல் வண்ணன் என்பதோர் பேர் எழுதி....
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி

என்ற ஆண்டாளின் அருள் வாக்குகள் அத்தாட்சி பகர்கின்றன.

'பக்தி' என்பது ஒரு பெண்ணாக உருக்கொண்டு நாரதரிடம் தன் சுயசரிதையைச் சொல்லிக் கொள்வதாகப் பத்ம புராணத்தில் ஓர் அழகிய விருத்தாந்தம் உண்டு. அதிலே அந்த பக்திப் பெண் "நான் பிறந்தது தமிழகத்தில்" (உத்பன்னா த்ரவிடே ஸாஉறம்) என்கிறாள். பக்தியின் பிறந்த வீடேயான தமிழ்நாட்டில், பக்தி புரியும் பல வழிகளில் கலிக்கு விசேஷமான நாம உபாஸனையும் ஆதியிலிருந்து சிறப்புற விளங்கினாலும் நடுவே நலிவு கண்டிருக்கிறது. இப்போது போதேந்திராள் பாசனம் தொடங்கியவுடன் அந்த உபாசனம் மீண்டும் பச்சென உயிர் பெற்று அபரிமித விளைச்சல் தரத் தொடங்கிவிட்டது.

@Page 113

ஏற்கனவே பாரதத்தின் மற்ற பகுதிகளிலெல்லாம் பரவியிருந்த நாம கீர்த்தனம் போதேந்திராள் காலத்திலிருந்து தமிழகத்திலும் உயிர்ப்பு பெற்றது.

இதன் பின்பு பாரத வர்ஷத்தில் தோன்றிய ஏராளமான மஉறாபுருஷர்கள் நாம உபாஸனையை நலியாது வளர்த்து வந்திருக்கின்றனர். ஸமீபகாலமாகவோ இது வெகு செழுமையுடன் கப்பும் கிளையுமாகத் தழைத்து, எங்கு பார்த்தாலும் திவ்ய நாம பஜனை மயமாக இருக்கிறது. கலின் கோலாஉறலம் மிகவும் தலைவிரித்தாடும் தற்சமயத்திலேயே அதன் விசேஷ விஷ முறிப்பு ஔஷதமான நாமமும் புத்தெழுச்சியுடன் பரவி, உலகம் அடியோடு வீழ்ச்சியுறாமல் தடுத்து வருகிறது. தற்சமயம் சமய உலகில் மிகவும் சக்திகரமாகத் திகழும் காஞ்சிப் பெரியவர்கள், மா ஆனந்த மயீ, ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா ஆகிய மூவருமே எல்லா ஸாதனைகளுக்கும் மீதாக நாம பஜனையைக் கொழுந்து விட்டொளிரச் செய்து வருகின்றனர்.

இன்று இன்னொரு விரேஷம், பாரதம் மட்டுமின்றிப் பார் முழுதுமே பரமன் நாம மகிமையை உணர்ந்து பஜனையில் ஈடுபட்டிருப்பதாகும். குறிப்பாக ஸ்ரீஸத்யஸாயி ஸமிதிகளும், ஸ்ரீகிருஷ்ணணுணர்வு ஸங்கத்தாரும் (Sri Krishna Consciousness Cult) ஸர்வ தேசங்களிலும் வளர்பிறையாக விருத்தி அடைந்து வருவதால் உறவாயிலும், ட்ரினிடாட்டிலும், ஜாகர்த்தாவிலும், டோக்கியோவிலும், கம்பலாவிலும் நூற்றுக்கணக்கான மக்கள் வேத சமயக் கடவுளரின் திவ்யநாமங்களை பக்தி பரவசத்துடன் நகர ஸங்கீர்த்தனம் செய்யும் அற்புதம் நடந்து வருகிறது.

@Page 114

நம் சரிதையோடு இரண்டறக் கலந்துள்ள ஸ்ரீகாஞ்சிப் பெரியவாள் நாம மஉறிமை குறித்துக் கூறும் ஓரிரு மணி வாசகங்களை இங்கே நினைவு கூர்வது மிகப் பொருத்தமாகும்.

"மற்ற மதஸ்தர்களில் சிலர், 'உங்கள் மதத்தில் பாபத்தைப் பரிஉறரிக்க வழி இல்லை. எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளித்தால் போய்விடும். ஆகையால், எங்கள் மதத்துக்கு வாருங்கள்' என்கிறார்கள். அதைக் காட்டிலும் ஸுலபமான மார்க்கம் நம் மதத்தில் இருக்கிறதென்று தெரிந்து கொண்டிருந்தால் இப்படிக் கூப்பிடுகிறவர்களைப் பார்த்து, 'முதலில் நீங்கள் எங்களைக் கூப்பிடும் பாபத்தைப்

பரிஉறாரம் பண்ணிக்கொள்ளுங்கள்' என்று சொல்வோம். நம் மதத்தில் பாப பரிஉறாரத்துக்காக உள்ள அந்த அதி ஸுலபமான மார்க்கம் நாம ஸ்மரணந்தான். பரமேச்வரனை நாம் நேரில் பார்க்க வேண்டும் என்பதில்லை. அவனுடைய நாமாவே போதும். நமக்கு நன்றாகத் தெரிந்தது அது. அதை ஸ்மரிப்பதோடு வாக்கால் சொல்ல வேண்டும். மனிதனாகப் பிறந்த ஸகலரும் சொல்ல வேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்ல வேண்டும். அதைச் சொல்லத்தான் நாக்கு, வாக்கு இருக்கிறது. சொல்லாவிட்டால், 'வாக்கினால் செய்ய வேண்டியதை இவன் செய்யவில்லை. இவனுக்கு அந்த சக்தி தந்ததே தப்பு' என்று பரமேச்வரன் அடுத்த ஜன்மாவில் திரும்பி வாங்கி விடுவான்."

"ஸ்ரீமத் போதேந்திராள் நாம மஉறிமை பற்றி இப்படி ஒரு ச்லோகம் அநுக்கிரகித்திருக்கிறார் :

@Page 115

ஸதாநந்த : ஸ்ரீமான் அநுபதிக காருண்ய விவசோ
ஜகத்க்ஷேமாய ஸ்ரீ உறரி – கிரிசரூபம் வித்ருதவான்|
அபர்யாப்தம் ரூபம் ஜகத் அவன ஏதத் புனரிதி
ப்ரபுர் ஜாகர்தி ஸ்ரீ உறரி – கிரிச நாமாத்மகதயா ||

"எப்போதும் ஆனந்தமாயிருக்கும் பரமாத்மா லோ க்ஷேமத்தை உத்தேசித்துத் தனிப் பொருங்கருணை வாய்ப்பட்டு மஉறாவிஷ்ணுவாகவும் பரமேச்வரனாகவும் ரூபம் எடுத்துக் கொண்டான். ஆனால், ஜகத்தை உத்தாரணம் பண்ண ரூபம் மட்டும் போதவில்லை என்று கண்டு கொண்டான். அதனால் ஸர்வலோக ப்ரபுவான பரமாத்மா மஉறாவிஷ்ணு, ஈசுவரன் ஆகியவர்களுடைய நாமாக்களாகவும் ஆகி அவற்றில் நன்றாக விழித்துக் கொண்டிருக்கிறான்" என்று அர்த்தம். 'ஜாகர்தி' என்று ச்லோகத்தில் வருவதற்கு 'விழித்துக் கொண்டிருக்கிறான்' என்று அர்த்தம். நாமத்தில் பரமாத்மா விரித்துக் கொண்டிருக்கிறார் என்றால், ரூபத்தில் கொஞ்சம் தூங்குமூஞ்சியாக இருக்கிறார் என்கிற மாதிரி தொனிக்கிறது. எதனால் இப்படிச் சொல்ல வேண்டும்? நம் கூட இருப்பவர்களை தூங்கி வழிந்தால் நமக்கும் தூக்கம் வருகிறது. அவர்கள் உத்ஸாஉறமாயிருந்தால் நமக்கும் உத்ஸாஉறமாக இருக்கிறது. கோவிலில், அல்லது அகத்துப் பூஜையில் ஸ்வாமியின் ஒரு ரூபத்தைப் பார்க்கிறோம். ரொம்ப ஸந்தோஷமாயிருக்கிறது. மனஸுக்கு நிம்மதியாக இருக்கிறது. ஆனால் பார்த்துக் கொண்டேயிருக்க முடிகிறதா? கொஞ்ச நாழியானால் மனஸ் எங்கெங்காவது ஓடத்தான் ஆரம்பித்து விடுகிறது. மனஸ் பரபர என்று ஓடுகிறது என்றால் மனஸுக்கு அதீதமாக நமக்குள் ஒன்று இருக்கிறதே, அதன் விஷயத்தில்

நாம் தூங்கிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் அர்த்தம். ஒரு

@Page 116

மூர்த்தியைப் பார்த்துக் கொண்டேயிருந்தால், மனஸ் ஓடு ஆரம்பிக்கிறது. இல்லாவிட்டால் அசல் தூக்கமே வந்துவிடுகிறது. பெரிய மஉறான்கள் தான் ஒரு தெய்வ மூர்த்தியைப் பார்த்துக் கொண்டேயிருந்தார் அப்படியே சொக்கிப் போய் ஸமாதியில் ஆழ்ந்து விடுகிறார்கள். சாமான்ய ஜனங்களுக்குக் கொஞ்சம் நேரத்துக்கு மேல் ஒன்றையே பண்ணினால் தூக்கந்தான் வருகிறது. ரூப தரிசனம்தான் என்றில்லை. ஜபம், தியானம், பூஜை என்று எதைப் பண்ணினாலும் நேரமாக ஆக ஈடுபாடு, விழிப்பான கவனம் குறைந்து கொட்டாவியும் தூக்கமுமாகத்தான் வருகிறது. ஆனால் இதுவே ஒரு பஜனை என்று எடுத்துக் கொண்டால், ராதா கல்யாணம், அகண்ட ஸங்கீர்த்தனம் என்று ராத்திரி பூராவும் கொஞ்சங்கூடக் கண்ணைக் கொட்டாமல் உத்ஸாஉறமாக ஆடுகிறோம், பாடுகிறோம். இப்படி ஒருதாளம் கீளம் சேர்த்து – நிருத்யத்தைக் கூடச் சேர்ப்பதுண்டு – நல்ல ஸங்கீதத்தோடு த்ருத கதியில் பகவன் நாமாக்களை பஜனை பண்ணுகிறபோதுதான் கூடிய மட்டும் மனஸ் ரொம்ப வெளியில் ஓடாமல் இருக்கிறது. தூங்கி வழியாமல் நல்ல விழிப்புடன் விடிய விடிய உத்ஸாஉறமாகவும் இருக்க முடிகிறது. பகவான் நினைவிலேயே இப்படி மனஸை அமிழ்த்தி, நீண்ட காலம் நல்ல விழிப்போடு இருக்க நாமாதான் பரம உபகாரம் பண்ணுகிறது.

"பகவான் எப்போதும் விழிப்போடு இருக்கிறவன் தான். அவன் க்ஷண காலம் கண் அயர்ந்தால்கூட லோகமே ஸ்தம்பித்துப் போய்விடும். ஆனாலும் "தூங்கு மூஞ்சி இருக்கிற இடத்தில் பிறத்தியாருக்கும் தூக்கம் வருகிறது ; உத்ஸாஉற புருஷன் இருக்கிற இடத்தில் மற்றவர்களும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்" என்று நியாயப்படிப்

@Page 117

பார்த்தால், ரூப தரிசனத்தைவிட நாம பஜனையில்தான் நம் உடம்பு, உள்ளம் இரண்டுமே நல்ல விழிப்போடு இருப்பதால், பரமாத்மா ரூபத்தை விடவும் நாமத்தில்தான் ஜாஸ்தி விழிப்போடு, Active–ஆக இருக்கிறார் என்பதாக ஏற்படுகிறது.

"ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள அனைவரும் மாலைவேளைகளில் வீட்டிலேயே ஒரு பத்து நிமிஷமாவது பகவன் நாமங்களைப் பாடி பஜனை செய்ய வேண்டும். அவரவர்களும் தங்களுக்குரிய நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் செய்து விட்டு, அதோடு பஜனையும் செய்ய வேண்டும். பகவாணைப் பாடுவதற்கு வெட்கமே வேண்டாம். பெரிய ஸங்கீத ஞானம், ராக பாவம், சாரீர வசதி இல்லாவிட்டாலும்

பரவாயில்லை. பக்தி பாவனைதான் முக்கியம். ஏதேதோ விளையாட்டுக்களில் திரிந்து கொண்டிருக்கிற குழந்தை அம்மாவின் நினைப்பு வந்ததும், அவளிடம் வந்து, "அம்மா, அம்மா" என்று கத்துகிறதல்லவா ? அதில் வெட்கமோ ஸங்கீத அழகோ இல்லை. லோக மாதாவான பரமாத்மாவை லௌகிகி வியாபாரங்களிடையே சிறிது நேரமாவது நினைத்து இப்படியே 'ராமா, க்ருஷ்ணா, சிவா, அம்பா!' என்று கத்த வேண்டும். இந்தப் பழக்கம் ரொம்ப நல்லது. நம் நித்ய க்ஷேமத்தையும் ஆனந்தத்தையும் பெருக்கவல்ல பெரிய நிதி இது."

போதேந்திராள் முக்கியமாகப் பிரசாரம் செய்த ராம நாமா பற்றிப் பெரியவாள் குரலைக் கேட்போம் :

"ஹிந்துக்களாகிய நாம் தினமும் ராம நாம ஜபம் செய்ய வேண்டும். ஆதிகாலத்தில் தொடங்கி, நடுவே சமய நலிவு ஏற்பட்ட போதெல்லாம் ஸமர்த்த ராமதாஸ்,

@Page 118

சிவாஜி, பத்ராசல ராமதாஸ், கபீர்தாஸ், துளஸிதாஸ் போன்றவர்களால் பிரகாசம் செய்யப்பட்டு, ஸமீபத்தில் மக்கள் நம்பிக்கை இழந்த போது காந்தி கூடத் தூண்டிவிட்டது ராம நாம ஜபத்தைத்தான். நம் தர்மம் மங்குகிற போதெல்லாம் ராம நாமம் தான் நாட்டில் புத்துணர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது.

"நமது பாபங்களையும் துன்பங்களையும் போக்கிக் கொள்ள ராமநாமத்தைவிடச் சிறந்த ஸாதனம் வேறில்லை. மோக்ஷ பரியந்தம் ஸகலமும் அது அநுக்ரஹிக்கும், கட்டுப்பாட்டுக் குலைவு, ஒருமைப்பாட்டுச் சிதைவு, பஞ்சம், மக்கட் தொகைப் பெருக்கம், ஒழுக்க நெறிக் குறைவு, தைரியமின்மை ஆகியவற்றிலிருந்து ராம நாம ஜபம் நம்மை நிச்சயமாகக் காப்பாற்றும்."

இவ்விதம் ராமநாமாவைச் சிறப்பித்துச் சொல்வதற்கான விசேஷ ஜீவசக்தி அதற்கு எப்படி ஏற்பட்டது எனில், இந்நாமமே நாராயண அஷ்டாக்ஷரீ, சிவ பஞ்சாக்ஷரீ ஆகிய இரு மஹாமந்திரங்களின் ஜீவாக்ஷரங்களால் உருவானதாகும். நாராயண அஷ்டாக்ஷரீயில் 'ரா' போய் விட்டால் 'நாயணாய நம :' – 'கதியாக இல்லாதவனுக்கு வணக்கம்' என்ற விபரீதமான பொருள் ஏற்படும். சிவ பஞ்சாக்ஷரீயில் 'ம' வை எடுத்துவிட்டார் 'ந சிவாய' – 'சிவனுக்கு எதுவும் இல்லை' என்ற அபத்தமான அர்த்தம் ஏற்படும். எனவே அவ்விரு மாமந்திரங்களுக்குமே உயர் பொருள் தரும் ரா, ம என்ற அக்ஷரங்கள் சேர்ந்து பரமாத்ம தத்துவத்தைப் பேராற்றலோடு வெளியிடுகின்றன.

உறரி–உறர நாமங்களின் ஜீவாக்ஷரங்களைக் கொண்ட 'ராம' மந்திர அதிதேவதையை ஸ்ரீ போதேந்திராள்,

@Page 119

வால்மீகி கூறுவது போல் மஉறாவிஷ்ணுவின் அர்த்தாம்சமாக மட்டும் கருதாமல், திருமாலும் சிவனும் கலந்த பரதெய்வமாகவே கொண்டார்.

ஸ்ரீச கௌரீச்வர அபின்னரூபம் ராமம் அஉறம் பஜே |
ஸக்ருத் ப்ரபன்ன ஸந்த்ராணே தீக்ஷிதம் ஸீதயாச்ரிதம் ||

"ஸீதா ஸமேதனும், சரண் புகுபவரை அக்கணமே ஆண்டு காப்பவனுமான ஸ்ரீராமனை, ஸ்ரீகாந்தனும் கௌரீகாந்தனும் ஐக்கியப்பட்ட திருமூர்த்தமாகவே நான் வழிபடுகிறேன்" என்கிறார் போதேந்திராள்.

உறரி–உறரனே சிவ–சக்தி, அதாவது ஸகுணப் பிரம்மம்.

இனி, நிர்குணப் பிரம்மமாகவும் இதே ராமனைத் தான் அநுபவித்தார் அத்வைதாசாரியரான நம் போதேந்திரர்.

ஸதாநந்தாத்மனே ஸர்வ ஸர்க – ஸ்திதி – அந்தகாரிணே |
ஸர்வாந்தர்யாமி ரூபாய ஸ்ரீராமாய ஆத்மனே நம : ||

என்கிறார். ஸ்ரீராமன் எப்போதும் ஆனந்தமாயிருப்பவன். அனைத்து ஞானியர், யோகியர், பக்த சிகாமணியருக்குமே இந்த ஸதானந்தம் உண்டு. ராமனோ இவர்களுக்கு மேலாக படைப்பு, காப்பு, அழிப்பு என்ற முத்தொழிலும் புரிபவன் ; அதாவது உலகை நடத்தும் ஈச்வரன். உலகுக்கு வெளியே இருந்து அவற்றை இவ்விதம் நடத்துபவன் மட்டுமல்ல, அனைத்தின் உள்ளும் அந்தர்யாமியாக இருந்து அவற்றை இயக்கபவனும் அவன்தான். அவ்வளவுதானா ? இயக்கப்படும் ஜீவன் மட்டும் அவனுக்கு வேறா ? இல்லை. அவனேதான் ஆத்மா. 'ஸ்ரீராமாய ஆத்மனே நம:'.

@Page 120

ராமனையே ஆத்மாவாக உன்னி உணர்ந்தவர் ராம ஸ்வரூபமாகவே தமிழகமெங்கும்

சஞ்சரித்தார். ஆதி ராமன் காலத்தில் மக்கள் "ராம ராம ராம" என்றே சொல்லிச் சொல்லி ஜக முழுவதையும் ராம மயமாக்கியதாக வன்மீகம் கூறுவதே போல் இப்போதும் நடந்தது!

ஸங்கீர்த்தன அமிழ்தத்தால் தெய்வத் தமிழ்நாட்டைத் தெய்வத்து அமிழ் நாடாக்கிக் கொண்டு, தென் கோடியில் சேதுவை அடைந்தார். ராமலிங்கத்துக்காக கங்கை எடுத்துச் செல்கையிலேயே குரு ஆசீர்வதித்ததற்கொப்ப, ஜீவனாகச் செத்து, ராமனாகவே உயிர்கொண்டு, ராமநாமத்தால் போகுமிடத்தை எல்லாம் காசியாக, கங்கையாக ஆக்கிக் கொண்டு சென்றார்.

சிவன் ராம நாமம் ஓதும் காசியில் இவர் அத் தாரக மந்திரம் பெற்றார். ராமன் பூஜித்த சிவனுக்குக் காசி கங்கையால் அபிஷேகம் செய்தார். சிவ மந்திரத்தால் ஸித்தி கண்ட ஆத்மபோதரை விட, ராம மந்திரத்தால் ஸித்தி கண்ட போதேந்திராள் தனக்கு அபிஷேகிப்பதையே ராமநாதசிவன் உகந்தான் போலும்!

போதேந்திராள் ராமேசனுக்குப் புரிந்த கங்காபிஷேகத்தைக் கண்டு ரோமாஞ்சனமடைந்தவர்கள், "ஆதியில் ஸ்ரீராமன் லிங்கப் பிரதிஷ்டை செய்தபின், மண்ணிலிங்கமாயிற்றே என்று மகாபிஷேகமாகச் செய்யாமல் புரோக்ஷணம் மட்டும் செய்தான். அக்குறை தீர, இன்று அப்பார்த்திவ லிங்கம் இறுகிப் பாறை போலான பின், அவனே காமகோடி குருவுள் புகுந்து திருமுழுக்குச் செய்கிறான்" என்று போற்றினர்.

@Page 121

போதேந்திராள் ராமநாதன் சந்நிதியில் இரண்டாவது முறையாக ஒரு தேவ ரஉறஸ்யம் அவிழ்ந்ததில் மயிர்க்கூச்சுக்கு மேம்பட்ட உட்சிலிர்ப்பை அடைந்தார்.

ஞானத்தையும் பக்தியையும் நாமத்தால் இரண்டறக் கலந்தவர் மஉேறாததியோடு ரத்னாகரமும் கலந்த கடலில் நீராடினார். ராமேச்வரத்துக்கே பெருமை தரும் அத்தனை தீர்த்தங்களிலும் திளைத்தாடினார். அவற்றுக்கெல்லாம் ராஜனான கோடி தீர்த்தத்தில் முழுகிய காமகோடி பீடாதீச்வரர் கோடிக்கணக்கான புண்ய தீர்த்தங்கள் சேர்ந்தாலும், நாமாவின் கோடியில் ஓரம்சத்துக்கு ஈடாகாது என்ற விச்வாமித்ர ஸம்உறிதா வாக்கை அறிந்தவர்தான். ஆனாலும் சங்கர பீடங்களின் தனிச்சிறப்பு சம்பிரதாயங்களை வழுவறப் பேணி, பரம பாமரரது நம்பிக்கைகளையும் சிதைக்காமல் காப்பதேயல்லவா? எங்கும் அநுபவிக்கும் ராமரஸத்தைக் கோடி தீர்த்தத்திலும் அனுபவித்தார் நம் போதேந்திர ஸ்வாமிகள்.

காமகோடி தநுஷ்கோடிக்குச் சென்ற. ஓம்கார தனுசில் ஜீவனைக் கணையாகப் பூட்டி பிரம்மம் என்ற இலக்கில் எய்ய வேண்டும் என்பது மறைமொழி. ஓம்தான் ராம். ராமநாம தநுசில் ஜீவர்களைப் பூட்ட வந்த மகான் சேது யாத்திரையைப் பூர்த்தியாக்கித் தஞ்சை மண்டலத்துக்குத் திரும்பினார்.

சிவாஜி ஸமர்த்த ராமதாஸரின் அருட் துணைகொண்டு சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கு முன்பே, பீஜப்பூர் சுல்தானிடம் சிற்றரசர் ஸ்தானத்தில் பணிபுரிந்து வந்த சிவாஜியின் தந்தை ஷாஉறஜி, சுல்தானின் சார்பில் தென்னகத்துக்குப் படை எடுத்தார். நாயகர்களை

@Page 122

வென்றார். தஞ்சையில் ராஜ்யம் ஸ்தாபித்தார் – சுல்தானின் பிரதிநிதியாக மட்டுமின்றி ஏறக்குறைய சுதந்திர அரசாகவே ஸ்தாபித்தார். தனது இன்னொரு மகன் வெங்காஜியை அங்கு மன்னனாக அமர்த்தினார். அவனது பரம்பரை அங்கு தொடர்ந்து ஆட்சி செலுத்தியது. போதேந்திரர் வந்த போது அரசனாக இருந்தவன் பெயரும் ஷாஉறஜி தான். பண்டிதர்களை வெகுவாக ஆதரித்துக் கலையிலும், மதத்திலும் ஒரு மறுமலர்ச்சியை ஊக்கிய மன்னன் இவன்.

போதேந்திராள் தமிழகத்தில் ராமநாமாவை ஒளிர்வித்த இதேபோதில், மகாராஷ்டிரத்தில் ஸமர்த்த ராமதாஸர் அப்பெயரை மிளிர்வித்துக் கொண்டிருந்தார். ராமநாமம் தான் மஉறா–ராஷ்டிரம், அதாவது மாபெரும் ஆத்மானந்த சாம்ராஜ்யம். அந்த நாமத்தால் ஆத்ம ஸாம்ராஜ்யத்தில் ஸித்திகண்ட ராமதாஸரே சிவாஜிக்கு குருவாயிருந்து துருக்கரை எதிர்த்து அவன் உறிந்து ஸாம்ராஜ்யம் எழுப்ப எழுச்சி தந்தார். போதேந்திரரிடமும் பாரம்பரியமான மராட்டிய ரத்தம் ஓடியது ஒரு விந்தை. இந்த மராட்டித் தொடர்பால்தானோ என்னவோ, தஞ்சை மன்னன் இவரிடம் அதிவிசேஷமான ஆதரவு காட்டியதாகத் தெரிகிறது.

ஆட்சி பீட ஆதரவால் ஒரு தத்துவத்தை நிலைநாட்டுவது அவ்வளவாகப் பெருமைக்குரிய விஷயமல்லதான் என்றாலும் பராசக்தியே பக்கபலமாக இப்படி ஒரு சாதகச் சூழலை ஏற்படுத்தியிருந்ததை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். தஞ்சை மண்டலப் பண்டிதர்கள் தமது புத்தி வன்மையாலும், தீவிர சம்பிரதாயப் பிடிப்பாலும் நவீனமாகத் தோன்றும் எதையும் கண்ட துண்டமாகக் கண்டனம் செய்வார்கள்.

@Page 123

அப்படிப்பட்டவர்கள் நாம சித்தாந்தத்தைப் பூர்ணமாக ஆமோதித்ததற்கு ராஜ ஆதரவும் ஒரு சிறிய அளவுக்குத் துணைக் காரணமாக இருந்திருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர்.

துளித் துளித் துணைக் காரணமேயன்றி, அதுவே மூல பலம் அல்ல என்பதை இதே தஞ்சைச் சீமையில் மற்றொரு மகான் நிரூபித்துக் கொண்டிருந்தார்.

அவர் மராட்டியத் தொடர்புள்ளவரல்ல. ஸமர்த்தர் பிரசாரம் செய்த நாமத்தைப் பிரகடனம் செய்தவரும் அல்ல. பீடாதிபதியும் அல்ல. ஏன், சாதாரண சந்நியாசி கூட அல்ல. அவர் ஒரு கிருஉறஸ்தர். மடம், ராஜசபை ஆகியவற்றின் பலம் இன்றியே, அவர் தம்முடைய ஒப்பற்ற தூய்மை, இணையற்ற புலமை, எல்லையற்ற பக்தி, அந்தரங்க அநுபதி ஆகியவற்றின் மகாசக்தியால் சிவநாமத்தை ஜீவனோடு பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார். இதற்கெனவே இறைவனால் முத்திரை குத்தி அனுப்பப்பட்டதாக ஆத்மபோதரால் வர்ணிக்கப்பட்ட மகாத்மா இவரே. இவர்தான் திருவிசை நல்லூர் எனப்படும் தேவாரத் 'திருவியலூ'ரைச் சேர்ந்த 'ஸ்ரீதர வேங்கடேச்வர அய்யாவாள்'. பஞ்சமனையும் பஞ்சாக்ஷரனாகக் கண்டு திவஸ உணவை அவனுக்குப் படைத்து விட்டு, பிறகு தம் கொல்லைக் கிணற்றிலிருந்து கங்கையைப் பொங்குவித்த பக்தி புங்கவர் இவரே!

கங்கையோடு அலாதியாக ஐக்கியப்பட்டிருந்த போதேந்திராள், கங்கையை வீட்டுக்கே கொண்டு வந்த மகானின் ஊருக்குச் சென்றார்.

திருவிடைமருதூருக்கு மேற்கே மூன்று கல்லில் காவிரியின் வடபால் அமைந்த திருவிசைநல்லூர் தன்

@Page 124

வளமையை இழந்து வறட்சியில் காய்ந்து கிடந்த சமயம் அது.

ஊர் காய்வதைக் கண்டு அய்யாவாளின் இதயம் கருணை மழை பொழிந்தது. மக்களையெல்லாம் சிவாலயத்துக்கு அழைத்துச் சென்ற மழைவேட்டல் செய்தார். 'குளீராஷ்டகம்' பாடி ஈசனைக் குளிர அபிஷேகித்தார்.

முகில்கள் இறுகிக் குளிர்ந்தன. 'சோ' என அடித்துப் பொழியத் தொடங்கியது அடை மழை.

கண் பொழியத் திரும்பிய அய்யாவாள், "ஆஉறா, என் பரமேசுவரனே வந்து விட்டானா ?" என்று பரவசம் கொண்டார்.

சந்நிதானத்தில் போதேந்திராள் நின்று கொண்டிருந்தார், பீடாதிபதியாக இருந்தும் 'யாதும் சுவடு படாமல்!'

போதேந்திரர் அய்யாவாளைக் கண்டு ரோமம் பொடிப்ப நின்றார். 'என் ராமனேதானோ ?' என வியந்தார்.

திரேதாயுகத்தில் ரத்னாகரமும் மஉேறாததியும் கலக்கும் சேதுவில் ராமனும் சிவனும் கலந்தனர். கலிகாலத்தில், சிவனுக்கு நிகராக ராமஜபம் செய்தவரும், ராமனுக்குச் சமமாக சிவ நாமோச்சரணம் செய்தவருமான இரு மகான்கள் இரு சமுத்திரங்கள் கலப்பது போல் சந்தித்தனர். நீரோடு நீர் கலப்பதில் சற்றும் இடறல் இராதே!

பர்வதத்தோடு பர்வதம் சந்தித்ததாகவும் இதைச் சொல்லலாம். ஏனெனில் இருவரும் ஞானபக்தி மலைகளாக இருந்ததோடு, தோற்றத்திலும் பர்வதங்களாக

@Page 125

இருந்தவர்கள். வஞ்சனையின்றி அவர்களது சரீரம் வளர்ந்திருந்ததில் ஒரு நியாயமுண்டு. ஞானமார்க்கத்திலும், பக்தி மார்க்கத்திலும் உடலைப் புறக்கணிப்போர் இளைத்திருக்க வேண்டியதுதான். ஆனால் ஞான பக்தர்களாக பகவத் குண ஸமுத்திரத்திலும், நாமப் பிரவாகத்திலும் ஊறி ஊறி மகிழ்பவர்கள் உப்பிப் பருத்திருப்பது பொருத்தமானதோர் அழகுதான்!

சந்நிதியில் நமஸ்கரிக்கக் கூடாது என்பதையும் மறந்து போதேந்திராளைப் பன்முறை வணங்கினார் அய்யாவாள்.

பீடாதிபத்திய ஸ்தானத்தை உத்தேசித்து அய்யவாளை வெளிப்படத் தண்டனிட இயலாமல் மறுகி, மனத்துக்குள்ளேயே வணங்கினார் போதேந்திரர்.

சந்நிதியை விட்டு வெளியே வந்தனர்.

இத்தனை நாட்கள் காய்ந்திருந்த மண் மழையில் ஊறியிருந்தது.

"கடினமான கர்மாக்களையும் சாதனைகளையுமே நினைத்துக் காய்ந்திருந்த

மக்களின் இதயம் இப்போது தான் பக்தியில் ஈரமாயிருக்கிறது. வாருங்கள், இப்போதே இதில் நாம விதியை ஊன்றலாம்" என்று நேசம் துளும்ப அய்யாவாளை அழைத்தார் போதேந்திரர்.

கீழே ஒரு மாங்கொட்டை அவர் கண்ணில் பட்டது. "ஆனந்தம், ராமானந்தம், சிவானந்தம்" என்று சிரித்தார். "ஆனந்தம் ஒன்று தான். அதில், ராம, சிவ பேதங்கள் ஏது? எல்லாம் நிறைந்த பெரிசு – பிரம்மம் – அல்லவா அது? அந்தப் பெரிசு தான் 'மகா'. அது தான் 'மா'. ஒரு மா, ஏகாம்பரம் என்று அதைத் தான் காமகோடியின் காஞ்சியில்

@Page 126

சொல்வார்கள். அய்யாவாள் ஸ்வாமின் ! அந்த ஒரே மாவை, நாமாவை இங்கே இருவருமாகப் பயிர் பண்ணலாம், வாருங்கள்!" என்று உவகை கொப்புளிக்க அழைத்தார்.

இருவருமாகச் சேர்ந்து மாங்கொட்டையை நட்டனர். "ரஸக்குண்டுகளாக இது கனி தரும். சிவ–ராம நாம ரஸமும் அதோடு இங்கு பல்கிப் பாயும்" என்றார் போதேந்திரர்.

அம் மாமரத்தின் உட்பொருளை எப்படி விளக்குவது? திருவிசைநல்லூருக்கே பகவன்நாமம் என்ற திருவை இசைத்துத் தரும் தருவாக அது வளர்ந்தது மட்டும் மெய்.

இரு பக்க சிரோமணிகளும் இழைந்து நாம மகிமையால் நாட்டை வளம் செய்த அந்நாட்களில் வாழ்ந்தவர்கள் புண்ணியசாலிகள்.

ஒரே நாமாவைத் திரும்பத் திரும்பச் சொல்வதென்றால், ருசியறியும் பேறு பெறாதவருக்கு அலுப்புத் தட்டத்தான் செய்கிறது. சுலோகங்களையும் கிருதிகளையும் நீண்ட நேரம் பற்றியிருப்பதும் பாமரர்க்கு இயலாது. இங்கு தான், சுலபமாக அனைவரும் ராக–தாளத்துடன் கானம் செய்யக்கூடிய நாமாவளிகள் ஒப்பற்ற உதவி புரிகின்றன. பல ராகங்களில், தாளங்களில் பல்வேறு நாமாக்களைக் கோத்துப் பாடும் போது சலிப்பே ஏற்படுவதில்லை. தனிப்பட்ட ஜபத்துக்கென ஒவ்வொரு நாமாவைத் தந்த போதேந்திராளும் அய்யாவாளும், அதோடு கூட பெரிய சங்கமாக மக்களைக் கூட்டி

@Page 127

நாமாவளிகளைப் பாடினர் ; மற்றோரை உற்சாகத்துடன் பாட்டுவித்தனர்.

"பாவன ராமா பதித பாவன ராமா
மோஉறன ராமா ஸீதா மோஉறன ராமா
கோவிந்த ராமா ஜய கோபால ராமா
மாதவ ராமா தயாபர கேசவ ராமா"

என்றும்,

"க்ருஷ்ணம் வந்தே நந்த குமாரம்
ராதாவல்லப நவநீத சோரம்
ராமம் வந்தே தசரத பாலம்
ஸீதா வல்லப ரகுகுல ஸோமம்"

என்றும் ஒவ்வோர் அட்சரத்தையும் திராட்சையாகச் சப்புக்கொட்டி போதேந்திராள் பாடியதை ஆயிரமாயிரம் கண்டங்கள் பிரதித்வனி செய்து புல்லரித்துப் போயின.

சிவஸ்மரணத்திலேயே வாழ்வு முழுதையும் முழுக்கியிருந்த அய்யாவாள்,

"பசுபதி சங்கர விச்வபதே
பார்வதி ரமண உமாபதே"

என்றும்

"சிவசிவ சம்போ மஉறாதேவா
கிரிஜா ரமணா ஸதாசிவா
உறரஉறர சம்போ மஉறாதேவா
பார்வதி ரமணா பராத்பரா"

என்றும் கானம் செய்தபோது பக்தர்கள் அதை ஆவேசத்துடன் திரும்பப் பாடி ஆனந்தித்தனர்.

@Page 128

இரு மகான்கள் சேர்ந்ததால் ஒரே இடம் பூலோக கைலாசமாக, பூலோக வைகுண்டமாக ஆயிற்று.

கடைசியில் "கோவிந்தா கோவிந்தா", "உறர உறர மகாதேவா" என்று சங்கீர்த்தனம் பூர்த்தியாகும்.

மகாராஷ்டிரத்தில் "ஸ்ரீ ராம ஜய ராம் ஜய ஜய ராம்" என்ற மகா மந்திரத்தைப் பரப்பிய ராமதாஸரே சிவாஜியின் சேனைக்கு 'உறர உறர மஉறாதேவ்' கோஷத்தையும் உடன் தந்தார். தமிழகத்துக்கோ இரண்டுக்கும் இருவராக இரட்டைப் பரிசு கிடைத்தது!

அய்யாவாளிட்போதேந்திரருக்கு இருந்த மதிப்பு சொல்லத் தரமன்று, இவரைக் காணுமுன்பே, போதேந்திராள் சந்நியாச ராஜராயினும் தமது "நாமாம்ருதரஸாயனம்", "ரஸோதயம்" ஆகிய நூல்களில் சமகாலத்தவரும் இல்லறத்தாருமாகிய அய்யாவாளின் "பகவந்நாம பூஷண"த்தைத் தமக்கு ஓர் ஆதார கிரந்தமாகக் கொண்டு அதிலிருந்து மேற்கோள் காட்டினார்! நேரில் கண்டபின் மதிப்பு கூடுதலாயிற்று.

வயதிலும் மூத்தவரான அய்யாவாளைத் தாம் வணங்க முடியாமல் ஆசாரிய ஸ்தானம் குறுக்கே நிற்கிறதே என்று வருந்தினார் போதேந்திரர். கடைசியில் சரீரத்தால் இல்லாவிடிலும் வாக்காலாவது அவரை வணங்குவதற்கு ஒரு 'சூழ்ச்சி' செய்தார்.

தம் சீடர்களிடம், "அய்யாவாளை நீங்கள் தரிசிக்கும் போது அவர் மீது கூறுவதற்காக ஒரு சுலோகம் சொல்லித் தருகிறேன்" என்று சொல்லித் தமது சொந்தச் சரக்கை அவிழ்ந்து விட்டார். "ஈசே தஸ்ய ச நாமனி" என்று தொடங்கிக் கடைசி வரியாக, "தம் வந்தே நரரூபம்



அந்தகரிபும் ஸ்ரீ வேங்கடேசம் குரும்" என முடித்தார்.* அதாவது சீடர்களுக்குக் கற்றுத் தரும் வியாஜத்தில், "காலாந்தக பரமேசனின் நரரூபமாக வந்துள்ள ஸ்ரீதர வேங்கடேச குருவை வணங்குகிறேன்" என்று பொருள் கொண்ட வரியைக் கூறிக் கூறித் தம் அபிலாஷையை நிறைவேற்றிக் கொண்டார். உன்னத ஸ்தானத்தை விரும்பாது விநயத்துக்கு ஆசை கொள்வதேயன்றோ உண்மையான ஜகத்குருவிடம் நாம் காணும் பாங்கு?

எளிய ஸ்தானத்தில் இருக்கக் கொடுத்து வைத்த அய்யாவாளோ நேரிலேயே போதேந்திராளுக்குப் பஞ்ச நமஸ்காரம் செய்து, வஞ்சனையின்றி வளர்ந்திருந்த தம் சரீரத்தை மண்ணில் புரட்டித் துதிப்பார்.

பகவந் நாம ஸாம்ராஜ்யலக்ஷ்மீ ஸர்வஸ்வ விக்ரஉறம் |
ஸ்ரீமத் போதேந்த்ர யோகீந்த்ர தேசிகேந்த்ரம் உபாஸ்மஉேற ||

(பகவந் நாமம் என்கிற பேரரசின் சகலச் செல்வமும் ஓர் உருவாகத் திரண்டவரான, யோகிராஜரை, குருராஜரை, ஸ்ரீ போதேந்திரரை உபாசிக்கிறேன்.)

"யஸ்ய ஸ்மரண மாத்ரேண நாம பக்தி : ப்ராஜயதே |
தம் நமாமி யதி ச்ரேஷ்டம் போதேந்த்ரம் ஜகதாம் குரும் ||

(எவரை ஸ்மரித்த மாத்திரத்தில் நாம பக்தி தானாகவே சிறப்புறப் பிறக்கிறதோ அப்படிப்பட்ட லோக குருவான, துறவரசான போதேந்திரரை நமஸ்கரிக்கிறேன்.) என்றும் துதித்து ஆனந்த பாஷ்பம் வடிப்பார்.

---

*ஈசே தஸ்ய ச நாமநி ப்ரவிமலம் ஞானம் தயோரூர்ஜிதம்
ப்ரேம ப்ரேம ச தத்பரேஷு விரதிச்சான்யத்ர ஸர்வத்ர ச

ஈசேக்ஷா கருணா ச யஸ்ய நியதா வ்ருத்தி : ச்ரிதஸ்யாயி யம்
தம் வந்தே நரரூபம் அந்தகரிபும் ஸ்ரீ வேங்கடேசம் குரும்||*

@Page 130

அவ்வணக்கத்துக்குரியவன் ராமனே என்ற உணர்வில் போதேந்திரர் "ராமா" என்று நீராளமாக உருகிக்கூறுவார்.

"என் ஜன்மா முழுதும் நான் சொன்ன அத்தனை சிவ நாமாக்களைச் சேர்த்தாலும் பெரியவாள் இப்போது சொன்ன இரு அட்சரங்களுக்கு ஈடாகாது" என்று அய்யாவாள் இதயமாரக் கூறுவார்.

போதேந்திராள் அய்யாவாளோடு சேர்ந்திருந்தது போலவே மற்றோர் அமுதமான சிநேக பாந்தவ்யத்தையும் நாம் ஊகித்து இன்புறலாம்.

ஸமர்த்த ராமதாஸ் தஞ்சை வழியாக ராமேச்வரம் வரையில் யாத்திரை செய்ததற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் உள்ளன. ஷாஉறஜிக்கு முன் தஞ்சையை ஆண்ட வெங்காஜி, சகம் 1577ல் (கி.பி.1655) ஜ்யேஷ்ட மாதம். கிருஷ்ண பக்ஷ த்ரிதியையில் ஸமர்த்தரிடம் உபதேசம் பெற்றதாகக் குறிப்பு உள்ளது. இது நம் போதேந்திராள் காமகோடி பீடாதிபதிகளாகிப் பதினேழாண்டுகளுக்குப் பின்னராகும். ஸமர்த்தரும் ஸ்ரீ

சங்கரரின் அத்வைத சம்பிரதாயத்தை அநுஸரித்தவரே. இன்றளவும் ராமதாஸ மரபினர் தங்களைத் தனிப்பிரிவாக எண்ணாமல் சங்கராசாரிய பீடங்களின் சீடர்களாகவே கருதி வருகின்றனர். எனவே ராமநாமப் பிரசாரத்துக்கே பிறந்த பரம அத்வைதியான ஸமர்த்த ராமதாஸர், அதே நாமப் பிரகடனத்துக்காக அவதரித்திருந்த அத்வைத பரமாசார்யர்களான நம் போதேந்திராளை சந்திக்காமல் இருந்திருப்பாரா ?

ஆயினும் இது பற்றிய விவரங்கள் இல்லை. அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். அவரவரும் தங்கள்

@Page 131

பக்குவத்துக்கேற்ப இந்த் அற்புத சந்திப்பை மானஸிகமாக ஜோடித்து மகிழலாமல்லவா ? அடடா, ஒரே போல் ராமனில் ஊதி அத்வைதத்தை ருசித்த அவ்விரு மஉறாராஷ்டிர ரத்தங்களும் எத்தனை பரமப் பிரீதியோடு கலந்து ஊறவாடியிருக்கும் ?

@Page 132

7

காவேரி

தொடர்புகளுக்கெல்லாம் ஒரு நாள் முடிவுண்டு தானே ?

அய்யாவாளிடம் விடை கொண்டு சஞ்சாரத்தைத் தொடர்ந்தார் போதேந்திரர்.

காவிரி பாயும் சோழ மண்டலத்தில், அதிலும் குறிப்பாகக் குடந்தைக் கோட்டத்தில் பட்டி தொட்டிவிடாமல் பயணம் செய்து பகவந்நாம கோஷம் அங்கு இன்னொரு காவிரியாக முட்டி மோதிப் பிரவகிக்கச் செய்தார் – எதிர்காலத்தில் காஞ்சி ஸ்ரீமடமே கும்பகோணத்துக்குத்தான் பல்லாண்டுகள் இடம் மாறப் போகிறது என்று கண்டு கொண்டாற்போல்.

ஆண்டுகள் பலப் பல ஓடிவிட்டன. பால குருவாக நாம் கண்டவர் பழுத்த குருவாகிவிட்டார். ஜகத்குரவர்களுக்கே உரிய தியாகமாக அன்றன்றும் ஆயிரம் மக்களின் ஆராத்துயரங்களை அலுப்பின்றிக் கேட்டுக்கொண்டே மதுரக் கனியாகக் கனிந்தார். அத்தனை துயருக்கும் ஸ்ரீராம நாமாவையே மருந்தாகத் தந்தார். ஆனால் எந்த அளவுக்கு அவர்கள் நாமத்தில் ஊறி கர்மத்தைத் தீர்த்துக் கொண்டனர், எந்த அளவுக்கு இவரே அவர்கள் கர்மத்தை வாங்கி அநுபவித்துத் தீர்த்தார் என்ற கணக்கை எவரே அறிவர் ?

@Page 133

தவியாகத் தவிப்போர் கருணைமழையில் நனைவதற்காக ஓடிவருவதற்குக் கேட்கவேண்டுமா ? தமிழகத்தின் எல்லைகளுக்கு அப்பாலிருந்தும் அடியார் திரண்டு வந்தனர். ஆந்திரத்துக்கும் காமகோடிபீடம் குலச்சொத்து அல்லவா ? அவர்களும், இன்னும் வடக்கிலிருந்தும் கூட போதேந்திராளிடம் பக்தரும் அறிஞரும் குழுமலாயினர். ஸ்ரீமடம் புகழ்க் கொடி கட்டிப் பறந்தது. பிரபுக்களும், மன்னர்களும், குறுநில மன்னரும் காணிக்கைகளைக் கொட்டினர்.

இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஒன்று. மத வித்தியாசங்களையும் மீறி போதேந்திராள் பெற்ற ராஜகாணிக்கை. அதாவது 1677ல் கோல்கொண்டாவில் ஆண்ட குதுப் ஷாஉறி வம்சத்தின் கடைசி நவாபான தானாஷா அளித்த மான்யம். பாமினி ராஜ்யத்திலிருந்து பிரிந்த பீஜப்பூர் ஸுல்தானை வென்று சிவாசு அரசு கட்டில் ஏறியது இதற்கு மூன்றாண்டு முன்புதான். அதே பாமினியிலிருந்து பிரிந்த இன்னோர் அரசான கோல்கொண்டா, சிவாஜி குடும்பத்தின் ஆட்சி நடைபெற்ற தமிழகத்தின் பீடாதிபதிகளுக்குக் காணிக்கை செலுத்துகிறது ! நாம மஉறிமையை வெளியிட்ட பிராம்மண பத்தினிக்கு முதலில் படுபாதகம் இழைத்தது தனது ராஜ்யத்தில்தான் என்பதால் நவாப் அதைக் கழுவக் கழுவாயாகக் காணிக்கையளித்தானா ?

மகான்கள் மூலம் பராசக்தி தானாகவே பல அற்புதங்களை இயற்றிக் களிக்கிறது. மானுடசக்திக்கு மேம்பட்ட ஒரு மகாசக்தி இருக்கிறது. அது சக்தி மயமாய் மட்டுமின்றிக் கருணை மயமாக இருக்கிறது என்று

@Page 134

உலகுக்குக் காட்டுவதற்காக, பராசக்தியானது தனி மனித சலனத்தை அடியோடு சமனம் செய்து விட்ட மகாபுருஷர்களின் மூலம் அற்புதங்களை ஆற்றுகிறது.

இவ்விதத்தில் போதேந்திராள் மூலம் அன்றாடம் நிகழ்ந்த அற்புத அருட்செயல்கள் அனந்தம், பானைச் சோற்றுக்கு ஓரிரு பருக்கை பதம் பார்ப்பது போல் இரண்டு சம்பவங்களைப் பார்ப்போம்.

பெரம்பூர் என்ற தஞ்சை மாவட்டக் கிராமத்தில் போதேந்திரர் முகாமிட்டிருந்தார்.

ஆசாரக் கட்டுப்பாடுகளைத் தள்ள வேண்டும் என்று அவர் நினைக்காமலே, தாமாக அவை உதிர்ந்து, ஏறக்குறைய அதிவர்ணாச்ரமி போலாகி விட்டார் என்றாலும் மக்களை ஒழுங்கில் கொண்டு வர இக்கட்டுப்பாடுகள் அவசியம் என்பதாலும், அவர்களின் பொருட்டு முன்னுதாரணமாக ஆசாரங்களை அநுஷ்டித்துக் காட்டுபவரே ஆசாரியர் என்பதாலும், தமக்கு அடுத்த பீடாதிபதிகளை நியமித்து, அவர் சகல சாஸ்திர விதிகளையும் வழுவறத் தழுவச் செய்தார். அந்த வாரிசுக்கு அவர் அத்வைதாத்மப் பிரகாசர் என்று பெயர் சூட்டியதிலும் நிரம்பப் பொருள் இருந்தது. நாம கீர்த்தனம், பக்தி இவற்றால் தாம் அத்வைதத்தைச் சிறிது கூட ஆட்சேபிக்கவில்லை என்று காட்டவே இப்படி நாமகரணம் செய்தார் எனலாம்.

மட நிருவாகம், பூஜை முதலிய யாவும் புதியவரின் பொறுப்பே ஆயின. இப்படிப் பீடாதிபத்தியத்தையும் ஒரு வாரிசிடம் துறந்து விடும் பரம பக்குவம் காமகோடிக்குக் கைவந்த பிதுரார்ஜிதம் போலும்!

@Page 135

நமது மடத்திலேயே 'விருந்தாளி'யாக இருந்தார் போதேந்திராள்.

பீடாதிபதிகளாயிருக்கையில் அவர் பிறர் காண உண்டதில்லை. பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களைப் புசித்ததுமில்லை. இப்போது திறந்த வானம் போலாகி விட்டதால் அனைவரோடும் அமர்ந்து பிக்ஷை கொண்டார் ; ருசிக்கும் உணவு, ருசிக்காத உணவு என்ற பேதமின்றி அனைத்தும் ராமருசியாக விட்டதால் பட்சண பணியாரங்களையும் அவராக வேண்டாம் என்பதில்லை.

இன்று, பெரம்பூர் முகாமில் அனைவரோடும் பிக்ஷைக்கு அமர்ந்திருக்கிறார். பட்சணங்கள் அவர் இலையில் பரிமாறப்படுகின்றன. பங்க்தி (பந்தி)யில் பிந்தி உட்கார்ந்திருந்த ஒரு ஐந்து வயதுப் பிள்ளை இதைப் பார்த்து அவசரப்படுகிறது. போதேந்திராளிடம் ஓடி வந்து கையை நீட்டுகிறது. விசித்திரமான உறுமல் சப்தத்தை எழுப்புகிறது.

'ஐயோ பாவம், ஊமைக் குழந்தை!' – பரிவே உருவாய் போதேந்திராள் பட்சணத்தை அள்ளி அதன் கையில் இட்டார்.

அது கன குஷியாக உண்டது.

"சரி, ராமப் பிரசாதம் உள்ளே போய் விட்டது. எங்கே, இப்போ ராம ராம சொல்லு" என்று தாயினும் சாலப்பரிந்து பாலனிடம் கூறினார்.

ஊமைப் பிள்ளை வெண்கல மணியாகக் கூறிற்று : கோஷமாயிற்று.

யதீச்வரர், "குழந்தே! சாயங்காலம் உன் மாதிரிப் பசங்கள் வருவா. அவாளுக்கெல்லாம் உன் கையால்

@Page 136

கல்கண்டு கொடுக்கணும். இப்போ நான் சொல்லித் தர பாட்டையும் அவாளுக்கு நீ கற்றுக் கொடுக்கணும்" என்று கூறி, குழந்தை ராகத்தில், குழந்தைத் தாளத்தில், குழந்தை பாவத்தில் குதூகலித்துப் பாடினார்.

"ராம நாமமே கல்கண்டு; அதன்
ரஸம் தெரியாதவன் கல்குண்டு!"

பாலனும் அதைப் பாடினான் அழகாக.

அவனது பெற்றோர், "பெரியவாள் கிருபை, பெரியவாள் கிருபை" என்று விம்மினர்.

"ராமன் கிருபை! மூகம் கரோதி வாசாலம்" (ஊமையையும் பெரும் பேச்சாளி ஆக்குகிறான்) என்றார் குரு.

பெரம்பூரில் ராமபக்த திலகனான ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தார். "அசாத்தியங்களைச் சாதித்தவன் மாருதிப் பிரபு. ஆனால் தன் செயலாவதேதும் இல்லை என்று அப்பனிடம் அடங்கிக் கிடந்தான்" என்று கண்ணீர் வடித்துக் கூறினார்.

"பெரியவாள் தம்மையே வர்ணித்துக் கொள்கிறார்" என்று மெய்யடியார் மெய்சிலிர்த்துக் கூறினர்.

பூவனூரில் முகாம்.

அங்கே ஒரு மரத்திலிருந்து கொண்டு பிரம்ம ராக்ஷசம் ஒன்று படுத்தும் பாட்டை ஊரார் போதேந்திரரிடம் முறையிட்டனர்.

பூவனூருக்கே ஒரு பெரிய பூப்போல் அகலமாகச் சிரித்து, அஞ்சாநெஞ்ச ஆஞ்ஜநேயர் போல மரத்தடிக்கு வந்தார் மகாபுருஷர்.

@Page 137

அன்னையினும் அன்பு கொட்டும் அவரது குரல் இன்று அண்டகடாகங்களைப் பிளப்பதுபோல் பயங்கரமாக ஓங்கி ஒலித்தது. புஷ்பம் வஜ்ராயுதமாகிவிட்டது!

பர்ஜனம் பவ பீதானாம் ஆர்ஜனம் குல ஸம்பதாம்|
தர்ஜனம் யம தூதானாம் ராம ராமேதி கர்ஜனம்||

(ராம ராம என்ற முழக்கம் ஸம்ஸார பயத்தை வறுத் தெரிப்பது ; நற்குலச் செல்வத்தை ஈட்டுவிப்பது ; யமதூதரை மிரட்டி விரட்டுவது.)

இடியாகக் கர்ஜித்தார் போதேந்திரர்.

மரக்கிளைகள் புயலில் அகப்பட்டது போல் ஊேறா ஊேறா என்று தலைவிரித்தாடின.

மரத்திலிருந்து குரல் வந்தது. "போகிறேன் ஸ்வாமீ, போகிறேன், பேய் ஜன்மா நீங்கிப் போகிறேன். தங்கள் குரல் என்னைத் தூக்கிவிட்டதில் ஸ்ரீராமலோகமான ஸாகேத மோக்ஷத்துக்குப் போகிறேன். நன்றி ஐயனே, நமஸ்காரம் துய்யனே!" என்றது ராக்ஷஸம்.

பக்தருக்கு அவர் அருள் கூர்ந்தது மட்டுமில்லை ; பிரம்ம ரக்ஷஸுக்கும் அருளிவிட்டார்!

மரத்தடியில் அஸஉறாய ஸஉறாயனான அஞ்சனைச் செல்வனின் திருஉருவைப் பிரதிஷ்டித்தார். அஞ்ஜன வண்ணனின் நாம மகிமை வெளிப்படும் இடத்திலெல்லாம் அவனது அருமந்த அநுமந்தனுக்கு ஆலயம் இருக்கத்தானே வேண்டும் ?

சக வருஷம் 1606–ல் (அதாவது, கி.பி.1685–ல்) திருவானைக்கா ஆலயத்தினர் போதேந்திராளிடம் வந்தனர். அகிலாண்டேச்வரியின் ஸ்ரீ சக்ர தாடங்கங்கள் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக விஞ்ஞாபித்தனர்.

ஆதியில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் பிரதிஷ்டை செய்த இத்தாடங்கங்கள் கால வெள்ளத்தில் பழுதுறும் போதெல்லாம் அவற்றைப் புதுப்பித்து அம்பாளுக்கு மீண்டும் அணிவிக்கும் பொறுப்பு காமகோடி பீடாதி பதியருக்கே உரியது. அதனால்தான் போதேந்திரர்களிடம் விஞ்ஞாபித்தனர்.

சிரித்துக் கொண்டார் செம்மல். "ஸ்வாமிகளிடம் சொல்லுங்கள்!" என்றார்.

"ஸ்வாமிகள் வேறு யார் ?" என ஆலயத்தினர் குழம்பினர்.

"நான் பேருக்குத்தான் ஸ்வாமிகள். இளைய ஸ்வாமிகள் என்று நீங்கள் சொல்கிற அத்வைதாத்ம ப்ரகாசர்தான் நிஜ ஸ்வாமிகள், பீடாதிபதிகள் எல்லாம்" என்று இதயத்தின் அடியிலிருந்து கூறினார் போதேந்திரர்.

சரித்திரம் திரும்புகிறது என்பது உண்மைதான். ஆத்மபோதர் இவரை நடத்தினாற் போலவே இவர் தம் வாரிசை உயர்த்தி வைத்தார்.

வாரிசும் இவர் போலவே நடந்து கொண்டது! "அப்படி என்னைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. பெரியவாள் அம்பாளுக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்வதைக் காணும் தரிசன பாக்கியத்தை அடியேனுக்கு அளிக்க வேணும்" என்று அத்வைதாத்மர் குருவிடம் உருகிப் பிரார்த்தித்தார்.

"ஸ்வாமிகள் ஆக்ஞைப்படியே செய்கிறேன்" என்று மீளவும் நீளச் சிரித்தார் போதேந்திரர்.

அகிலாண்டேச்வரியின் தாடங்கப் பிரதிஷ்டை மஹோத்ஸவமாக நிறைவேறியது. முன்பு ராமலிங்க அபிஷேகத்தைக் கண்டிருந்த பழைய பக்தர் சிலர், "ராம நாமம் சொல்லி ராமாமிருதமாகி விட்ட பெரியவாள் அன்று ஈச்வரனுக்கு அபிஷேகம் செய்தார்! இன்று சகோதரிக்கு அலங்காரம் செய்கிறார்" என்று வியந்தனர்.

வழக்கத்தினும் கூடுதலான பாவன ஒளியுடன் திகழ்ந்த போதேந்திரர் அகிலாண்ட நாயகிக்கு நேரே ஆதிசங்கரர் ஸ்தாபித்த விக்நேச்வரரைக் கண்டாரோ இல்லையோ, ஒரு விநாடி மின்னல் வடிவமாகவே நின்றார். அவருள்ளும் ஒரு மின்னல் பாய்ந்து

கொடிவிட்டது.

மூன்றாவதாக ஒரு தேவ ரஊறஸ்யம் விண்டு வெளி வந்த வேகத்தில், சமுத்திரமாகக் கருணை பொங்கும் அவரது கண்களிலிருந்து முத்துக்கள் கொட்டலாயின.

சுதாரித்துக் கொண்டார். தமக்கே உரிய மதுரநகையை இதழில் நெளிய விட்டார். கண்ணீரில் மலர்ந்த கமலப் பூவாக இருந்தது அச்சிரிப்பு.

"என் காரியமெல்லாமே விசித்திரந்தானே ? அத்வைத பீடத்திலிருந்து நாமத்தைப் பரப்பியாச்சு! இப்போ இந்தப் பிள்ளையாரப்பன் சந்நிதியில் இன்னொரு விசித்ரம் பண்ணப்போறேன். எல்லாரும் இங்கே சுக்லாம்பரதரம் குட்டிக்கிறார்கள் என்றால், நான் இங்கேதான் ஸமாப்தி பண்ணபோறேன்."

இப்படிச் சொல்லிக் கொண்டே ஆழ்ந்த உணர்வோடு சுக்லாம்பரதரமும் குட்டிக்கொண்டார்! தள்ளாத வயதில், சரிந்த பெருமேனி குலுங்க, முழங்காலில் சிறாய்க்கிற மாதிரி முட்டிக் கால் தோப்புக் கரணம் போட்டார்.

சொன்ன வாக்குப்படி ஸமாப்தியும் செய்தேவிட்டார்! ஆம், பெயரளவுக்காவது மடத்தில் விருந்தாளி போலிருந்தவர், இன்று வைபவம் முடிந்ததும் ஆலயத்திலிருந்து ஸ்ரீமடத்து முகாமுக்குத் திரும்பவேயில்லை. பீடாதிபத்தியம் ஓர் இழை கூட மீதமின்றி அடியோடு கத்திர்த்து விட்டது.

இவர் செய்த தாடங்கப் பிரதிஷ்டை இளவர் அத்வைதாத்மரைப் பீடத்தில் நன்றாகப் பிரதிஷ்டை செய்துவிட்டது! அப்படியும் அவர் அதை ஒப்பாமல் இவர் காலடி பற்றியே பின் வந்து கொண்டிருந்தார்.

திருவிடைமருதூருக்குக் கிழக்கே இரண்டாவது கல்லில் பரம ஏகாந்தமான ஒரு கிராமம். காவிரி வீரசோழனாறாகப் பாயும் வளமிக்க கிராமம். நாயக மன்னர்களுக்க மதியமைச்சு ஓச்சிய ரிஷி துல்யரான கோவிந்த தீக்ஷிதரின் பெயரில் வழங்கும் 'கோவிந்தபுரம்' எனும் கிராமம். ராஜகாரியங்களை விலக்கி, ரிஷியின் காரியமற்ற 'ஞானபத வியோமநிலை'யை அநுபவிப்பதற்காக ஸ்ரீ தீக்ஷிதர் இங்கு அவ்வப்போது வந்து ஜப–த்யானங்கள் செய்வாராம்.

நாற்பத்தெட்டாண்டு பீடாதிபத்தியத்திலிருந்து விடுபட்டுவந்த போதேந்திராள் ஸ்ரீ மடத்தினின்று முற்றிலும் நீங்கி கோவிந்தபுரத்தை வந்தடைந்தார்.*

நெஞ்சிலே நிறைவு பூரித்தது. "கோவிந்த நாமம் – பகவத் பாதாளுக்குச் செல்லமான பெயர், காரியம்

---

*முதற்பதிப்பு வெளியாகி எட்டாண்டு பின்னர் 1984–ல் தான் நூலின் சூக்ஷ்ம 'இயக்குன'ரான ஸ்ரீ மஉறா பெரியவாள் இது குறித்துப் பேசியது. திருப்தி தெரிவித்த அவர், போதேந்திராளின் வாழ்க்கையில் ஸ்ரீமடத்தின் அதிபர்களுக்கெல்லாம் ஒரு பாடம் இருப்பதாகத் தமக்குப் படுகிறதென்று கூறினார். என்னவெனில் இறைவனின் நாமத்தை உபாஸிப்பதையே ஒரு மூச்சாக உபதேசித்தவர் போதேந்திரர். இது நிச்சயமாக ஆதி சங்கரர் புத்துயிரூட்டிய ஸநாதன தர்மத்துக்கு உகந்த பக்தியுபாஸனையில் ஒரு வகைதான். எனினுங்கூட, அத்வைதம், வைதிகம் தழுவிய ஆகமப் பத்ததிப்படியான பூஜை முதலான பக்தியுபாஸனை, தர்ம சாஸ்திர விதிகள் ஆகியனவே ஆசார்யாள் வகுத்த வழி எனக் கொண்டு ஆதி முதல் ஸ்ரீமடத்து அதிபர்கள் ஒழுகி வந்துள்ளபோது, நாமத்தின் மூலமே பக்தியுபாஸனை என்பதற்கு அதி முக்கியத்துவம் கொடுத்த தாம் அம் மடத்தில் ஆதிபத்தியம் செய்வது யுக்தமல்ல என ஒரு கட்டத்திற்குப் பிறகு ஸ்ரீ போதேந்திராள் கருதி மடத்திலிருந்து வெளியேறி நாம ஸித்தாந்தத்தைப் பிரசாரம் செய்யலானார். இதிலிருந்து ஸ்ரீமடத்தின் தலைவர்கள் அதன் ஆதிகால உத்தேசங்களை மாத்திரமே வெகு கவனமாகப் பின்பற்றி நடத்தித் தரவேண்டும் என்ற பாடம் கிடைக்கிறது என்றார். நமது நூல் மறுபதிப்பு வரும்போதோ, வேறு விதத்திலோ இவ்விஷயத்தை நான் தெரிவிக்கலாமென்றும் கூறினார். ஆணை பெற்றுப் பதின்மூன்றாண்டு பின்னரே, இதோ, அது நிறைவேற்றப்படுகிறது.

மடாதிபதியாக இருந்தமட்டும் விபூதியே பூசியிருக்கக் கூடிய போதேந்திரர் பாகவத மரபினருக்குரிய கோபி சந்தன ஊர்த்வ புண்டிரம் அணியத் தொடங்கியது அவர் மடத்திலிருந்து வெளியேறிய பின்பே இருக்கலாம் என்றும் ஸ்ரீ மஉறா பெரியவர் கூறினார்.



ஓய்ந்தபின் பகவத் பாதத்தில் தான் சாய்ந்து விழணும். பகவந் நாம போதம் பகவத் பாத போதமாக வேணும்" என்ற போதேந்திரர், "கோவிந்தா கோவிந்தா" என்றழைத்தார்.

அப்படி அழைத்தது வாரிசான அத்வைதாத்மரைத்தான். பகவத் பாத போதத்தில் சீடரும் கோவிந்த ஸ்வரூபமாகவே தெரிந்ததால் இப்படி அழைத்தார். இதனால் அத்வைதாத்மருக்கு "கோவிந்த ஸம்யமி" என்ற சிறப்புப் பெயரும் உண்டாயிற்று.

("ஸம்யமி" என்றால் சீரிய புலனடக்கம் பெற்ற துறவி.)

"அப்பனே கோவிந்தா! இனி இந்த இடத்திலேயே நான் இருந்துவிடப் போகிறேன். நீ போய் வா! இந்த ஊர் என்னை ஆட்கொண்டு விட்டது. ஆனால் நாடு நகரமெல்லாம் சென்று தர்மம் வளர்க்கும் பொறுப்பு, கடமை மடத்துக்கு உண்டு. எனவே நீ புறப்படு" என்றார்.

கிடைக்கவொண்ணா குருநாதரை விட்டு மனமின்றிப் புறப்பட்டார் இளவல். மகான்கள் ஒட்ட வேண்டியபோது ஒட்டுவதையும், வெட்ட வேண்டியபோது வெட்டுவதையும் எவரே தடுக்க முடியும்?

கோவிந்தபுரத்திலேயே குடிகொண்டு விட்டார் போதேந்திரர்.

இவர் உலகைவிட்டாலும் உலகம் இவரை விடுமா? இவர் மடாதிபதியாக இருந்த காலத்தை விட இப்போது தான் அதிக மக்கள் இவரது இடத்தைத் தேடி வந்து மொய்த்தனர்.

போதேந்திராள் சிரித்துக் கொண்டார். "அம்மா, நீ சக்கையாகப் பிழிகிற மட்டும் பிழிந்து தானே தீர்ப்பாய்?

@Page 143

நான் ஓய்வு என்று திட்டம் போட்டால் நீ விடுவாயா? இந்தப் பதல் மூலம் நீ செய்கிற கிருபைக்கு எப்போது ஓய்வு தருகிறாயோ, அப்போது தானே நான் ஓய்வடைய முடியும்? நன்றாகப் பிழி. பிழிகிற போதே என்னை அன்புக் கரும்பாக்கி நான் நாமச் சாற்றைப் பொழிய அருள் செய்" என்று வேண்டிக் கொண்டார்.

வந்தவருக்கெல்லாம் மந்தமாருதமாயிருந்து ஸ்ரீராம நாமத்தை உபதேசித்தார். பட்டுச் சூத்திரம் (கயிறு) அளித்தார்.

சூத்திரம், ஜபத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்வதற்குத்தான். விரல் ரேகையைச் சுற்றி எண்ணிக்கொள்ளும் முறையில் நூறு நாமாக்களை எண்ணியவுடன் பட்டுக் கயிற்றில் உள்ள ஒரு மணியைத் தள்ள வேண்டும். இப்படி மணிகளைத் தள்ளி ஆயிரம் நாமா கணக்கிட்டபின் சூத்திரத்தால் கட்டை விரலில் ஒரு சுற்றுச் சுற்றிக் கொள்ள வேண்டும். எத்தனைச் சுற்று ஆயிற்றோ அத்தனை ஆயிர நாமம் என்று எளிதில் கணக்குப் போட்டுக் கொள்ளலாம்.

"எண்ணிக்கைக்கு அவசியமின்றி எண்ணமெல்லாமே நாமாவாகி, நாள் முழுதும், எந்தக் காரியம் நடக்கும் போதும், தூங்கும் போதுங்கூட, உள்ளே நாம ஜபம் நடந்து கொண்டேயிருக்க வேண்டும். அப்பியாசத்தால் இந்த அனவரத ஜபம் கைகூடும். அப்போது மூச்சுக்கு* ஐந்து நாமா வீதம், ஒரு தினம் விடுகிற 21,600 மூச்சுக்கு லக்ஷத்து எட்டாயிரம் நாமாவாகும். அதாவது ஆயிடம் மடங்கு நூற்றெட்டு! அதாவது, நாம புஷ்பத்தால் ஆயிரம் அஷ்டோத்தர சத அர்ச்சனை செய்ததாகும்" என்பார் பேச்சு, மூச்சு, சொல், செயல், சிந்தனை யாவும் ராமனுக்கே ஆக்கிய போதேந்திரர்.

---

*ஒரு மூச்சுக் காலம் என்பது நாலு ஸெகன்ட்.

@Page 144

பிரஜோத்பத்தி ஆண்டு பிறந்தது.

வெறுமே பிறப்பது 'ஜா'; விசேஷமாகப் பிறப்பது 'பிரஜா'. வெறும் மனிதராகப் பிறந்த பலருக்கு பகவன் நாமம் தந்துஅவர்களை விசேஷமாக உற்பத்தி செய்து விட்டார் போதேந்திரர் என்று பராசக்தி திருப்தி கொண்டான் போலும்!

புரட்டாசி பிறந்தது. அதை 'பாத்ர பதம்' என்பர். "பத்ரமான, மங்களமான பரம பதத்தைத் தருவது பாத்ரபதம்" என்று புன்னகைத்த போதேந்திரர், "பரமபதம் உச்சி மேட்டிலா இருக்கு ? பகவத் பாதம் தான் பரமபதம். 'பாதோஸ்ய விச்வாபூதானி' – அந்தப் பாதாம்தான் இந்த உலகம் முழுதும். ஆகவே, விண்ணுக்குப் போக வேண்டாம் விஷ்ணுவுக்காக ; மண்ணுக்குள்ளேதான் போகவேண்டும்" என்று சொப்பனக் குரலில் சொக்கிச் சொன்னார்.

பரம பக்தர் ஒருவர் பதைத்து, "பெரியவாள் விஷ்ணுவுக்காக எங்குமே போக வேண்டாமே! அவாளே ராம ஸ்வரூபமாச்சே, பிரமே ஸ்வரூபமாச்சே!" என்றார்.

பெரியவாள் குழந்தை போல், "உனக்குத் தெரியுமோ, ராமனிலேயே இரண்டு ராமர்கள் உண்டு என்று ?" என்றார். "ஒருத்தன் ரூப ராமன்; மற்றவன் நாம ராமன். நாம ராமன் தான் முழுக்கப் பிரேமஸ்வரூபன். ரூப ராமனுக்கு அப்பப்போ ருத்ரகோபம் வந்து விடும். ஆனால், எங்கம்மா, ஸீதம்மா, அவள் ரூபம் நாமம் இரண்டிலேயும் அன்பு மயந்தான். என் மாதிரி அவளும் ராமனைக் கல்யாணம் பண்ணிண்டா. ஒரு சமயம் அவன் கோப ஸ்வரூபம் எடுத்துண்டு அவளைப் படாத பாடு படுத்தினான். அம்மா பொறுத்துக் கொண்டான். மறுபடியும் படுத்தினான். 'சரி இன்னொரு ராமன் எப்பவும்

@Page 145

பிரேமையாக இருக்கானே, அவனிடம் போகிறேன்' என்று ஸீதம்மா போய்விட்டான். எங்கே? ஆகாசத்துக்கா? இல்லை. மண்ணுக்குள்ளே தான் போனா. மண்ணால ஆன உயிர் தான் மன்னுயிர். மன்னுயிரின் கஷ்டத்தையெல்லாம் ஸீதம்மா வாங்கிண்டா, தாங்கிண்டா. ஆதியில் மண்ணிலிருந்துதான் வந்தா; அந்தத்தில் மண்ணுக்குள்ளேயே போயிட்டா.... உனக்குத் தெரியுமே, சந்நியாசிகளை தகனம் பண்ணமாட்டா, மண்ணுக்குள்ளேதான் புதைச்சு, மண்ணோடு மண்ணாக்கி விடுவா. ராமனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாத சந்நியாசியானால் பிராணன் போன பிறகு மண்ணில் புதைக்கணும். ராமனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் பிராணனோடேயே மண்ணுக்குள் போயிடணும்; லோகத்தில் பாபத்தில் மாட்டிக் கொண்டு தவிக்கிற ஜனங்களின் கஷ்டத்தை எல்லாம் முடிந்த மட்டும் வாங்கிக் கொள்ளணும்."

மின்சாரம் பூமிக்குள் பாய்கிற பௌதிக விதிக்கு ஆத்மிகமாக இப்படியோர் இணை இருக்கிறதா?

"ராமன் ஞானி, ஞான நிலையிலே ஸரயு ஜலத்தோடு போயிட்டான். ஞானி, ஞானின்னு ஆதியிலே எனக்கு ஒரு பரம சிநேகிதன். அவன் கூட நர்மதையில் ஜலத்தோடு தான் போயிட்டான். நான்தான் அவனோட ம்ரத சரீரத்தை ஜலத்திலே இழுத்து விட்டேன். ஆனால் நான் அப்படி ஜில்னு இந்தக் காவேரியிலே போகமாட்டேன்."

கடலில் வீசும் நீண்ட நுரைக்கூட்டம்போல், தும்பை மாலைகள் போல் அவர் சிரித்துக் கொண்டே தான் பேசினார். ஆனால் பக்தர்களோ விசித்து விசித்து அழுதனர்.

@Page 146

அவர் கலகலவென்று நகைத்தார். "சந்நியாசிக்குத் தான் பெண்ணாசையும் மண்ணாசையும் ரொம்ப வேணும். பெண்ணாவே ஆகிவிடணும். மண்ணுக்குள்ளே புரளணும்."

இப்போதெல்லாம் போதேந்திராள் காலையில் வீரசோழனாற்றில் ஸ்நானம் செய்ததும் கரையில் ஒரு குழி பறிக்கிறார். அதற்குள் இறங்கி அமர்ந்து, முகம் நீங்கலாகத் தம்மை

மண்ணால் மூடிக் கொண்டு நாம ஜபத்தில் இறங்கிவிடுகிறார். நிச்சலன நிஷ்டை! லோக தாபம், பாபம் எல்லாம் மண் வழியே ஒரு கம்பியில்லாத தந்தி மூலம் அவரிடம் வருமோ! அதை நாம சக்தியால் நலிவிக்கிறாரோ? கருணையின் 'தொழில் நுணுக்கத்தை' எவரே கண்டுபிடிக்க இயலும்?

மண்ணைக் குழி தோண்டி அளைந்து கொண்டே ஏதேதோ குழறிக் குழறிப் போசுவார் பசுவந்நாம போதர். தம் இதயத்தில் அடைத்து வைத்திருந்த மூன்று தேவரஉறஸ்யங்களைத் தோண்டித்தான், அதில் கொஞ்சத்தை இப்படி வார்த்தைகளில் தூவினார்.

"காஞ்சி பிருத்வீ க்ஷேத்திரம். ஆசார்யாள் லோகமே பொய்னு மட்டுமா சொன்னார்? கடைசிலே லோகத்துக்குள்ளேயே முழுகி அதனோட சோகம் முழுதையும் எடுத்துக் கொண்டார். அதுக்காகத்தான் பிருத்வீ க்ஷேத்ரத்திலே விதேஉற முக்தி அடைஞ்சார். அந்த ஜீவ ஸமாதியிலிருந்து 'பேஷடாப் பயலே'ன்னு எனக்குள்ளே புகுந்துண்டு ஆசீர்வாதம் பண்ணினார். 'அம்மா இங்கே பிலத்திலே ஆகாசமா ஞானமயமா இருந்தாடா! ஞானம் பிடிக்கலை. கருணை தான் பிடிச்சுது. அதனாலே பிருத்வி, ஆமாம். மண் இல்லே, அந்த

@Page 147

மண்ணாலே, லிங்கம் பிடிச்சு அதைக் கட்டிண்டா, ஜீவராசிகளோட கஷ்டத்தையெல்லாம் தான் சேர்த்துக்கட்டி எடுத்துண்டா. நானும் இங்கே ஆகாசத்தோடே ஆகாசமாயிடணும்னுதான் வந்தேன். அம்மாதான், 'நான் பட்டதை நீயும் படுடா, அதுதான் பேரானந்தம். ஆகாசமாயிருந்தா எப்படி அடிபட்டுக்க முடியும்? பிரம்மானந்தத்தில் அடிபட்டுக்காமல் இருந்துண்டே லீலாலோகத்துக்காக அடியும் பட்டுக்கற ப்ரேமானந்தம் அப்பத்தானே தெரியும்? அடிபட்டுக்கிறதுக்காக மண்ணோட மண்ணாப் போ!ன்னா. பகவந்நாமா! 'அவ சொன்னதையே தான் உனக்கு ஒப்பிக்கிறேன்'னு ஆசார்யாள் சொன்னார்.

"இதுக்கு முன்னாடி மட்டும் ஆசார்யாளுக்கு இந்த மர்மம் தெரியாதா என்ன? அவரே தானே சிவ–சக்தி? என்னவோ நடுவிலே மறந்து போனாப் போலேயும் காமாக்ஷி ஞாபகப்படுத்தினாப் போலேயும் ஒரு விளையாட்டு! முன்னாடியே ஆசார்யாள் ராமேச்வரத்துக்கு வந்தாரே! அங்கேயும் ஒரு பிருத்வீ லிங்கத்தைப் பார்த்தாரே! அப்பவே புரிஞ்சுண்டுட்டார். சிவனேதான் ஸீதையாக வந்து மண்ணை லிங்கமாப் பிடிச்சா ; உடனே, அம்பாளான ஸ்ரீ ராமன் அதுக்குப் புரோக்ஷணம் பண்ணிப் பூஜை பண்ணினார். உலக துக்கத்தை எல்லாம் இரண்டு பேரும் பங்கு போட்டுண்டா,

இருந்தாலும் கையாலே பிசைஞ்சு, அமுக்கிப் பிடிச்சு வைச்சாளே அந்த ஸீதம்மாவுக்குத் தான் அதிகப்படி பங்கு. மர்மத்தைத் தெரிஞ்சிண்ட ஆசார்யாள் ராமேச்வரத்தையே தன் தக்ஷிணாம்நாய பீடத்துக்கு க்ஷேத்ரமாக வெச்சார். சிருங்ககிரியில் மடம் ; அதுக்கு ராமேச்வரம் க்ஷேத்ரம். மூல ஆம்நாயத்துக்கு மடம், க்ஷேத்ரம் இரண்டும் காமேச்வரமான காஞ்சி.

@Page 148

"காமேச்வரத்துக்கும் ராமேச்வரத்துக்கும் நடுவிலே, உபய காவேரிக்கு நடுவிலே ஜம்புகேச்வரம். காஞ்சி மாதிரியே தான் இந்த ஆணைக்காவிலும் அம்பாள் லோகத்தாலே தாங்க முடியாத ஸாந்நித்யத்தோடு இருந்தா. லோகத்தின் கஷ்டத்தையெல்லாம் தாங்கிக்கத் துடிக்கிறவள் இப்படி இருக்காளேன்னு தான் இரண்டு இடத்திலேயும் அவளோட அமித சக்தியை ஸ்ரீ சக்ரத்தில் சமனம் பண்ணினார் நம் ஆசார்யாள். இங்கே ஜம்புகேச்வரத்தில் அவளோட தாடங்கத்திலேயே இந்தப் பிரசமன ஸ்ரீ சக்ரங்களைப் பிரதிஷ்டை பண்ணி அவ காதிலேயே போட்டுட்டார். அத்தனை குழந்தைகளின் புலம்பலையும் கேட்டுக்கிறது அவ காதுதானே ? அதனாலே இப்படி! அதுவும் போதவில்லை. மண் வந்தாகணும், மண். 'ஜகத் மித்யா'ன்னு ஞானத்திலே சொன்னாலும் ஜகத்தின் கஷ்டம் ஸத்யம்னு அதை வாகிக்கிற கருணாஸித்தியிலேயே இருக்கணும்னா மண் வரத்தான் வேணும். அதனாலே தான் அகிலாண்டேச்வரிக்கு நேர் எதிரே பிள்ளையாரைப் பிரதிஷ்டை பண்ணினார். பிள்ளையைப் பார்க்கிற பார்வையிலே அம்பா உலகக் கஷ்டத்தை உறிஞ்சி எடுத்துப்பா. ஏன் தெரியுமா ? பிள்ளையார் தான் மூலாதாரம், பிருத்வீ தத்வம் ; மண்ணு! அவர் எதிரே முட்டிக்கால் தோப்புக்கரணம் போட்டு பூமியோடு முட்டிக்கிறது தான் பெரிய ஸித்தி. ஞானத்திலே அடிபட்டுக்காமல் இருந்தால் போறாது. பிள்ளையார் முன்னாடி செய்கிற மாதிரி நன்னா குட்டுப் படணும், முட்டிக்கணும்" – அன்று ஆனைக்காவில் நடந்தது போலவே இன்றும் போதேந்திரரின் சமுத்திர நயனம் முத்துக்களைக் கொட்டிற்று.

@Page 149

"பிரஸன்ன வதனர், ஸுமுகர், ஆனந்த புவனநாதர்'னு பிள்ளையார் வெளியில் இத்தனை பேரின்பமாத் தெரியறதுக்குக் காரணம், உள்ளே அவர் விச்வ வேதனையையெல்லாம் வாங்கித் தொப்பையாகச் சேமித்து வெச்சுக்கிறது தான்."

தொப்பையும் தொந்தியுமாக ஆனந்த ரூபமாகவே உலவி வந்தவர் தான் நம்

பேதேந்திராளும்!

"எல்லாத்துக்கும் ஆரம்பம் பிள்ளையார்! ஆனால் முடியறச்சேயும் பிருத்வீதத்வமான அவர் தான்! ஸ்ரீ வித்யா மந்திரத்தின் மூணு கூடத்தில் ஒவ்வொண்ணும் முடியறச்சே'ல' தான் வரும். 'ல' தான் பிருத்வீ.

"முதலில் வெறும் மண்ணாத்தான் இருக்கோம் – 'நான், நான்'னு சரீரத்தையே கட்டிண்டு அழறோம். இந்த மண்பாண்ட நினைப்பை விடறதுக்காக அப்போ லோகத்தையே விட்டுட்டு ஏகாந்தமாப் போக வேண்டியிருக்கு. அப்புறம் ஸாதனையெல்லாம் பண்ணி ஏகமாயிருக்கிறதை அநுபவிச்ச பிறகு. 'இந்த ஞான பூர்ணம் போறாது, கருணா பூர்ணம் வேணும்'னு தோணறது. 'நான்' போயிட்ட இப்போ பிறத்தியாருக்காக லோகத்துக்குள்ளே முழுகணும் ; மண்ணுக்குள்ளே முழுகணும்.

"இது கோவிந்தபுரமில்லே ? 'கோவிந்தன்'ன்னாலே பூமியிலே முழுகினவன்னு ஒரு அர்த்தம். பாப பாரத்துனாலே மகா துக்கப்பட்ட பூமிதான் கோமாதாவாகப் போய் பகவானைப் பிரார்த்திச்சு அவனைக் கிருஷ்ணனாகப் பிறக்க வெச்சது. வெளியிலே சந்தோஷமாப் பால் குடிக்கிற மாதிரி காட்டின கிருஷ்ணன், வாஸ்தவத்திலே பூமியோட கஷ்டத்தையெல்லாம் தான் உறிஞ்சிக் குடிச்சான். கோவிந்தன்னு பேர் வந்தது தான்

@Page 150

அவனுக்குப் பட்டாபிஷேகம். கோவிந்தபுரத்தில் தான் எனக்கு பட்டாபிஷேகம்" என்று பெரிதாகச் சிரித்தார்.

பரம ஆனந்தமும் பரம சோகமும் ஸங்கமிக்கும் ஓர் அற்புத ஸமாதி நிலையில் மண்குழிக்குள் தினமும் காலையிலிருந்து மாலை வரை புதைந்து கிடந்தார் போதேந்திரர்.

பகல் முழுவதும் பெய்யும் மழை, காயும் வெயில் யாவும், அவர் தலையில் தான்.

மாலையில் பஉறிர்முகமாவார். அச்சமயம் ஆற்றங்கரையில் சிறார் விளையாடுவர். அவர்கள் மகிழும் விதம் ராம நாமாவையே விநோத சப்த ஜாலங்களாக எழுப்பி அருகழைப்பார். "செல்வங்களா! உதவாக்கரைக் கிழவன் குழியில் விந்துட்டேன். கொஞ்சம் கொஞ்சமா என்னை வெளியில் இழுத்துப் போடுங்களேன். பழம், கிழம் எல்லாம் தரேன். நானேதான் கிழமாச்சே, பழம் மட்டும் தரேன்" என்பார்.

பிள்ளைகள் அவரைப் பிய்த்துப் பிடுங்கி வெளியே கொண்டு வருவார்கள். அவர், பக்தர் சமர்ப்பித்த கனிகளை "இந்தா கோவிந்தா, இந்தா கோவிந்தா" என்று ஒவ்வொரு பாலனுக்கும் கொடுத்தும், கோதும் கொட்டையும் இல்லாத அமுதச் சுவைகளான நாமாவளிகளைச் சொல்லித் தருவார்.

குழந்தைகளும், குழந்தைகளைவிட நிஷ்கபடமான கிழக் குழந்தையும் கானம் செய்யும் இனிமையைக் காவேரியும் அலையடக்கிக் கேட்டுக் குளிருவாள்.

அன்று புரட்டாசிப் பூர்ணிமையன்று காலையும் குழி பறித்துக் கொண்டார்.



மண்ணைக் கைகளால் அளைந்துகொண்டே, "காமகோடியம்பாள் மண்ணைப் பிசைஞ்சு" தான் காஞ்சியில் லிங்கம் வெச்சாள். சேதுவில் ராமலிங்கம் மண்தான். சிவன் மண். சிவன் அன்பு. காமகோடியம்பா ராமனாக வந்தபோது, சிவம் ஸீதையாக வந்தது. ஸீதம்மா மண்ணிலேயே போயிட்டா" என்று கண்டம் கரையைக் கூறினார்.

வழக்கம் போல் குழிக்குள் இறங்கினார்.

ஆனால், மாலை, வழக்கம் போல் சப்த ஜாலம் எழுப்பவில்லை.

சிறுவர்கள் அருகே வந்து குனிந்து பார்த்தார்கள்.

அசைவேயில்லை.

பெரியவர்களிடம் போய் விஷயத்தைச் சொன்னார்கள். அவர்கள் துடித்தோடி வந்து பார்த்தார்கள்.

பூர்ணிமை சந்திரன் உதித்தான்.

ராமசந்திரனின் நாம நிலவை தண்ணெனப் பொழிந்து ஜீவதாபம் தீர்த்து வந்த திருமுக சந்திரனோ மோனத்தில் அஸ்தமித்து விட்டது! கோடி கோடி நாமம் சொன்ன நாவுக்குப் பராசக்தி ஓய்வு தந்து விட்டான்!

காவேரி கண்ணீரில் குளிர்ந்து கொண்டு ஓடினாள்!

வீரசோழக் காவிரியில் ஒருமுறை பெருவெள்ளம் வந்து வடிந்தது. போதேந்திராளின் சமாதி அடையாளம் தெரியாதபடி மண் மூடிப்போயிற்று. குரு சிஷ்ய ஒற்றுமை போலும், ஆத்ம போதரின் சமாதிக்கும் இவ்விதமே ஏற்பட்டதல்லவா ?

பகவந் நாமங்கள் என்ற மூலமூர்த்திகளுக்குப் பிற்காலத்தில் கருவறை, பிராகாரம், மகாமண்டபம்,

@Page 152

அர்த்த மண்டபம், கோபுரம் யாவும் எழுப்பி, அதை பஜனை பத்ததி என்ற பெருங்கோயிலாக்கியவர் "மருதாநல்லூர் பெரியவாள்" எனப்படும் ஸத்குரு வேங்கடராம தேசிகர். அவருக்கு போதேந்திராளின் சமாதியைக் கண்டுபிடித்தேயாக வேண்டும் என்ற தவவேட்கை பிறந்தது. கோவிந்தபுரம் நதிப்படுகை முழுதிலும் கொப்புளிக்கும் வெயிலில் அங்கப் பிரதிக்ஷிணம் செய்தார்.

ஓரிடத்தே பூமிக்கடியிலிருந்து, ஆகா, 'நாதம் தானது நாரதன் வீணையோ ? நம்பிரான் கண்ணன் வேய்ங்குழல் ஓசையோ ? "ராம ராம ராம ராம" என்ற திவ்ய சப்தம் மண்ணுள்ளிருந்து பண் கூட்டியது. உயிர் முழுதும் விம்மி விம்மிப் பூரித்து அதிர்ந்து ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு நாடியிலும், ஒவ்வொரு ரத்தக் குழாயிலும் வாழ்வு முழுதும் நாமம் பரவியிருந்த ஒரு ராமரஸ பாண்டமான சரீரத்திலிருந்து தான் இப்படிப்பட்ட திவ்ய நாதம் வரமுடியும்.

"இதுவே போதேந்திராளின் ஸமாதி ஸ்தானம்" எனத் தீரத் தெளிந்து அங்கு ஆலயம் எழுப்பினார் வேங்கடராமர்.

அத்வைதிகள் லோகமே மாயை என்றாலும் கூட, அடுத்தடுத்து வந்த இரு அத்வைத ஆசாரியர்களின் சரீரம் போன பின்பும் கூட அவர்கள் மூலம் மண்ணுள்ளிருந்து 'ஸதாசிவோம்', 'ராம ராம' என்ற நாமங்களை எழுப்பி லோகாநுக்கிரகம் செய்கிறாள் மகாமாயை!

வேங்கடராமருக்கு மற்றொரு பரிசும் கிடைத்தது. ஆற்றில் ஊறியும், மண்ணில் புதைந்துங்கூட மட்காத 'நாம கௌமுதி' மூலச் சுவடி (லக்ஷ்மீகாந்தர் கொடுத்த 'கன்யாதானம்' என்பதால் போதேந்திரத் துறவி இறுதி

@Page 153

வரை காத்துவந்த 'தர்மபத்தினி'யான சுவடி) வேங்கடராமருக்கு அகப்பட்டது. மருதாநல்லூர் பஜனை மடத்தில் அதை, சிக்கியரின் 'கிரந்த ஸாஉறிப்' போல, தெய்வத்தின் ஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்தார்.

இன்றைக்கும் கலியின் ஆட்ட பாட்டங்கள் அண்டாமல் அமைதி மண்டி நிற்கிறது கோவிந்தபுர ஸமாதிக் கோவில். அங்கு கட்டுக் கட்டாக நோட்டுப் புத்தகங்களைப் பார்க்கிறோம். அத்தனையும் பிரணவ துல்லியமான தாரக நாமம், ஸ்ரீராம் நாமம் எழுதப்பட்டவை தாம்.

கோடி கோடியாக இப்படி இங்கு நாமங்களைக் குவிப்பவர், வேறு யாராக இருக்கும் ? நம் காமகோடிக் கருணைமுனிவர்தான். வெள்ளிக்காசும் தங்கக் காசும் வழங்கிப் பல்லாயிரவரைப் பல கோடி நாமம் எழுதச் செய்யும் அருளாளர் அந்த நாமங்களை ஸ்ரீ பகவத் நாம போதேந்திரர்களின் ஜீவ ஸமாதிக்கே அனுப்பி வைக்கிறார்.

ஜீவ ஸமாதி தான்! எந்த ஸ்ரீ ராம நாமம் இந்த பரத கண்ட வாசிகளின் நாவில் அவர்கள் அறிந்தும் அறியாமலும் புகாந்தரமாகப் புரண்டு வந்திருக்கிறதோ, எந்த ஸ்ரீ ராமநாமம் பிரபஞ்சம் உள்ளளவும் நம் மக்கள் நாவில் மலர்ந்து கொண்டேயிருக்குமோ, அந்த நாமம் இன்றும் நள்ளிரவுகளில் போதேந்திரர் ஸமாதியிலிருந்து ஒலிப்பதைப் பக்குவ ஜீவர்கள் கேட்டுத் தன்மயமாகிறார்கள்.

ஆத்ம சுருதியின் அமைதி ரீங்காரத்துடன், அன்பு லயத்தின் ஆனந்த தாளத்துடன் ராம நாமத்தை இன்றும் அகவுகிறார் போதேந்திரப் பிரபு.

ஸ்ரீ ராம ஜயராம ஜயராம!